# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு VIII

பகுதி 2

Kerala Reader - Tamil (AT)
Standard VIII
Part - 2

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2025

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிச மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

**தமிழ்**

**8**

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2025
Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது ஆன்றோர் வாக்கு. எழுத்து என்பது மொழியையே குறிக்கும். பிற உயிரினங்களிடமிருந்து மனித இனத்தை வேறுபடுத்துவது மொழியே. மொழி இல்லையேல் சிந்தனை இல்லை; சிந்தனை இல்லையேல் மனிதனும் விலங்கும் ஒன்றுதான். உலகில் ஆயிரக்கணக்கான மொழிகள் வழக்கிலிருந்தன. காலந்தோறும் சில மொழிகள் வழக்கொழிந்து வருகின்றன. ஒரு மொழியின் அழிவு ஓர் இனத்தின் அழிவுக்கு வழிவகுத்துவிடும் என்பார்கள். எனவே எம் மொழியாயினும் அம்மொழியை வழங்குவோர் அதைப் பாதுகாக்க வேண்டும். தமிழ்மொழி தனித்துவம் மிக்கது. கால வெள்ளத்தில் கரைந்து போகாமல் பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய் வளமை குன்றாது வாழ்ந்தும் வளர்ந்தும் வரும் மொழி தமிழ் மொழி என்பது பெருமைக்குரியது.

உயர்நிலை வகுப்பை எட்டும் எட்டாவது வகுப்பு மாணவர்கள் மொழியின் அமைப்பையும் அடிப்படைக் கூறுகளையும் அறிந்திருப்பர். அவர்களின் மொழித்திறனை மேம்படுத்துவதும் மொழி ஆர்வத்தை ஊக்குவிப்பதுமாக மொழிக்கல்வி அமையவேண்டும். மொழித்திறனை அடைவதோடு நின்று விடாமல், அம் மொழியின் வாயிலாக மாணவர்களின் படைப்புத் திறனை வெளிக்கொணர்வதும் மொழிக் கல்வியின் நோக்கமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக மொழிக் கல்விக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டப் பாடப்பகுதிகள் மாணவர்களின் சமூக ஈடுபாட்டிற்குத் தூண்டுகோலாகவும் அமையவேண்டும். இவற்றையெல்லாம் உள்வாங்கிக் கொண்டு இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது. பாடங்களைக் கசடறக் கற்றும், செயல்பாடுகளைச் செவ்வனே செய்தும் மொழிக் கல்வியின் நோக்கங்களை நிறைவேற்றுங்கள்.

வாழ்த்துகள்.

**முனைவர் ஜெயப்பிரகாஷ், ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil - VIII - AT (Part 2)

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Santhi, P.**
Professor, Dept. of Tamil, University College, Thiruvananthapuram.

### Experts

**Dr. N. Ayyappan**
Associate Professor, S.T. Hindu College, Nagercoil.

**Dr. Benedy, K.**
Asst. Prof., Tamil, Govt. Arts College, Thiruvananthapuram.

**Dr. D. Devadas**
Rtd. Professor, Scott Christian College, Nagercoil.

**Dr. Rajashekaran, L.**
Asst. Prof., Department of Folkloristics and Tribal Studies,
Central University of Karnataka.

### Members

**Archana, M.,** HST, CPMGHSS Peermade, Idukki.

**Mercy Premalatha, R.,** HST (Rtd.), LMS Tamil HS, Chervarakkonam, Parassala.

**Monikandan, T.,** Principal (Rtd), CPMCHSS, Peermade, Idukki.

**Velkuthalam, P.,** HST, GHSS, Chinnakanal, Idukki.

**Vijayakumar, K.**, HST, GCHS, Attakulangara, Thiruvananthapuram.

**Vijila Rani, M.**, HST, GTV & HSS, Chalai, Thiruvananthapuram.

**Anandu Rajin,** Artist, College of Fine Arts, Thiruvananthapuram.

**Shobin, S.S.,** Artist, College of Fine Arts, Thiruvananthapuram.

### Academic Co-Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
**Assistant Professor (Tamil), SCERT.**

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அலகு 4 | அமுத ஊற்று | 87 |
| | யாழினிது | 88 - 95 |
| | சிப்பிக்குள் முத்து | 96 - 105 |
| | முதுசொல் | 106 - 110 |
| அலகு 5 | சங்கே முழங்கு | 111 |
| | இல்லாமை இல்லாகி | 112 - 118 |
| | மண்ணின் மைந்தர்கள் | 119 - 127 |
| | தேன்மொழி | 128 - 134 |
| அலகு 6 | வானமே எல்லை | 135 |
| | கார்மேகம் | 136 - 144 |
| | பருவச் சுழற்சி | 145 - 151 |
| | அமைதி கொள் | 152 - 156 |
| | சொல்லகராதி | 157 |

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

அலகு 4

# அமுத ஊற்று



மனதில் தோன்றிய எண்ணங்களையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்தும் காலக்கண்ணாடி கலைகளாகும். விழாக்காலங்களில் மக்களின் மகிழ்ச்சிக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் ஏற்படுத்தப்பட்ட கலைகள் அக்கால மக்களின் அறிவையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தின. தமிழர்களின் இசைக் கலை, நாட்டார் கலை, பண்பாட்டை உணர்த்தும் பழமொழிகள் ஆகியன குறித்து மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் இவ்வலகு அமைக்கப்பட்டுள்ளது.

# யாழினிது



## ஒருநாள் போதுமா? இன்றொரு நாள் போதுமா?

ஒரு நாள் போதுமா இன்றொரு நாள் போதுமா?
நான் பாட இன்றொரு நாள் போதுமா?
நாதமா கீதமா – அதை
நான் பாட இன்றொரு நாள் போதுமா?
புதுநாதமா சங்கீதமா – அதை
நான் பாட இன்றொரு நாள் போதுமா?

ராகமா சுகராகமா கானமா தேவகானமா?
ராகமா சுகராகமா கானமா தேவகானமா? – என்
கலைக்கிந்தத் திருநாடு சமமாகுமா? – என்
கலைக்கிந்தத் திருநாடு சமமாகுமா?
நாதமா கீதமா அதை
நான் பாட இன்றொரு நாள் போதுமா?

குழலென்றும் யாழென்றும் சிலர் கூறுவார் – என்
குரல் கேட்ட பின்னாலே அவர் மாறுவார்
அழியாத கலையென்று எனைப் பாடுவார் ஆ..
அறியாமல் எதிர்ப்போர்கள் எழுந்தோடுவார் – எனை

அறியாமல் எதிர்ப்போர்கள் எழுந்தோடுவார்
இசை கேட்க எழுந்தோடி வருவாரன்றோ?
எழுந்தோடி வருவாரன்றோ?
எழுந்தோடி தோடி..
இசை கேட்க எழுந்தோடி வருவாரன்றோ?

எனக்கிணையாக தர்பாரில் எவரும் உண்டோ?
தர்பாரில் எவரும் உண்டோ தர்பாரில்...
எனக்கிணையாக தர்பாரில் எவரும் உண்டோ?

கலையாத மோகனச் சுவை நானன்றோ?
மோகனச் சுவை நானன்றோ? மோகனம் ஆ...
கலையாத மோகனச் சுவை நானன்றோ?

– கவிஞர் கண்ணதாசன்

**ஆசிரியர் குறிப்பு :** முத்தையா என்ற இயற்பெயருடைய கவிஞர் கண்ணதாசன் சிறந்த கவிஞர், திரையிசைப் பாடலாசிரியர். சண்ட மாருதம், திருமகள், திரை ஒலி, தென்றல், முல்லை, கண்ணதாசன் ஆகிய இதழ்களின் ஆசிரியர். தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தவர். அர்த்தமுள்ள இந்து மதம், இயேசு காவியம், ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி முதலியவை குறிப்பிடத்தகுந்த படைப்புகள். சேரமான் காதலி என்னும் வரலாற்றுப் புதினத்திற்குச் சாகித்ய அகாதமி விருதைப் பெற்றுள்ளார்.

**செயல்பாடுகள்**

- பாடலில் இடம் பெறும் தமிழிசைப் பெயர்களைக் கண்டறிந்து பட்டியலிடுங்கள்.
- உங்களுக்குப் பாடல் கேட்க பிடிக்குமல்லவா? இசை கேட்பதால் உங்களுக்கு எற்படும் மன உணர்வுகளை எழுதுங்கள்.
- பாடலின் வாயிலாகக் குறிப்பிடப்படும் இசையின் சிறப்புகளைக் குறிப்பாக எழுதுங்கள்.

## உதயணன் – யாழ்வித்தகன்

வத்தவ நாட்டு அரசன் சதானிகன் தன்னுடைய இராணி மிருகாபதியுடன் வாழ்ந்து கொண்டிருந்தான். அவர்களுக்கு ஓர் அருமையான ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு உதயணன் என்று பெயரிட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தனர். உதயணன் தன்னுடைய தாய் தந்தையருடன் அரண்மனையில் நெடுங்காலம் வளரவில்லை. அவன் தன்னுடைய தாய்ப் பாட்டனான சேடக முனிவரிடஞ் சென்று அவரிடம் வளர்ந்து வந்தான். சேடக முனிவர் விபுலகிரி மலைக்காட்டில் ஓர் ஆசிரமத்தில் இருந்தார். சேதி நாட்டின் அரசனாக வாழ்ந்திருந்த அவர் அரசாட்சியை வெறுத்துத் தன்னுடைய

மகனான விக்கிரமனுக்குப் பட்டங்கட்டித் தான் துறவு பூண்டு விபுலகிரிக் காட்டுக்குச் சென்று ஆசிரமம் அமைத்து வசித்து வந்தார். அவருடன் வேறு சில முனிவர்களும் தங்கித் தவஞ் செய்து வந்தார்கள். அவர்களில் ஒருவர் பிரமதத்தர் என்பவர்.

உதயணன் தன் பாட்டனாரான சேடக முனிவருடன் விபுலகிரிக் காட்டிலே இருந்தபோது அவனுக்கு அவர் வில்வித்தை, வாட்போர் முதலிய வித்தைகளைக் கற்பித்தார். இந்த வித்தைகளுடன் பாடல் கலையாகிய இசைக் கலையையும் கற்பித்துக் கொடுத்தார். பிறகு குழல் வாசிக்கவும் கற்பித்தார். உதயணன் இந்தக் கலைகளெல்லாங் கற்று அக்கலைகளில் வல்லவனானான். அந்த ஆசிரமத்தில் இருந்த பிரமதத்த முனிவர் உதயணனுக்குத் தன்னிடம் இருந்த கோடபதி என்னும் இசைக் கருவியை வாசிக்கக் கற்பித்துக் கொடுத்தார். அவனும் யாழ்வாசிப்பதில் வல்லவனானான். இவ்வாறு உதயணகுமரன் இசைக் கலைகளில் வல்லவனாக விளங்கினான். பிரமதத்தர் உதய குமாரனுக்கு யானையை வசப்படுத்தும் வித்தையையும் கற்றுக் கொடுத்தார்.

விபுலகிரிமலையைச் சார்ந்த பெரிய காட்டில் யானைகளும் இருந்தன. இப்போது வளர்ந்துவிட்ட உதயணகுமரன் காட்டில் போய் யாழ்வாசித்தும், இசைபாடியும் காலங் கழித்தான். காட்டில் போய் அவன் கோடபதி யாழை வாசிக்கும்போது அந்த யாழின் இனிய பண்ணோசையைக் கேட்டுக் காட்டிலிருந்த யானைகளும் மான், மரை முதலான விலங்குகளும் பறவைகளும் கூட்டமாக வந்து செவி மடுத்துக் கேட்டு மகிழ்ந்து செயலற்று இருந்தன.



இதனைக்கண்ட பிரமதத்த முனிவர் அந்தத் தெய்வீக யாழை உதயணனுக்கே கொடுத்து 'நீ இசைக் கலையில் மேன்மேலும் சிறந்து விளங்குக' என்று வாழ்த்தியருளினார். உதயண குமரனும் இசைக் கலையை நன்றாகப் பயின்று யாழ் வாசிப்பதிலும் இசைபாடுவதிலும் வல்லவனாகி ஒப்புயர்வற்று விளங்கினான்.

வழக்கம்போல ஒருநாள் உதயண குமரன் காட்டுக்குச் சென்றான். நெடுந்தூரஞ் சென்றபோது யானை மந்தை ஒன்றைக் கண்டான். அந்த மந்தைகளின் நடுவே ஒரு களிற்று யானை நிற்பதைக் கண்டான். அழகாகவும் உயரமாகவும் கம்பீரமாகவும் இருந்த அந்தக் களிற்றை வசப்படுத்திப் பழக்கித் தன்னிடம் வைத்துக்கொள்ள

எண்ணினான். அவன், அருகிலிருந்த ஒரு பாறைக் கல்லின்மேல் அமர்ந்து கோடபதி யாழை இசைத்து வாசித்தான். யாழின் இசை ஒலி காட்டில் பரந்து இசைத்தது. யாழின் இன்னிசையைக் கேட்ட யானை மெல்ல அவனருகில் வந்து நின்று இசையைச் செவிமடுத்துக் கேட்டுக்கொண்டு நின்றது. அது யாழிசையில் சொக்கிவிட்டது. நெடுநேரம் மெய்ம்மறந்து இசையைக் கேட்டுக்கொண்டு நின்றது. கடைசியில், அவனுடைய யாழிசையில் ஈடுபட்டு அவனுக்கு அடங்கி விட்டது. யானை தனக்கு இசைந்து விட்டதைக் கண்ட உதயணன் அதன் மேல் ஏறியமர்ந்து அதைத் தானிருந்த ஆசிரமத்துக்குச் செலுத்திக் கொண்டு போனான்.

அன்று முதல் அந்தக் களிறு உதயணனுக்கு ஊழியஞ் செய்து வந்தது. அவன் அதன்மேல் ஏறிக்கொண்டு காடுகளில் சுற்றித் திரிந்தான். அவன் நாள்தோறும் யாழ்வாசிக்கும்போதெல்லாம் அந்த யானை அங்கு வந்து இசையைக் கேட்டுப் பரவசமடைந்தது.

– மயிலை சீனி. வேங்கடசாமி

**ஆசிரியர் குறிப்பு :** இவர் 1900 திசம்பர் திங்கள் 16 ஆம் தேதி பிறந்தார். சிறந்த வரலாற்று அறிஞர். 'கிறித்தவமும் தமிழும்', பௌத்தமும் தமிழும்', 'சமணமும் தமிழும்' 'மறைந்து போன தமிழ் நூல்' போன்ற நூல்களை எழுதியுள்ளார். 2000–ஆம் ஆண்டு வேங்கடசாமியின் நூல்களைத் தமிழக அரசு நாட்டுடைமையாக்கியது. 1980–ஆம் ஆண்டு ஜூலை 8 அன்று மறைந்தார்.

### செயல்பாடுகள்

- உங்களுக்குத் தெரிந்த இசைக்கருவிகளின் பெயர்களைப் பட்டியலிடுங்கள்.
- "இசைக்கு மயங்காத உயிர்களில்லை" எனும் கூற்றிற்கேற்ப இப்பாடப்பகுதி அமைந்துள்ளதா? உங்கள் கருத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.
- உதயணனின் யாழிசைக்கு மயங்கிய யானையின் கதையை நீங்கள் படித்தீர்கள் அல்லவா? இது போன்று இசைக்கு மயங்கும் விலங்கினங்கள் பற்றிய கதைகளையும் கவிதைகளையும் திரட்டி எழுதுங்கள்.

## யார் குற்றம்?

ஒரு சமயம் நள்ளியைத் தேடிக்கொண்டு புகழ் பெற்ற பாணன் ஒருவன் வந்தான். அவன் இனிமையாக யாழ் வாசிப்பதில் வல்லவன். அவனுடைய இசையைக் கேட்டு மகிழாத மன்னரோ, செல்வரோ தமிழ் நாட்டில் இல்லையென்றே சொல்லிவிடலாம். அவன் நள்ளியை மாத்திரம் நெடுநாட்களாகப் பார்த்ததில்லை. வேறு பாணர் பலர் நள்ளியிடம் சென்று பாடிப் பரிசில் பெற்று வருவர்.

இவன் போன சமயம் நள்ளி வேறு எங்கோ புறப்படும் நிலையில் இருந்தான். வந்தவர்களைப் போங்கள் என்று சொல்லும் வழக்கம் அவனிடம் இல்லை. ஆதலின், "நீங்கள் இங்கேயே இருங்கள். உங்கள் வீடாகவே இந்த

### சுவாதித்திருநாள்

திருவிதாங்கூர் அரசக் குடும்பத்தில் 1813 –ஆம் ஆண்டு பிறந்தவர் சுவாதித்திருநாள். பல மொழிகளையும் இளமையிலேயே கற்றுத் தெளிந்தார். இசையையும் மிக்க ஆர்வமுடன் கற்று, தம் பதினாறாம் வயதிற்குள் இசை அமைக்கும் திறமையையும் பெற்றார்.

அரசரான பிறகு, பல இசைக் கலைஞர்களையும் ஆதரித்துப் போற்றி வந்தார். சுவாதித்திருநாள் சுமார் 400 நூல்கள் இயற்றி உள்ளதாகச் சொல்லப்படுகிறது. பழக்கமான இராகங்கள் மட்டுமன்றி, அபூர்வ இராகங்களிலும் நூல்கள் இயற்றியுள்ளார்.

இவர் இயற்றியுள்ள நவராத்திரி கீர்த்தனைகளும் நவரத்தின மாலிகை கீர்த்தனைகளும் குறிப்பிடத்தக்கவையாகும்.

மேலும் சுவாதித்திருநாள் 65 பதங்களையும் இயற்றியுள்ளார். ஆனந்த பைரவி, பூர்வி பூபாளம் முதலிய இராகங்களில் தில்லானாக்களும் இயற்றியுள்ளார்.

12 பாடல்களைக் கொண்ட குசேலோ பாக்கியானம் என்ற ஹரிகதையையும், 9 பாடல்களைக் கொண்ட அஜு மிலோ பாக்கியானம் என்ற ஹரிகதையையும் ஆக்கியுள்ளார்.

இந்துஸ்தானியில் 37 இசை உருப்படிகளை செய்துள்ளதாகவும் தெரிகிறது.

சுவாதித்திருநாள், பத்மனாபா, பங்கஜநாபா, சரஜி ஜனாபா, சரசிருஹநாபா, ஜலஜநாபா ஆகிய முத்திரைகளைக் கையாண்டார். இவர் இசை அமைப்பாளர் மட்டு மல்ல, இசை இயல் அறிஞர் என்றும் சொல்லப்படுகிறது.

1846–ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 25–ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

இடத்தைக் கருதி வேண்டியவற்றைப் பெற்று இன்புறலாம். இன்றியமையாத கடமை ஒன்றை நிறைவேற்ற நான் போக வேண்டியிருக்கிறது. விரைவில் வந்துவிடுகிறேன். வராத நீங்கள் வந்திருக்கிறீர்கள். உங்களை உடனிருந்து உபசரிக்கும் நிலை எனக்கு இப்போது இல்லாமைக்கு வருந்துகிறேன். ஆனாலும் நீங்கள் ஒரு குறையும் இல்லாமல் இங்கே தங்கலாம்" என்று அன்புடன் சொன்னான். அமைச்சரிடமும் பிற அதிகாரிகளிடமும் அவர்களைத் தக்க வண்ணம் உபசரிக்கும்படி சொல்லிவிட்டுச் சென்றான். அவன் மீண்டும் வருவதற்கு ஒரு வாரம் ஆகிவிட்டது.

நள்ளி வந்தான். "உங்களை இங்கு இருப்பவர்கள் சரியாகக் கவனித்துக் கொண்டார்களா?" என்று கேட்டான்.

"எங்கள் வாழ்நாளில் பெறாத உபசாரங்களை இங்கே ஒரு வாரமாகப் பெற்று வாழ்கிறோம்" என்றான் பாணன். "உங்கள் யாழிசையை அமைதியாக இருந்து நெடுநேரம் கேட்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அதற்குரிய வேளை வரவேண்டும். இங்கே என்னை நாடிச் சில அன்பர்கள் வருகிறார்கள். மிகவும் அவசியமான சில ஆலோசனைகள் நடத்த வேண்டும். இங்கே தங்குவதிலும் உங்களுக்குத் தடை இருக்க நியாயமில்லை. உபசார வகையில் ஏதேனும் குறையிருந்தாலும் பொருட்படுத்தாமல் இங்கே இன்னும் சில நாட்களேனும் தங்கினால் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும்" என்று நள்ளி கூறினான்.

"தங்களுடைய திருவுள்ளப்படியே தங்களுக்கு எப்போது எங்கள் இசையைக் கேட்க முடியுமோ அப்போது கேட்கலாம். எங்களுக்கு இங்கே கிடைக்கும் உபசாரம் 'இதுதான் சொர்க்க போகமோ' என்று நினைக்கும்படியாக இருக்கிறது. இவ்வளவு நாட்களாக இங்கே

வராமற் போனோமே என்று ஒவ்வொரு கணமும் நினைக்கிறோம்" என்று பாணன் விடை பகர்ந்தான்.

மேலும் ஒரு வாரம் பாணனுடைய பாட்டைக் கேட்கும் செவ்வி நள்ளிக்குக் கிடைக்கவில்லை. பாட்டைக் கேட்க வேண்டுமென்ற ஆசை நாளுக்கு நாள் அவனுக்கு மிகுந்து வந்தது. கடைசியில் ஒரு நாள் மாலை பாணனும் அவனைச் சார்ந்தவர்களும் தங்கள் யாழை வாசித்தும் பாடியும் காட்டுவதற்கு ஏற்பாடு ஆயிற்று. வேறு ஊர்களிலிருந்து நள்ளியைக் காண்பதற்குச் சிலர் வந்திருந்தார்கள். புலவர்கள் சிலரும் வந்தார்கள். வன்பரணர் என்ற புலவர் பெருமானும் வந்திருந்தார். இத்தனை பேரும் இருக்கும்போது பாணனைப் பாடச் சொன்னால், அந்த இசையை யாவரும் அநுபவிக்கலாம். பாணனுக்கும் பெரு மகிழ்ச்சி உண்டாகும் என்ற எண்ணத்தால் அன்று இசையரங்கு நிகழும்படித் திட்டம் செய்தான்.

வந்திருந்த பாணன் நள்ளியின் முன் இதுகாறும் யாழை வாசிக்கவில்லை. ஆனாலும் ஒவ்வொரு நாளும் தனியே இருந்து யாழை வாசித்துக்கொண்டிருந்தான். இசையில் வல்லவர்கள் நாள் தவறாமல் இசைப் பயிற்சியை விடாமல் செய்து வந்தால்தான் இசைத் திறமை அவர்களிடம் நிலைத்து நிற்கும். அன்று காலையில் பாணன் நெடுநேரம் யாழை வாசித்துக்கொண்டிருந்தான். கலைஞர்கள் தம் கலையினால் விளையும் இன்பத்தில் தாமே ஆழ்ந்து தம்மை மறந்துவிடுவார்கள். இந்தப் பாணன் அன்று காலையில் யாழை வாசித்தான். ஒவ்வொரு நேரத்துக்கும் இன்ன இன்ன பண் உரியதென்ற வரையறை உண்டு. காலை நேரத்துக்கு உரியது மருதப் பண். மாலை நேரத்தில் பாடுவதற்குரியது



செவ்வழிப் பண். பாணன் மருதப் பண்ணை மிக விரிவாகப் பாடினான். அவன் இந்த உலகத்தையே மறந்து மருதப் பண்ணின் இசைக் கூறுகள் அலையலையாகப் பரவி மோத, அந்தக் கடலில் வேறு ஒன்றையும் காணாத நிலையில் ஈடுபட்டிருந்தான். யாழ் வாசிப்பதை நிறுத்தின பிறகும் மருதப் பண் அவன் காதிலும் கருத்திலும் ஒலித்துக்கொண்டே இருந்தது. அதனுடைய ஆரோகண அவரோகண கதியிலே அவன் இன்னும் மூழ்கியிருந்தான்.

மாலையில் நள்ளி தன் அவைக்களத்தில் வீற்றிருந்தான். அவனுக்கு அருகில் வன்பரணர் அமர்ந்திருந்தார். இரு பக்கங்களிலும் வேறு சில புலவர்களும் நண்பர்களும் அதிகாரிகளும் அயலூர்க்காரர்களும் இருந்தார்கள். எதிரே பாணனும் அவனைச் சார்ந்தாரும் தம் தம் இசைக் கருவிகளுடன் உட்கார்ந்திருந்தனர். பாணர் தலைவன் முன்னே அமர்ந்திருந்தான்.

இசையரங்கு தொடங்கியது. யாழுக்குச் சுருதி சேர்த்தார்கள். முதலில் பாணர் தலைவனே வாசிக்கத் தொடங்கினான். காலையிலே மருதப் பண்ணிலே தோய்ந்து நின்ற அவன் உள்ளம் இன்னும் அந்த நிலையினின்றும் மாறாமலே இருந்தது. இப்போது மாலை; முறைப்படி செவ்வழிப் பண்ணை வாசிக்கவேண்டும்; ஆனால் பாணன் உள்ளமும் காதும் இன்னும் மருதப் பண்ணிலே ஈடுபட்டிருந்தன. ஆதலின் அவன் பாடத் தொடங்கியபோது அவனையே அறியாமல் அவன் விரல்கள் மருதப் பண்ணின் சுரங்களை எழுப்பின; பிறகு அதன் இன்னிசை ஒலி மீட்டும் அவனுக்குக் காலையிலே யாழ் வாசிக்கிறோம் என்ற மயக்கத்தை உண்டாக்கியது; காலையில் வாசித்ததன் தொடர்ச்சியாக வாசிப்பதாகவே அவன் எண்ணிக்கொண்டு விட்டான். அப்படிச் சொல்வதைவிட இப்போது மாலை என்ற நினைப்பே அவன் உள்ளத்திலே தோன்றவில்லை என்று சொல்வது தான் பொருத்தமாக இருக்கும்.

தொடக்கத்தில், 'மாலை நேரத்தில் அவர் மருதப் பண்ணைப் பாடுகிறாரே!' என்று இசையிலக்கணம் தெரிந்தவர்கள் மயங்கினார்கள். நள்ளியும் அப்படியே எண்ணினான். சிறிது நேரம் கழித்து யாவரும் அந்தப் பண்ணின் இனிமையில் ஆழ்ந்து போனார்கள். பாணன் வாசித்துக்கொண்டே போனான். அவனுடைய மருதப் பண் இசையிலே காலை நேரத்தின் அமைதி பரவியது. தாமரை மலர் மலரும்போது வண்டுகள் மெல்லென்ற ஒலியோடு அதில் புகுவது போன்ற நினைப்பு உண்டாயிற்று. எங்கும் புது விழிப்பும் கலகலப்பும் முளை விடுவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. கீழ் நிலையிலிருந்து மெல்ல மெல்ல மேலே ஏறினான். கூட்டில் இருந்த பறவை சிவ்வென்று மேலே போகிற மாதிரி இருந்தது. ஆடாமல் அசையாமல் பாணன் பாடினான். அனைவரும் கேட்டார்கள். பாட்டு ஒரு வகையாக முடிவு பெற்றது. மருதப் பண்ணென்னும் இசைக் கடலின் மறுகரை இன்னும் தெரியவில்லை.

சிறிது நேரம் கேட்டவர்களுடைய மனம் மருதப் பண்ணோடே உலவிக் கொண்டிருந்தது. இனி அடுத்த பாட்டு ஆரம்பமாக வேண்டும்.

அதற்குள் நள்ளி மருதப் பண்ணிலே ஆழ்ந்து கிடந்த மயக்கத்திலிருந்து விழித்து எழுந்தான். "அருமையிலும் அருமை! மருதப் பண் காலை நேரத்தையே இப்போது இங்கே கொண்டு வந்து விட்டது. பாணனார் இது மாலை என்பதை மறந்து மருதத்தை வாசித்தார். நாமும் மாலையை மறந்து காலை என்ற உணர்ச்சியோடு இந்தப் பண்ணைக் கேட்டு இன்புற்றோம். இதுவரையிலும் பலர் பாடி இந்தப் பண்ணைக் கேட்டிருக்கிறேன். ஆனால் இது ஒரு தனிச் சிறப்புடையதாக இருந்தது" என்று பாராட்டினான்.

– கி.வா. ஜகந்நாதன்

**ஆசிரியர் குறிப்பு :** கி.வா. ஜகந்நாதன் என்றழைக்கப்பட்ட கிருஷ்ணராயபுரம் வாசுதேவ ஜகந்தாதன் 1906–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11–ஆம் தேதி பிறந்தார். உ.வே. சாமிநாதய்யரின் மாணவர், கலைமகள் இதழின் ஆசிரியர். வீரர் உலகம் என்னும் நூலிற்குச் சாகித்ய அகாதமி விருதை 1967–ஆம் ஆண்டு பெற்றார். அதியமான் நெடுமான் அஞ்சி, அறப்போர் இன்பமாலை போன்ற நூற்களை எழுதியுள்ளார். சிறந்த சொற்பொழிவாளர். நவம்பர் 4–ஆம் தேதி 1988–ஆம் ஆண்டு மறைந்தார்.

## செயல்பாடுகள்

- உங்கள் பள்ளி இலக்கிய இதழில் வெளியிடும் பொருட்டு 'இசையின் சிறப்பு' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.
- உங்கள் பள்ளியில் நடக்க இருக்கும் இசை விழாவைப் பொதுமக்களுக்கு அறிவிக்கும் விதம் சுவரொட்டி தயாரியுங்கள்.
- சுவாதித்திருநாளின் அபாரமான இசையாற்றல் பற்றி அறிந்தீர்கள். இதுபோல இசைத்துறையில் வல்ல வேறு வல்லுநர்கள் பற்றித் தெரியுமா? அவர்களைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்பினை எழுதுங்கள்.
- பல்வேறு இசைக்கருவிகள் பற்றிய தரவுகளைத் திரட்டி ஒப்படைப்பு தயார் செய்யுங்கள்.
- பாணன் யாழிசை நிகழ்த்திய நிகழ்வை நாடகமாக மாற்றி எழுதுங்கள்.



# சிப்பிக்குள் முத்து



## கூத்து

கூத்து பழமையின் சின்னமாக, பண்பாட்டின் எச்சமாக விளங்குகின்றது. தெருக்கூத்தின் வளர்ச்சிதான் நாடகமெனின் மிகையாகாது.

'கூத்தாடி கிழக்கே பார்ப்பான்
கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்'

கூத்தானது விடியும்வரை நடைபெறும் என்பதையே இது காட்டுகிறது. கூத்துக்கான கரு, புராண இதிகாசங்களிலிருந்தும் வாழ்க்கை முறையிலிருந்தும் கிடைக்கிறது. கூத்துகள் பாவைக் கூத்து, கழைக் கூத்து, தெருக்கூத்து எனப் பல வகைப்படும்.

### தெருக்கூத்து

தெருவில் நடத்தப்படும் கூத்து தெருக்கூத்து. நாடக மேடையோ காட்சித் திரைகளோ இல்லாமல் எளிய முறையில் தெருவிலும் திறந்தவெளி அரங்கிலும் இரவு முழுவதும் நடைபெறும் கூத்து தெருக்கூத்து. மழையை வேண்டுவோர் விராட பருவத்தையும் திருமணம் வேண்டுவோர் மீனாட்சி கல்யாணத்தையும் பிள்ளைப் பேற்றை விரும்புவோர் சத்தியவான் சாவித்திரியையும் நடத்துவர். கூத்திலும் சில மரபுகள் பின்பற்றப்படுகின்றன. துதி, கட்டியக்காரன் வரவு, கதாபாத்திரங்கள் திரைக்குள்ளிருந்து பாடுதல், திரைக்கு வெளியே பாடுதல்,

அறிமுகப்படுத்திக் கொள்ளல், கதைகூறல், மங்களம் பாடுதல் என ஒரு மரபு பின்பற்றப்படுகிறது. கூத்திற்கு இதிகாசங்கள், புராணங்கள், சரித்திர நிகழ்ச்சிகள், வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் கருப்பொருளாகின்றன.

## கழைக் கூத்து

கழைக் கூத்தும் தெருவில் நடத்தப்படுவதாகும். மூங்கில் மேல் நடந்து செல்லும் இக்கூத்தைக் கழைக் கூத்து என்பர். கழையிலும் கம்பியிலும் நடந்து வித்தை காட்டுவர். பாட்டும் பாடுவர். இக்கூத்து மற்ற கூத்தினின்றும் வேறுபட்டது. கதை தழுவியதன்று.

## பாவைக் கூத்து

பாவைகளை மரத்தாலும் தோலாலும் செய்து நூல்களைக் கட்டி ஒரு திரைக்குப் பின்னாலிருந்து ஒருவர் ஆட்டியசைத்துக் கதைகளை விளக்கச் செய்யும் நாட்டுப்புறக் கலையைப் பாவைக் கூத்து என்பர். இது மரப்பாவைக் கூத்து (மரத்தினாலானதை மரப்பாவை என்பர்), தோற்பாவைக் கூத்து (தோலாலானதைத் தோற்பாவை என்பர்) என இருவகைப்படும்.

இக்கூத்துகளை நிழலாட்டம், பொம்மலாட்டம் என்றும் கூறுவர். நிழலாட்டம் என்பது சிறுதோல் பதுமைகளை ஒரு விளக்குக்கும் ஒரு வெள்ளைச்சீலைத் திரைக்கும் நடுவே வைத்து ஆட்டி அவற்றின் நிழல் திரையில் விழும்படிச் செய்தல் எனத் தமிழ்க் கலைக்களஞ்சியம் கூறுகிறது.

## தோற்பாவைக் கூத்து

தோற்பாவைகளின் நிழல்கள் மூலம் இக்கூத்தை நடத்திச் செல்வதால் தோற்பாவை நிழற்கூத்து என்கின்றனர். தோற்பாவைக் கூத்தை ஆந்திராவில் 'தோலு பொம்மலாட்டா' என்றும் மைசூரில் 'தொகலு பொம்மே



ஆட்டா அல்லது சக்கல கொம்பே ஆட்டா' என்றும் கேரளத்தில் 'தோல்பாவைக் கூத்து' அல்லது 'நிழற்காட்சி' என்றும் கூறுவர். பாவைக் கூத்தில் மூன்று முதல் ஆறு பேர் இருப்பர். பாவைகளை இருவர் ஆட்டுவிப்பர். இருவர் பாடுவர். திறந்த வெளி அரங்கில் வெள்ளைத் திரைகட்டி நடுவில் விளக்கு தொங்க விட்டிருப்பர். விளக்குக்கும் திரைக்கும் நடுவில் பாவைகள் இயக்கப்படும். காலில் கட்டை அணிந்து ஒலி எழுப்புவர்.

இராமாயணம், நல்லதங்காள் கதை, அரிச்சந்திரன் கதை போன்றவற்றைத் தோற்பாவைக் கூத்து மூலம் நடத்தினால் மழை பெய்யும் என நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர்.

முதன் முதலில் பாவைக் கூத்து சீனாவில் நடத்தப்பட்டதாகவும் பின் இந்தோனேசியா வழியாக இந்தியாவிற்கு வந்ததாகவும் கூறுவர். 12–ஆம் நூற்றாண்டு முதல் இந்தியாவில் பாவைக் கூத்து இருந்ததாக அறிகிறோம். அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் சிறுவர் நிகழ்ச்சியாக நடத்தப்படுகின்றது. ஜாவாவிலும் இக்கலைக்கு நல்ல ஆதரவு உண்டு. இந்தியாவின் தென் மாநிலங்களில் இக்கலை சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தமிழகத்தில் நாட்டுப்புறக்கலைகள் அழிந்து கொண்டும் மறைந்து கொண்டும் மாறிக்கொண்டும் வருகின்றன. அவற்றைப் பாதுகாத்துப் பேணி, அவற்றைப் பற்றி அறிவியல் சார்ந்த ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

– சு. சக்திவேல்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் சிறந்த நாட்டுப்புற ஆய்வியல் அறிஞர். தமிழ் மொழி வரலாறு, நாட்டுப்புறவியல் ஆய்வு, இதழியல் போன்ற நூற்கள் இவரின் தலைசிறந்த படைப்புகளாகும். இப்பாடப்பகுதி நாட்டுப்புறவியல் ஆய்வு எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- உங்கள் பாடப்பகுதியில் குறிப்பிடப்படும் பலவகையான கூத்துகளைப் பட்டியலிடுங்கள்.
- கூத்துகளின் சிறப்புகளையும் அதன் வகைகளையும் குறித்து விளக்கக்குறிப்பு தயாரியுங்கள்.
- தற்காலச் சூழலில் நாட்டுப்புறக் கலைகள் நலிவடைந்து வருகின்றன. அதற்கான காரணத்தையும் தீர்வையும் சுட்டி, பத்திரிகைக்குத் தலையங்கம் எழுதுங்கள்.

## நேர்காணல் – தெருக்கூத்து தெற்கத்தியப் பாணி

தமிழ்ச்சூழலில் தெருக்கூத்து நிகழ்கலை வடிவமானது வட மற்றும் மேற்கு மாவட்டங்களில் பரவலாக நிகழ்த்தப்பட்டு வருகிறது. இக்கூத்து தெற்கத்தியப் பாணி, வடக்கத்தியப் பாணி, மேற்கத்தியப் பாணி என்கிற வேறுபாடுகளைக் கொண்டமைகிறது. அதாவது மாவட்டத்திற்கு மாவட்டம், வட்டாரத்திற்கு வட்டாரம் ஒப்பனை, ஆட்டமுறை என நிகழ்த்தல் முறைகள் வேறுபடுகின்றன. ஒரே வட்டாரத்தில் கூட இருவேறு பாணிகளின் நிகழ்த்துதலைக் காணமுடியும்.

தெற்கத்தியப் பாணி கூத்து மரபென்பது பழமை சார்ந்ததாக 5 ½ சுருதியில் தாளம், பெட்டி, மிருதங்கம் இவைகளைக் கொண்டு நிகழ்த்தப்படுகிறது. குறிப்பாகத் தெற்கத்தியப் பாணியில் முகவீணையின் பயன்பாடே இராது எனலாம். தெற்கத்தியப் பாணியின் எல்லைகளாகக் கடலூர், பாண்டிச்சேரி, விழுப்புரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னையின் புறநகர் பகுதிகளென வரையறுத்தாலும் இங்கும் வடக்கத்தியப் பாணி கூத்து நிகழ்த்தப்படுவதனைக் காணமுடிகிறது.

க. தேவராஜ் (52) சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். சிறு வயதிலிலேயே குரல்வளம் சிறப்பாக இருந்ததினால் அவரது மாமா அர்ச்சுனன் அவர்களால், தன்னுடைய பதினைந்தாவது வயதில் இக்கலையில் சேர்ந்தார். கூத்துக் கலைஞராக, நல்ல வாத்தியாராக, பழகுவதில் பண்புடையவராகத் திகழ்ந்தார்.

இனி க. தேவராஜ் வாத்தியாரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவரது பதில்களும் உங்களுக்காக.

**நீங்கள் என்னென்ன வேஷம் கட்டுவீர்கள்?**

நான் ஆண், பெண் இரண்டு வேஷமும் ஆடுவேன். அர்ச்சுனன், வீமன், சூரன் என்ற ஆண் வேஷமும் முதன் முதலில் ஞானசௌந்தரி என்ற பெண் வேஷம் போட்டும் ஆடினேன்.

**உங்கள் பகுதி அடவு (Steps) முறைகளைப் பற்றிச் சொல்லுங்கள்..?**

'அடவு' என்பது தொடர்ந்து எடுக்கும் பயிற்சியினாலும் பிற கூத்துக் கலைஞர்களை ஆரம்பத்திலிருந்து பார்ப்பதனாலும் கற்றுக் கொள்வதுதான். சில அடிப்படை அடவுகளைத் தொடக்கத்தில் வாத்தியார்கள் சொல்லிக் கொடுப்பார்கள் அவ்வளவுதான். இதனாலேயே இவர்களை விட நன்றாக அடவு போட வேண்டும் என்கிற எண்ணமும் வருகிறது. அதேப் போல் எங்கள் பக்கம் பாடுகிற பாட்டிற்கும் அதாவது பாடும் முறைக்கும் காஞ்சிபுரத்தார் பாடும் முறைக்கும் வித்தியாசமிருக்கிறது.

**பாரதத்தில் என்னென்ன கூத்துகள் ஆடுவீர்கள்?**

முதலில் கிருஷ்ணன் ஜனனம், இரண்டாவது கிருபாங்கனி சரித்திரம், திரௌபதை பிறப்பு, துஸ்டத்துய்ம்னன் பிறப்பு, குருகுலப்பயிற்சி, அடுத்து

அரக்கு மாளிகை, அடுத்து திரௌபதி மாலையீடு. அதிகமாக ஆட வேண்டுமென்றால் சுபத்திரை மாலையீடு, சுந்தரி மாலையீடு, நாக கன்னி மாலையீடு, சித்ராங்கதை மாலையீடு, அல்லி மாலையீடு என்று வரும். இதே குறுகிய உபயமாக இருந்தால் மாலையீடு முடிந்த உடனே ராசுயாகம், அடுத்து துகில். இதிலும் இன்னும் மூன்றுநாள் கூத்துதான் உள்ளதென்றால் துகில் முடிந்ததும் தபசு வைப்போம். தபசுக்கு அடுத்து பதினெட்டாம்போர் வைப்போம். அப்படியில்லாமல் இன்னும் ஆடவேண்டி இருந்தால், தபசு முடிந்ததும் தேவர் பட்டம், அடுத்து கீச்சக சம்மாரம் பிறகு அபிமன்னய கொன்றை மாலை, முடிந்ததும் கர்ண மோட்சம். கர்ண மோட்சம் முடிஞ்சா கடைசியா பதினெட்டாம் போர். இப்படி பாரதம் ஏற்பாடு செய்யும் ஊர்க்காரர்களின் வசதிக்கு ஏத்தமாதிரி கூத்துகளை வரிசைப்படுத்திக் கொண்டு ஆடுவோம்.

**'பாரதம்' தவிர்த்து வேறென்னென்ன ஆடுவீர்கள்?**

புரூர் சக்கரவர்த்தி (சனீஸ்வரன் தொடர்பு), பிரிந்தர மோட்சம், காம தகனம் (ரதி மன்மதன்), காத்தவராயன் (கழுவேறுதல்), அடுத்து 'மதுரை வீரன்' ஆடுவோம். இதுபோல் பல கூத்துகள் உள்ளன. மதுரைவீரன் கூத்தில் என்னப் பிரச்சினை உண்டாகும் என்றால், கூத்தாடும் இடத்திலிருந்து ஒன்றரை கிலோமீட்டர் தூரம் அழைத்துச் செல்வார்கள். அங்கே வேஷம் கட்டி பந்தத்தையும் கட்டி விடுவார்கள். வேஷக்காரர் நான்கு பக்க பந்தத்தைப் பிடித்துக்கொண்டு சக்கரம், கேடயம் எல்லாவற்றையும் கையில் பிடித்துக்கொண்டு அங்கிருந்து ஆடி வர வேண்டும். சாலை நல்லா இருந்தாலும் நல்லா இருக்கவில்லை என்றாலும் ஆடிக்கொண்டே வரவேண்டும். சரியாக ஆடவில்லையென்றால், "போன வருஷம் வந்து ஆடுனாங்கோ, என்னா அருமையா ஆடுனாங்கோ, இந்த வருஷம் சரியில்லப்பா.. போன வருசம் பத்துப்பேரு சேந்துப் புடிச்சாலும் புடிக்க முடியலைப்பா, என்னாமா ஆள மேல தூக்குது" என்று சாதாராணமாகச் சொல்லி விடுவார்கள். அதனால்தான் இதற்குக் "கொட்டு பாதி கூத்து பாதி" அதாவது "புராணம் பாதி நகைச்சுவை பாதி" என்று வரும். அதாவது "பல் கூத்து சொல் கூத்து." பல் கூத்தென்றால் சிரிப்பது, சொல் கூத்தென்றால் கதையைக் கேட்பது.



**உங்கள் பகுதி கூத்தின் ஆடை, அணிகலன் பற்றிச் சொல்லுங்கள்.**

துரியயோதனன், தர்மன் வேஷத்திற்குக் கிரீடம், புஜம்; அர்ச்சுனனுக்குக் குச்சி, சூரை என்றும் சொல்வார்கள். கிருஷ்ணனுக்கு மயிலிறகும் வக்கா முடியும் வேஷங்களாக பயன்படுத்தப்படுகின்றன. வண்ணம் என்றால் பச்சை, மஞ்சள், ரோஸ், நீலம் இவைகளைத்தான் அதிகம் பயன்படுத்துவோம்.

இடுப்பில் கட்டப்படும் வட்டுடுப்பு (டவுர்) முழுக்க துணியால்தான் இருக்கும். அதனால்தான் நாங்கள் கிறுகிறுவென்று கிறிக்கி அடிக்க முடிகிறது. இதேப் பிளாஸ்டிக்கில் டவுர் கட்டினால் அப்படிச் சுற்ற முடியாது. சுற்றினாலும் காற்று வந்து தள்ளிவிடும். எங்களுடைய டவுரானது, ஏழு புடவைகளைக் கட்டி அடுத்து வாக்கு புடவை ஒன்று கட்டி, அடுத்து பாவாடை, என்று மொத்தம் ஒன்பது புடவையினால் ஆனதாகும். இதனால் தான் எங்களால் எவ்வளவு வேகமாகவும் சுற்ற முடிகிறது. அதேப் போல் எங்களுடைய கிரீடத்தில் பதினாறு கட்டுகள் வரும். நெத்திக்கட்டு, பட்டத்துக்கட்டு, காதுகட்டு, கிரீடக்கட்டு, இளவரசன் கட்டு, மீசக்கட்டு என்று வரும். மொத்தக் கட்டுகளையும் சேர்த்து ஒரு கட்டாகவும் கட்டுவோம். எப்பொழுது கூத்தாடி முடிக்கிறோமோ அப்பொழுது தான் கிரீடத்தைக் கழட்ட முடியும். ஆனால், காஞ்சிபுரம் பக்கத்தில் கிரீடத்தை வேஷக்காரர் அடிக்கடி கழட்டி கையில் வைத்திருப்பதைப் பார்க்கலாம்.

**உங்களுக்குத் தெரிந்து தெருக்கூத்தில் பெண்கள் இருந்துள்ளார்களா?**

பொதுவாகப் பெண்கள் இல்லை. ஆண்கள்தான் பெண் வேஷம் போடுவார்கள். ஆனால் திண்டிவனம் பக்கம் அப்பொழுது பாஞ்சாலி என்றொரு அம்மா கூத்தாடினார்கள். ஆண்–பெண் இரண்டு வேஷமும் போடுவார்கள்.

பேட்டி கண்டவர் – முனைவர் சி. முத்துக்கந்தன்
பேட்டியாளர் – க. தேவராஜ்

**செயல்பாடுகள்**

- தெருக்கூத்து பற்றிய நேர்காணலை வாசித்தீர்கள் அல்லவா? இதன் அடிப்படையில் தெருக்கூத்துக் கலைஞர் தேவராஜன் அவர்களது அனுபவத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.
- இப்பாடப்பகுதியில் வரும் கூத்து பற்றிய கலைச்சொற்களைத் திரட்டி அகர வரிசைப்படுத்துங்கள்.

## "டிங்கினானே!"

திருவாவடுதுறை ஆதீனத்து மகா வித்துவானாக இருந்து புகழ் பெற்று விளங்கிய திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களைப்பற்றி அறியாத தமிழறிஞர் இரார். பிள்ளையவர்கள் நூற்றுக்கணக்கான மாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்லியும் பல நூல்களை இயற்றியும் தமிழுலகத்துக்கு ஒப்பற்ற உதவி செய்திருக்கிறார்கள்.



அவர்களிடம் நான் பாடங் கேட்டுவந்த காலத்தில் சவேரிநாத பிள்ளை என்ற ஒரு கிறிஸ்தவரும் உடனிருந்து பாடம் கேட்டு வந்தார்.

ஒருநாள் பிற்பகலில் பிள்ளையவர்கள் சவேரிநாத பிள்ளையை ஏதோ ஒரு காரியமாக வேதநாயகம் பிள்ளையிடம் அனுப்பினார்கள். அவ்விதம் சென்ற சவேரிநாதபிள்ளை இரவில் நெடுநேரமாகியும் திரும்பி வரவில்லை. பிள்ளையவர்கள் இரவு 12 மணி வரையில் விழித்திருந்தார்கள்; அப்பால் என்னிடம் சொல்லி விட்டுப் படுத்துக்கொள்ளச் சென்றார்கள். பின்பு நான் அவருடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டு காத்திருந்தேன். இரவு இரண்டு மணிக்குமேல் அவர் வந்தார். "ஏன் இவ்வளவு நேரம் ஆயிற்று?" என்று நான் கேட்க அவர் "எல்லாம் காலையில் விரிவாகச் சொல்லுகிறேன்; இப்போது மிகவும் களைப்பாக இருக்கிறது" என்று சொல்லி உடனே படுத்து உறங்கிவிட்டார்.

வழக்கம் போலவே விடியற்காலையில் எழுந்த பிள்ளையவர்கள், "சவேரிநாது வந்துவிட்டானா?" என்று என்னைக் கேட்டார்கள். "இரண்டு மணிக்கு வந்தார்" என்று நான் சொல்லிக் கொண்டிருக்கையிலே சவேரிநாத பிள்ளை எழுந்து வந்தார். பிள்ளையவர்கள் அவரை நோக்கி, "என்ன அப்பா! ராத்திரி வெகுநேரம் வரையில் உன்னைக் காணவில்லையே; என்ன காரணம்?" என்று கேட்டார்கள். உடனே அவர் பின்வருமாறு சொல்லலானார்:–

"இரண்டு மணிக்கு வந்ததே பெரும் பிரயாசையாகிவிட்டது. நேற்று முன்ஸீப் அவர்களிடம் சென்றபோது அவர்கள் எங்கேயோ வெளியே போயிருந்தார்கள். வீட்டிற்கு வருகையில் இரவு ஒன்பது மணியாயிற்று. பிறகு அவர்களோடு பேசவேண்டிய காரியத்தைப் பேசிவிட்டுத் திரும்பினேன். அப்பொழுது மணி பதினொன்று இருக்கலாம். மையிருட்டாக இருந்தது.

"சிறிது தூரம் வந்தேன். வழியிலுள்ள பெரிய மைதானத்திற்கு அருகில் வந்தபோது திடீரென்று காலில் ஏதோ தட்டியது; கட்டையாக இருக்கலாமென்று எண்ணி நான் சிறிது ஒதுங்கிவர ஆரம்பித்தேன். அந்த இடத்திலும் என் காலில் ஏதோ ஒன்று இடித்தது. இருட்டு மிகுதியாக இருந்ததால் எனக்கு உடனே சிறிது பயம் ஏற்பட்டது. சற்று நிதானித்து நின்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அந்த இடத்தை ஊன்றிக் கவனித்தேன். என்ன ஆச்சரியம்! அங்கே வழிநெடுக அநேக ஜனங்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் சிறிதேனும் சப்தம் செய்யவில்லை. அவர்களுள் இருவருடைய உடம்புகளே என் காலில் தட்டுப்பட்டனவென்று அப்போது தெரிய வந்தது. இவர்கள் எதற்காக இங்கே மரங்கள் போல அசைவில்லாமல் உட்கார்ந்திருக்கிறார்கள்?" என்று யோசித்தேன். மெல்லக் குனிந்து ஒருவரைத் தடவித் தொட்டுப்பார்த்து, 'வழி விடவேண்டும்' என்று பயத்தோடும் விநயத்தோடும் வேண்டிக் கொண்டேன். அதே சமயத்தில் மனத்துக்குள்ளே, 'ஏதாவது நல்ல வழி விடவேண்டும்!' என்று கடவுளையும் பிரார்த்தித்தேன்.

"நான் யாரை வேண்டிக் கொண்டேனோ அவர் திடீரென்று எழுந்திருந்து என் வாயைப் பொத்தினார்; உடனே அருகில் இருந்த மற்றொருவர் எழுந்திருந்து என் உச்சந்தலையில் ஒரு கையையும் மோவாய்க்கட்டையில்

ஒரு கையையும் வைத்து அழுத்தினார். எனக்கு நடுக்கமெடுத்தது; 'இனிமேல் ஐயா அவர்களிடம் சென்று அவர்களைப் பார்ப்பது சந்தேகந்தான்' என்று முடிவு பண்ணிக்கொண்டேன். என் மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. உடம்பெல்லாம் வேர்வை வெள்ளத்தில் மூழ்கியது.

வாய்விட்டுக் கத்தலாமென்றாலோ வாயைத் திறக்க முடியவில்லை. 'இனி என்ன செய்வது?' என்றெண்ணினேன். என்னைப் பிடித்திருந்தவர்கள் கருணை புரிந்தாலொழிய விடுதலை பெற வேறு வழியில்லையென்று புலப்பட்டது. ஆகையால், என் தலையை அழுத்தியவருடைய மோவாய்க் கட்டையைப் பிடித்துக்கொண்டு கெஞ்சிக் கேட்டுக் கொள்வதுபோல ஒரு பாவனை செய்தேன். அவருடைய கைகள் நெகிழ்ந்தன. 'ஐயா! நீங்கள் யார்? என்னை ஏன் தடுக்கிறீர்கள்?' என்றேன். அதற்குள் மற்றொருவர் எழுந்து என் காதில், 'முட்டாளே! பேசாதே; பாரதக் கதை நடக்குது' என்று சொல்லிவிட்டு என் கையைப் பிடித்து இழுத்துக் கீழே உட்கார வைத்துவிட்டார். 'நாம் நினைத்தபடி அவ்வளவு அபாயம் இல்லை' என்ற ஆறுதல் எனக்கு உண்டாயிற்று. பெருமூச்சு விட்டேன்.

அப்படியே சிறிது நேரம் உட்கார்ந்திருந்தேன். 'மனிதர்கள் நடக்கிற சாலையில் பாரதக் கதை நடக்கிறதாவது! இவர்கள் ஊமைகளாக ஏன் உட்கார்ந்திருக்கிறார்கள்?' என்று எண்ணி அங்குமிங்கும் பார்த்தேன். இந்த இருண்ட இடம் எவ்வளவு மயக்கமாக இருந்ததோ அவ்வளவு மயக்கமாக என் மனமும் இருந்தது.

சிறிது நேரங் கழித்து ஒருவருக்குந் தெரியாமல் மெல்ல எழுந்து நின்று சுற்றிலும் நோக்கினேன். ஒரே ஜனக்கூட்டமாக இருந்தது. அந்தக் கூட்டத்தைத் தாண்டிச் செல்வது அசாத்தியமென்று நிச்சயித்து எங்கே பாரதம் நடக்கிறதென்று ஓசைப்படாமல் நின்றுகொண்டே கவனித்தேன்.

"சாலையின் வடபாலுள்ள வெளியிடத்தில் ஒரு மேடை காணப்பட்டது. பெரிய விளக்கொன்று அங்கே எரிந்தது. அந்த வெளிச்சத்தால் இருவர் அம்மேடையில் இருந்து ஒருவரையொருவர் நோக்கி எழும்பி எழும்பி ஏதோ சொல்லிக் கொண்டிருந்ததாக மட்டும் தெரிய வந்தது. ஒருவர் கையில் உடுக்கையும் மற்றொருவர் கையில் பம்பையும் இருந்தன. அவர்கள் என்ன சொல்லுகிறார்களென்பதை அறிந்துகொள்வதற்கு இயன்றவரையில் முயன்று கவனித்தும் ஒன்றும் தெரியவில்லை. பின்னும் நின்றபடியே கவனித்தேன். ஏதோ பாட்டுப்போன்ற ஒரு தொனி காதில் விழுந்தது. அதனோடு இடையிடையே 'ஆமாமா!' என்ற சத்தமும். உடுக்கையின் ஒலியும், பம்பையின் முழக்கமும் ஒன்றன்பின் ஒன்றாகக் கேட்டன. அந்த முழக்கங்களுக்கு முன்னும் பின்னும் என்ன கூறப்படுகின்றனவென்று காதை நிமிர்த்திக் கொண்டு கேட்டேன் . 'பீமசேன மவராசா! மவராசா! மவராசா!' என்றார் ஒருவர். 'ஆமாமா!' என்று மூன்று முறை முழங்கினார் வேறொருவர். தொடர்ந்து உடுக்கையும் பம்பையும் ஒலித்தன. 'மவராசா! மவராசா! மவராசா! என்றார் முதல்வர். 'ஆமாமா!' என்றார் பின்பாட்டுக்காரர். 'மரத்தேப்பூ,

மரத்தேப்பூ, மரத்தேப்பூ' என்ற உத்ஸாகத்தோடு கைகளைக் கீழும் மேலும் அசைத்துக் கொண்டே கர்ச்சனை செய்தார் பிரசங்கியார்.

"பின்பாட்டுக்காரர், 'ஆமாமா!' என்று மூன்று முறை முழங்கினார்; அப்பால் உடுக்கையின் ஓசையும், பம்பையின் முழக்கமும் எழுந்தன.

"இப்படிச் சில நிமிஷம் முழங்கியபின் உடுக்கைக்காரர், 'டிங்கினானே, டிங்கினானே, டிங்கினானே' என்று சொல்லி ஆலாபனம் செய்யத் தொடங்கிவிட்டார். ஜனங்களெல்லோரும் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். அவ்வளவு பெரிய கூட்டத்தில் நான் மட்டும் அந்த ஆனந்தத்தை அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை. மேடையில் நடந்த கதை

**புணர்ச்சி**

2025 டிசம்பர் 5
திருவனந்தபுரம்

அன்புள்ள நண்பா,

உன் கடிதம் கிடைத்தது. இங்கு நான் நலம். நீயும் நலமாய் உள்ளாய் எனக் கருதுகிறேன். தமிழ் வகுப்பில் டிங்கினானே என்ற பாடப்பகுதியைப் பற்றி எழுதியிருந்தாய். மரத்தேப்புடிங்கினானே என்பது எப்படி டிங்கினானே ஆனது என்பது உனக்குப் புரியவில்லை, புணர்ச்சி பற்றியும் விளங்கவில்லை என்றாயே. அதைப் பற்றி நன்கு படித்த பின்தான் நான் இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறேன். சொற்கள் எப்படி சேருகின்றன என்பது பற்றிக் கூறுவதே புணர்ச்சி. இவ்வாறு சொற்கள் சேரும்போது சில சொற்கள் எந்த மாற்றமும் இல்லாமல் அவ்வாறே புணரும். சில சொற்களில் ஒரு சில எழுத்துகள் மாறி அமையும். அவ்வாறு மாற்றம் பெறாமல் இயல்பாய் அமைவது இயல்புப் புணர்ச்சி என்றும் மாற்றம் பெற்று வருவனவற்றை விகாரப் புணர்ச்சி என்றும் கூறுவர்.

உதாரணமாக, வாழை + மரம் = வாழைமரம் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. இதை இயல்புப் புணர்ச்சி என்பர். மாற்றம் பெற்று வருவதை விகாரப் புணர்ச்சி என்பர். இப்புணர்ச்சி மூன்று வகைப்படும். அவை தோன்றல், திரிதல், கெடுதல் எனப்படும். எடுத்துக்காட்டாக கல் + சிலை = கற்சிலை. இதில் 'ல்' என்ற எழுத்து 'ற்' ஆகத் திரிந்திருக்கிறது. எனவே இது திரிதல் விகாரம். மா+கனி = மாங்கனி. இதில் 'ங்' என்ற எழுத்து புதிதாகத் தோன்றியுள்ளது. எனவே இது தோன்றல் விகாரம் ஆகும். வெண்மை + குடை= வெண்குடை என்று வந்துள்ளதைப் பார். இது என்ன விகாரம் என்பது தெரிகிறதா? இதில் 'மை' வராமல் வெண்குடை மட்டும் வந்ததால் இது கெடுதல் ஆனது. அதாவது 'மை' கெட்டுவிட்டது. இப்போது புணர்ச்சி புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். தமிழில் சொற்கள் ஒன்றோடொன்று சேரும்போது எவ்வளவு மாற்றங்கள் வருகின்றன என்பது புரிந்ததல்லவா! இதேப் போல்தான் சொற்களைப் பிரித்துச் சொன்னால் ஒரு பொருளும் சேர்த்துச் சொன்னால் ஒரு பொருளும் தரும். மரத்தேப்புடிங்கினானே என்பதைப் பிரித்துச் சொன்னதால்தான் புரியாமல் போனது. இப்போது புரிந்ததா நம் தமிழ் மொழியின் சிறப்பு. இனி புணர்ச்சி பற்றி படி. உனக்கு நன்றாகப் புரியும்.

இப்படிக்கு
உன் அன்பு நண்பன்

**உறை மேல் முகவரி:**

கபிலன். ம,
த/பெ , மணிவண்ணன்
678, பாரதி நகர், உழவூர் (உப மாவட்டம்),
கோட்டயம் (மாவட்டம்), தபால் – 686634.

பாரதமென்று, 'பீமசேன மவராசா' என்ற சத்தத்தால் அறிந்தேன். அதற்குமேல் நான் கேட்ட முழக்கங்களின் பொருள் எனக்கு விளங்கவில்லை. யோசித்துப் பார்த்தேன் ; தலைவலி எடுத்ததைத் தவிர ஒரு பயனையும் காணவில்லை.

இவ்வண்ணமே மேலும் நிகழ்ந்தவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த அந்தக் கூட்டம் கலைவதற்கு நெடுநேரம் ஆயிற்று. கதை ஒருவகையாக முடிந்ததென்பதைக் கூட்டம் கலைந்ததனால் அறிந்து கொண்டேன். சிறைச்சாலையிலிருந்து விடுபட்டவனைப் போல் வேகமாக நடந்து வரலானேன். வரும்பொழுது ஒருவரோடு பேசி வருகையில் பிரசங்கியார் சொன்ன வாக்கியம். "ஒரு யானையை அடிப்பதற்குப் பீமசேனன் மரத்தைப் பிடுங்கினான்" என்பதென்று தெரியவந்தது. அவ்வாக்கியத்தை எனக்கு விளக்கிய அந்தப் பாரத ரஸிகர், 'இதுகூட உனக்குத் தெரியவில்லையா!' என்று என்னை நோக்கி இரங்கிக் கூறினார். 'இந்தக் கதைக்குத்தானா இவ்வளவு கூட்டம்! ஐயா அவர்கள் புராணப் பிரசங்கத்துக்கு இத்தனை ஜனங்கள் வருவதைக் காணோமே. இந்த நாகரிக காலத்திலும் ஜனங்கள் அறிவுநிலை இப்படி இருக்கிறதே!' என்று வியந்து கொண்டே வந்து சேர்ந்தேன்."

இதைக் கேட்ட பிள்ளையவர்களும் நாங்களும் வயிறு குலுங்கச் சிரித்தோம். அன்று முதல் சில வாரங்கள் வரையில் அங்கே வருபவர்களுக்கெல்லாம் இந்த 'டிங்கினானே' வரலாற்றைப் பிள்ளையவர்கள் சவேரிநாத பிள்ளையைக் கொண்டு சொல்லிக் காட்டி வந்தார்கள்.

– உ. வே. சாமிநாதையர்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டினால் 'தமிழ்த் தாத்தா' எனச் சிறப்பிக்கப்பட்டார். பண்டைய தமிழ் இலக்கியங்களை ஓலைச் சுவடியிலிருந்து பதிப்பித்தார். மகாமகோபாத்தியாய மற்றும் தக்ஷண கலாநிதி போன்ற பட்டங்களைப் பெற்றுள்ளார். இவர் 'என் சரித்திரம்' எனும் தலைப்பில் தனது வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து நகைச்சுவைப் பகுதியை விமர்சனம் செய்து குறிப்பெழுதுங்கள்.
- நீங்கள் அறிந்த நிகழ்த்துகலையின் சிறப்புகளை எடுத்துக் கூறி உனது நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.
- தமிழகக் கூத்துகளின் பெயர்களைத் திரட்டி வரிசைப்படுத்துங்கள்.



# முதுசொல்



## பழமொழி நானூறு

சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும் பண்பிற்றம்
இல்லாளே வந்த விருந்தோம்பிச் – செல்வத்
திடரின்றி ஏமாந் திருந்தாரே நாளும்
கடலுள் துலாம்பண்ணி னார்.

அடுத்து ஒன்று இரந்தாற்கு ஒன்று ஈந்தாரை, கொண்டார்,
படுத்து, 'ஏழையாம்!' என்று போகினும் போக!
அடுத்து ஏறு அல் ஐம்பாலாய்! – யாவர்க்கேயானும்
கொடுத்து ஏழை ஆயினார் இல்

புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம்; – நலமிக்க
பூம்புன லூர! பொதுமக்கட்கு ஆகாதே
பாம்பறியும் பாம்பின கால்.

– முன்றுறை அரையனார்

**நூற்குறிப்பு :** பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலில் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ஒரு நீதி சார்ந்த பழமொழி கூறப்படுகிறது. திருக்குறள், நாலடியார் ஆகிய நூல்களுக்கு அடுத்து புகழப்பெறும் ஓர் அறநூலாகும்.

**செயல்பாடுகள்**

- இப்பாடல்களில் காணலாகும் பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- "யாவர்க்கேயானும் கொடுத்து ஏழை ஆயினார் இல்" எனும் பழமொழிக்கேற்றாற் போல கதை எழுதுங்கள்.
- மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
  நோக்கக் குழையும் விருந்து – திருக்குறள்

  சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும் பண்பிற்றம்
  இல்லாளே வந்த விருந்தோம்பி– பழமொழி நானூறு

  இவ்விரு பாடலடிகளை ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுங்கள்.

## பழமொழிகள்

பழைய மொழியே பழமொழி என்பர். நாட்டுப்புற மக்களின் நுண்மையான அறிவின் வெளிப்பாடே பழமொழி ஆகும்.

தமிழில் பழமொழி, பழஞ்சொல், முதுமொழி, முதுசொல், வசனம் என்றெல்லாம் சொல்லப்பட்டு வருகின்றது.

பழமொழி, விடுகதை எப்பொழுது தோன்றியன என்று சொல்ல முடியாது. மனிதன் பேச ஆரம்பித்த நாளிலே இவை தோன்றிவிட்டன. வாழ்வை ஊன்றிக் கவனித்து உணர்ந்த உண்மைகளின் துணுக்குகளே பழமொழிகள் என்று ஆக்ஸ்போர்டு அகராதி கூறுகிறது. பலரின் அறிவையும் ஒருவரின் தன்மையையும் பழமொழிகள் உணர்த்துகின்றன என்று ரஸ்ஸல் கூறுகிறார். பழமொழிகள் வாழ்க்கை அனுபவங்களின் திரட்டே ஆகும். இது செய்யுளிலும் உரைநடையிலும் அமையும். தொல்காப்பியர் பழமொழியை, 'முதுசொல்' என்றும் 'முதுமொழி' என்றும் குறிப்பிட்டுள்ளார். "அங்கதம் முதுசொல்லொடு அவ்வேழ் நிலத்தும் ஏது நுதலிய முதுமொழி என்ப" என்று குறிப்பிட்டுள்ளார். பழமொழிகள் வாய்மொழியாகவே கூறப்பட்டு வந்தவை. பாட்டியின் அம்மா, பாட்டி, அம்மா என்று வழி வழியாகக் கூறிய பழமொழிகளும் உண்டு. நாட்டுப்புறப் பாடல்களிலும் பழமொழிகளைப் பயன்படுத்தியது உண்டு.

பழமொழிகள் பொதுவாக மக்களிடையே வழங்கிவருபவை. மாவட்ட, வட்டாரப் பழமொழிகள், மேனாட்டுப் பழமொழிகள் என்றெல்லாம் பிரிக்கப்படுமளவுக்குப் பழமொழிகள் இன்று புத்தகங்களிலும் இடம் பெறுகின்றன.

ஆராய்ந்தெடுத்த அறுநூறு பழமொழிகள், பழமொழி நூறு, பழமொழி ஆயிரம், சிந்திக்கத் தூண்டும் பழமொழிகள், பழமொழி தீபிகை குழந்தைகளுக்கான பழமொழிகள் என்றெல்லாம் புத்தக வடிவிலும் பெருகி விட்டன.

நாட்டுப்புற மக்களின் நுண்மையான அறிவின் வெளிப்பாடே பழமொழியாகும். ஒரு செய்தியின் அழுத்தத்திற்கும் கருத்தாழத்திற்கும் அவசியத்திற்கும் ஏற்பப் பழமொழிகள் உருவாக்கம் பெறுகின்றன. ஒருவருக்கு ஏற்பட்ட அனுபவம் போலப் பிறருக்கு ஏற்படும் பொழுது, முன் அனுபவம் பெற்றவர் தம் அனுபவத்தைப் பழமொழியில் சொல்வார். இப்பழமொழிகள் அனுபவங்களின் வாயிலாகப் பிறந்தவை. நாட்டுப்புற மக்களின் வழக்காறுகளை அறிந்துகொள்வதற்கும் பழமொழிகள் பெரிதும் துணை புரிபவையாகும்.

வாழ்வில் முழுமையாக இரண்டறக் கலந்து பட்டறிவில் பட்டுத் தேர்ந்த செறிவான மனங்களின் தெளிவான வாய்பாடுகளே பழமொழிகளாகும். படைத்தோரின் பெயர் அறியலாகாதவை. பழமொழிகள், சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான படைப்புகளான மனித அனுபவங்களின் தொகுப்புரைகள் ஆகும். பழமொழிகள் ஏட்டுக் கல்வியில் விளைந்தன அல்ல. அவை வாழ்வியலை நேராகவே கற்ற எண்ணற்ற உள்ளங்களில் இயல்பாய்த் தோன்றி, நிலைத்த அறிவின் கருவூலம். ஆகையால், பழமொழிகள் உளவியல் செறிவு மிக்கன ஆகும்.

– டாக்டர் விஜலட்சுமி இராமசாமி

**ஆசிரியர் குறிப்பு :** இவர் சிறந்த கல்வியாளர் மற்றும் ஆராய்ச்சியாளர். வேல் என்றும் வெல்லும், கோவைமாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புறவியல், கதை இசைப்பொழிவு என்னும் நூற்களை எழுதியுள்ளார். நாட்டுப்புறவியல் என்னும் நூலிலிருந்து இப்பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது

### செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து பழமொழிகளின் வேறு பெயர்களைப் பட்டியலிடுங்கள்.
- 'நாட்டுப்புற மக்களின் நுண்மையான அறிவின் வெளிப்பாடே பழமொழியாகும்'. இக்கூற்றினைக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.
- உங்கள் பகுதியில் வழங்கப்படும் பழமொழிகளைத் திரட்டி வரிசைப்படுத்துங்கள்.

## மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்

முரளி தன் நண்பர்களுடன் ஓடோடி வந்தான். தாத்தா சாய்வு நாற்காலியில் சாய்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். வெளியில் சித்திரை மாத கத்திரி வெயில் உச்ச கட்டத்தில் அடித்தது.

முரளி, "தாத்தா, கிரிக்கெட் மட்டை எங்கே இருக்கிறது? எனக் கேட்டான். அதற்குத் தாத்தா அடே, வெயில் கடுமையாக அடிக்கிறது. வீட்டில் உட்கார்ந்து செஸ், கேரம் போர்டு விளையாடுங்கள். மாலையில் வெயில் குறையவும் கிரிக்கெட் ஆடப் போங்கள்" என்றார்.

அதற்கு முரளி, தன் நண்பர்களுடன், "இந்த வயதான கிழவர்களே இப்படித்தான் ஏதாவது தொண தொண எனப் பேசுவார்கள். வாங்கடா போய் நாம் கிரிக்கெட் ஆடுவோம்" என மட்டையையும் பந்தையும் எடுத்துக் கொண்டு விளையாடப் புறப்பட்டனர்.

தாத்தாவின் பேச்சைக் கேட்காமல் முரளி தனது நண்பர்களுடன் தினமும் வெயிலில் கிரிக்கெட் விளையாடச் சென்றான்.

அன்று சனிக்கிழமை. கிரிக்கெட் விளையாடிவிட்டு வீட்டிற்கு வந்தான். வந்தவுடன் படுக்கையில் படுத்துவிட்டான். அம்மா, "முரளி, சாப்பிட வா" என அவனைத் தொட்டு அழைத்தாள். அவனைத் தொடவும் உடல் கொதித்தது. தாத்தாவை அழைத்து, மாமா! முரளியை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வோம் என்றாள்.

**பழமொழிகள்**

- விளையும் பயிர் முளையிலே தெரியும்
- ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
- தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்
- மாமியார் உடைத்தால் மண்கலம்; மருமகள் உடைத்தால் பொன்கலம்
- கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?
- கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல
- பருப்பில்லாத கல்யாணமா?
- வேலியே பயிரை மேய்ந்தது போல

தாத்தாவும் முரளியின் அம்மாவும் அவனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். டாக்டர் எல்லாப் பரிசோதனைகளும் செய்து முடித்து, 'முரளிக்கு அம்மை போட்டுள்ளது' என்றார்.

முரளியின் முகம் சிவந்திருந்தது. உடல் அரிக்க ஆரம்பித்தது. அவனால் தாங்கவே முடியவில்லை. அம்மா அவனுக்கு இளநீர் வாங்கிக் கொடுத்தாள். அப்பொழுதுதான் முரளி தாத்தாவிடம், தாத்தா நீங்கள் கூறிய வார்த்தைகளைக் கேட்காததால் இப்பொழுது கஷ்டப்படுகிறேன்.



"மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்பதை இப்பொழுதுதான் உணர்ந்தேன் எனக் கூறவும் முரளியின் நண்பர்கள் ஒவ்வொருவராக மருத்துவமனைக்கு வந்தனர். ஒருவனுக்குச் சீதபேதி, மற்றொருவனுக்கு வயிற்றுக் கடுப்பு. இப்படி முரளியின் நண்பர்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஒரு வாரம் உருண்டு ஓடியது. மருத்துவரின் சிகிச்சைக்குப்பின் குணமடைந்து ஒருநாள் முரளியின் வீட்டில் உட்கார்ந்து பேசினர்.

முரளி, "பார்த்தாயா? அன்று தாத்தா சொன்னதைக் கேட்காமல் நாம் எல்லோரும் ஒரு வாரம் மிகவும் கஷ்டப்பட்டுவிட்டோம்."

"முத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்பது சரியாகத்தான் இருக்கிறது. ஒருநாள் நம்முடைய ஆசிரியரும் இதே வார்த்தையைக் கூறினாரல்லவா? எனத் தமக்குள் பேசிக் கொண்டனர்.

– வை. மாரிமுத்து

**ஆசிரியர் குறிப்பு :** இவர் சிறந்த எழுத்தாளர், பல நூல்களை எழுதியுள்ளார். தொழில் முனைவோருக்கு வழிகாட்டும் விதம் சொந்தமாகத் தொழில் செய்வது எப்படி எனும் நூலை எழுதியுள்ளார். இப்பாடப்பகுதி பழமொழிகள் தரும் பண்பாட்டுக் கதைகள் எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

## செயல்பாடுகள்

- மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் – எனும் பழமொழியின் கருத்து இக்கதையில் பொருந்தும் விதத்தினைக் கலந்துரையாடிக் குறிப்பாக எழுதுங்கள்.
- உனக்குத் தெரிந்த ஒரு பழமொழியின் அடிப்படையில் ஒரு கதை எழுதுங்கள்.
- மூத்தோர் சொல்லைக் கேட்காததால் ஏற்பட்ட விளைவுகளை எடுத்துக் கூறி, அயலூரில் வசிக்கும் நண்பனுக்கு ஓர் அறிவுரைக் கடிதம் எழுதுங்கள்.
- பழமொழிக் கதைகளைத் திரட்டி ஒப்படைப்பு தயாரியுங்கள்.



அலகு 5

# சங்கே முழங்கு



சமூக நெறிமுறைகளுள் ஒன்று குடிமை உணர்வு . நல்ல நடத்தை மற்றும் சமூக அணுகுமுறையை உணர்த்தும் விதமே குடிமையியல் எனப்படும். மனித உறவுகளில் வேறுபாடு காணாமையே அடிப்படையான குடிமையுணர்வு ஆகும். நாட்டுப்பற்றும் மொழிப்பற்றுமே குடிமையுணர்வின் முக்கியமான தன்மை என்பதை வெளிப்படுத்தும் விதமாக இவ்வலகு கட்டமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களிடம் குடிமையுணர்வை வளர்ப்பதே இவ்வலகின் நோக்கமாகும்.

# இல்லாமை இல்லாகி



## நண்டு செய்த தொண்டு

ஊரையடுத்த ஓடைக் கரையில்
ஓட்டை நிறைந்த ஒருசிறு குடிசை
நாற்புறம் வயல்கள் நல்ல விளைச்சல்
நாகனும் வள்ளியும் வசிக்கும் இடமிது

சொல்லச் சொல்ல சுவையேறு தமிழில்
வள்ளியுரைக்கிறாள் மச்சானிடத்தில்:
"மச்சான் மச்சான் கதையைக் கேட்டியா
வாரக் குத்தகை தாரதாச் சொல்லி
வாம்பலில் கொஞ்சம் நட்டுவச்சோமே"

"ஆமா ஆமா அதுக்கென்ன இப்போ
நேத்தைக்குத் தண்ணி நிறைய இருந்ததே
பின்னாடி நட்டதால் பிஞ்சாயிருக்கு
இன்னும் பத்துநாள் எல்லாம் பழுத்திடும்"

"அதுக்கில்லே மச்சான் நான் சொல்ல வந்தது
அடுத்த வயல்லே நின்னாரு
ஆத்து வாய்க்காலை அடைச்சுத் திருப்பணும்
ஐம்பது காசுக்குத் தண்ணி பாய்ச்சணும்

ஆருவந்தாலும் அடிப்பேன் உதைப்பேன்
அப்படி இப்படீன்னு அலறிக் குதிச்சாரு
இதுக்கும் நமக்கும் எட்டாதுன்னு
இருட்டும் முன்னே வீட்டுக்கு வந்துட்டேன்"

"பொழுது விடிஞ்சு போய்ப்பாத்தா
பொங்கித் ததும்புது நம்ப வயலும்
வாய்க்காலும் வெட்டலே மடையும் திறக்கலே
வழியும் அளவுக்குத் தண்ணீ யேது?"
"நண்டு செஞ்ச தொண்டு மச்சான்
நாட்டு நிலைமையை நல்லாப் பார்த்தது
ஏற்றத் தாழ்வை ஒழிக்க வரப்பில்
போட்டது வளையைப் புரட்சி நண்டு,
பாய்ந்தது தண்ணி பரவி எங்குமே
காய்ந்த பயிர்களும் கதிரைக் கக்கின"

"ஆகா ஆகா அருமை நண்டே
உனக்கு இருக்கும் உயர்ந்த நோக்கம்
உலக மனிதர்க்கு உண்டா நண்டே,
பெரு நிலக்காரன் வரப்பைக் குடைந்து
சிறுநிலங் காத்துச் சிறந்த நண்டே"
என்று நாகன் நன்றி செலுத்துகையில்
எதிருள வயல்களை இருவரும் நோக்கினர்
பச்சை மயில்போல் பயிர்கள் அசைந்தன,
பழுத்த கதிர்கள் படுத்துக் கிடந்தன,

படுத்திருந்த பசுந்தாரை அடியில்
வெடித்த கிளையிலும் விஷயமிருந்தது
உழைப்பாளர் பலனை ஒட்ட உறிஞ்சி
ஒதுக்கிப் பதுக்கும் உல்லாச மனிதரின்
கள்ளத் துணிவையும் கருங்காலிச் செயலையும்
கொல்லும் ஈட்டிபோல் குருத்துகள் நின்றன

இந்தக் காட்சியில் இன்பம் கண்டனர்,
இயற்கை ஆட்சியை இருவரும் வியந்தனர்
மடைதாண்டி விழுந்த வாளை மீன்போல்
வள்ளி துள்ளி வரப்பில் குந்தினாள்.

– பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர், அறிஞர், சிந்தனையாளர் எனப் பன்முகத் திறமை கொண்டவர். இவரது பாடல்களின் கருப்பொருள்கள் காதல், மகிழ்ச்சி, சோகம், தத்துவம் என அமையும்.

**செயல்பாடுகள்**

- 'நண்டு செய்த தொண்டு' என்ற கவிதையில் இடப்பெற்றுள்ள அடுக்குத்தொடர், உவமைத்தொடர்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- இப்பாடப்பகுதி வாயிலாக ஆசிரியர் சமூகத்துக்குக் கூறும் செய்திகளைக் குறிப்பாக எழுதுங்கள்.
- பாடப்பகுதியைக் நாடக வடிவில் மாற்றி எழுதி வகுப்பில் நடியுங்கள்.

## எல்லோரும் எல்லாமும் பெற்றிட வேண்டும்....!

தமிழர்கள் உலகுக்களித்த உன்னதமான ஓர் அறிவுரை "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதாகும், எல்லாம் நமது நாடுதான். எல்லோரும் நம் உறவினர்கள் தாம் என்பது இதன் பொருள். இன்று நேற்று அல்ல, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் சொல்லப்பட்டது இக்கருத்து. உலக நாடுகள் பலவும் இவ்வுரையைப் பொன்மொழிபோல் போற்றியிருப்பது நமக்குப் பெருமை அளிக்கிறது.

சாதி, மத, இன, மொழி வேறுபாடுகள் இன்றி, ஏழை – பணக்காரன் என்னும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் தவிர்த்து அனைவரும் ஒரு தாய் மக்கள் போல் ஒருங்கிணைந்து வாழ வழிவகுப்பதே பொதுவுடைமைக் கொள்கை. இதுதான் மனிதாபிமானத்தின் அடிப்படைத் தத்துவமும். தமிழ் இலக்கியங்கள் பழமையும் இனிமையும் வாய்ந்தவை மட்டுமல்ல. மக்களை நல்வழிப்படுத்தி நன்முறையில் நலமாக வாழவும் வழிகாட்டியவை. ஒரு நூலிழைபோல், உலகம் தோன்றிய காலம் முதல் இன்றளவும் சமத்துவமும், சமூக நீதியும் தமிழ் இலக்கியங்களில் ஊடுருவிச் செல்வதைக் காணலாம்.

ஒருவருக்குச் செல்வம் அதிகமாக வருகிறது என்றால் அதன் நோக்கம், அதை வைத்து எந்நாளும் ஆடம்பரமாக வாழ வேண்டும் என்பது அல்ல. அச்செல்வத்தின் ஒரு பங்கை இல்லாதவர்களுக்கும் கொடுத்து வாழ வேண்டும் என்பதாகும். சங்க இலக்கியமான புறநானூற்றுப் பாடலில் இது இடம் பெற்றுள்ளது.

எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்னும் சமூக நீதியை வலியுறுத்தும் இத்தகையதோர் பாடல், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வேறு எந்த மொழியிலாவது தோன்றியிருக்கிறதா என்று கேட்டால் உறுதியாகச் சொல்லிவிடலாம் 'இல்லவே இல்லை' என்று. நலவாழ்வுக் கான நெறிமுறைகளை வகுத்துத் தந்த வள்ளுவப் பெருமகனார்,

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'' (குறள் 322 )

என எடுத்துரைக்கின்றார்.

பகுத்துண்டு பல உயிர்களையும் பாதுகாப்பதே பெரியோர்கள் சொல்லி வைத்த அறங்கள் யாவற்றிலும் தலையாய அறம் என்னும் இக் கூற்று சமூக நீதியை வலியுறுத்துகின்றது. பொதுவுடைமைத் தத்துவத்தின் முழக்க வாக்கியமாக இதைச் சொன்னாலும் தவறில்லை.

"ஈடில் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சு இளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன்" என வள்ளலார் வருந்துவதும் சமூக நீதிக்காகத்தான் என்றால் யாரே மறுப்பார்! ஏழையென்றும் அடிமையென்றும் எவரும் இல்லை" எனப் பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடியதும் சமத்துவத்தைப் போதிக்கத்தான்.

பாவேந்தர் பாரதிதாசனோ வெளிப்படையாகவே தம் கருத்தை வெளிப்படுத்தி விட்டார்.

"பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோடு அதை எங்கள் உயிரென்று காப்போம்."

என்பது அந்தப் புரட்சிக் கவியின் பாடல் வரிகள்.

கவியரசர் கண்ணதாசனும் தம் திரைப்படப் பாடல்கள் வழியே பொதுவுடைமைக் கொள்கையைப் பிரச்சாரம் செய்தவர். அவரது

"வல்லான் பொருள் குவிக்கும் தனியுடைமை நீங்கி
வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடைமை
எல்லாரும் எல்லாமும் பெற்றிட வேண்டும் – இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்."

என்னும் திரைப்படப் பாடல் எங்கும் முழங்கக் கேட்கலாம்.





இவ்வாறு காலந்தோறும் நம் செந்தமிழ் புலவர்கள் மனிதாபிமானத்தையும் சமூகநீதியையும் வலியுறுத்திப் பாடியிருப்பது நமக்குப் பெருமை சேர்க்கிறது.

– முனைவர் மா. நயினார்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் கேரள பல்கலைக்கழக் கல்லூரியில் பேராசிரியராக இருந்து பணி ஓய்வு பெற்றவர். சும்மா, நேர்கோடுகள், குருதிப்பூ, சில செய்திகளும் சில சிந்தனைகளும், கூட்டலும் கழித்தலும் போன்ற படைப்புகளையும் படைத்துள்ளார். கேரள மொழிச் சிறுபான்மையினர் குழு அங்கத்தினராக இருக்கிறார். திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் இருந்துள்ளார். திருவனந்தபுரம் தமிழ் சங்கத்தின் நீலபத்மம் விருதையும் பெற்றுள்ளார்.

### செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து மையக்கருத்தை விளக்கி குறிப்பு எழுதுங்கள்.
- "வல்லான் பொருள் குவிக்கும் தனியுடைமை நீங்கி
  வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடைமை" – இக்கவிதை வரிகளைத் தற்கால சமூகச் சூழலோடு ஒப்பீடு செய்து விமர்சனம் செய்யுங்கள்.
- பகுத்துண்டு வாழ வேண்டும் என்ற கருத்தைக் குறிப்பிடும் குறட்பாக்களைத் திரட்டி எழுதுங்கள்.
- பொதுவுடைமைச் சமுதாயம் படைக்க நீங்கள் கூறும் பரிந்துரைகளை வரிசைப்படுத்துங்கள்.

## பொதுவுடைமையும் நமது உடைமையே

தனிமனிதனின் தனியுடைமைகளைப் பாதுகாப்பது போன்று பொதுவுடைமைகளைப் பாதுகாப்பதும் அவசியம். தனியுடைமைகள் தனக்கு மட்டும் பயன்தருபவை; பொதுவுடைமைகள் அனைவருக்கும் நலம் பயப்பவை.

பொருட்களின் விலை ஏற்றமும் வரி ஏற்றமும் நாளுக்குநாள் பெருகுகின்றன என நொந்துகொள்ளுகின்றோம். ஆனால் அதற்குரிய காரணத்தை நாம் அலசிப் பார்ப்பதில்லை. முக்கியமாக மூன்று காரணங்களை நாம் சுட்டிக்கூறலாம்.

1. பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப உற்பத்தி பெருகுதல் வேண்டும்.
2. பொருட்களை வீண்விரயம் செய்தலைத் தவிர்க்க வேண்டும்.
3. பொருட்சேதங்கள் வராமல் பார்த்தல் வேண்டும்.

மக்கள் பெருக்கத்திற்கேற்பவும் பெருகிவரும் மக்களின் தேவைகளுக்கேற்பவும் உற்பத்தி பெருகுதல் அவசியம். அதற்கென அரசு திட்டங்கள் தீட்டுதல் வேண்டும். தனி மனிதன் ஒவ்வொருவனும் தன்னலம்

துறந்து உழைத்தல் வேண்டும். மனிதனிடம் தீமைகள் பெருகாதிருக்க வேண்டுமெனில் மனிதனுக்கு ஓய்வுநேரமே இருக்கக்கூடாது என்பது பெர்னார்ட்ஷாவின் கருத்து. மனிதன் எப்போதும் உழைத்துக்கொண்டே இருக்கவேண்டும் என்பது இதன் பொருள். "நின்ற இடத்தில் நிற்பதற்கே ஓடிக்கொண்டிருக்க வேண்டும்" என்ற ஆங்கிலப் பழமொழியும் இங்கே எண்ணத்தக்கது. எனவே, மனித இனம் உழைக்கத் தயங்குதல் கூடாது, முயற்சியும் உழைப்பும் பெருகும்போது உற்பத்தியும் பெருகுதல் திண்ணம்.

பொதுவுடைமைகளை அரசாங்க உடைமை எனக் கருதும் எண்ணம் தவிர்க்கவேண்டும். நாட்டுடைமைகள் அனைத்தும் நமதுடைமைகளே என்ற உணர்வோடு செயல்படும்போது வீண்விரயம் தவிர்க்கப்படுகின்றது. உற்பத்திக்குறைவான பொருட்களைக் கட்டுப்பாட்டோடு பயன்படுத்தினால் தட்டுப்பாடற்ற நிலையை உருவாக்க இயலும். காட்டாக, மனிதனின் தேவைகள் பெருகப்பெருக மின்சாரத்தின் செலவு அதிகமாகிறது. ஆனால் பெருகிவரும் தேவைகளுக்கேற்ப மின்சாரத்தின் உற்பத்தி அரிதாகிறது. இந்நிலையில் பொதுவுடைமைகளிலும் தனியுடைமைகளிலும் வீண்செய்யப்படும் மின்சாரத்தைத் தடுத்தால் தேவைகளை ஓரளவேனும் சரிக்கட்டுதல் இயலும். பொது அலுவலகங்களிலும் நிறுவனங்களிலும் மின்சாரம் மிகுதியாக விரயமாக்கப்படுகிறது. தனியுடைமைகளில் சிக்கனம் பாலிப்பவர்கள்கூட பொதுவுடைமைகளில் அத்துணைக் கவனம் செலுத்துவதில்லை. இதனால் ஏராளமான மின்சார இழப்பு நேருகிறது. இந்நிலை பொதுமக்களையே பெரிதும் பாதிக்கிறது என்பதை அனைவரும் உணர்தல் நன்று. இந்நிலை தொடர்ந்தால் மின்சாரத் தட்டுப்பாடு மிகுதியாகும்; மேலும் அதிக மின்சக்தியைத் தயாரிக்கவும் விரயமாக்கப்படும் மின்சாரத்தை ஈடுசெய்யவும் பொதுப்பணமே செலவழிக்கப்படும் என்பதனையும் எண்ணிப்பார்த்தல் அவசியம்.

அதுபோலவே பொதுவுடைமைகளை வீணடிக்கும் அனைத்துத் துறைகளும் சரிசெய்யப்படுதல் வேண்டும். நாட்டில் வன்முறைகளும் கலகங்களும் போராட்டங்களும் விளையாமல் தடுப்பது அரசின் தலையாய கடன். ஏனெனில், போராட்ட காலங்களில் சிறியோர்முதல் பெரியோர்வரை அனைவரும் அரசு உடைமைகளுக்குச் சேதம் விளைவிக்கின்றனர். இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பேருந்துகளையோ விமானங்களையோ தீக்கிரையாக்குகின்றனர். மத, இனக் கலவரங்களால் பொதுமக்களது வழிபாட்டுத்தலங்களும் பொதுநிறுவனங்களும் தகர்த்தெறியப்படுகின்றன. தீவிரவாத சக்திகளின் வன்முறைகளால் இரயில்வே தண்டவாளங்களும் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளும் அழிக்கப்படுகின்றன. தமது போராட்டத்தின் வெற்றிக்குரிய வழிகள் இவையே என எண்ணுகின்றனர். ஆனால், இவ்வழிமானங்களைச் சற்று மனிதத்தன்மையோடு சிந்தித்துப்பார்த்தல் வேண்டும்.



இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள இந்த உடைமைகள் யாருடையன? அரசுடையனவா?

நாடு என்பது நமது உடல் போன்றது. நமது உடலின் எல்லா உறுப்புகளும் சீராக அமைந்தால்தான் நாம் நன்றாக வாழ இயலும். எல்லா உறுப்புகளும் சரியாக அமைந்து ஏதேனும் ஒரு சிறு உறுப்பு ஒத்துழையாமை இயக்கம் செய்தாலும் அதன் பாதிப்பு நமது உடல் முழுமைக்கும் நேருகிறதல்லவா? அதுபோன்றுதான் நமது நாடும். அதன் தலை, கண், காது, கழுத்து, உடல், கை, கால் போன்ற அனைத்து உறுப்புகளும் சரியாக இயங்கினால்தான் நாடு நலமுடன் திகழ இயலும் இன்றைய நமது தேவைகளை எண்ணியன்று. நாளைய நமது தேசத்தை எண்ணி தன்னலம் மறந்து ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும். நேர்மையாலும் உழைப்பாலும் மனிதனின் பங்களிப்பு சீராக்கப் படுகின்றபோது நாசமோசங்கள் விலகும்; மனிதனின் சிந்தனைகளும் போக்குகளும் தெளிவுபெறும்; வீண் கலகங்களும் பிரிவினைகளும் மறைந்துபோகும்; தீவிரவாதங்களும் வன்முறைகளும் ஒழிந்து போகும்; மனிதம் மலரும். எனவே பாழ்பட்டுக்கிடக்கும் பாரததேசம் எங்கும் மேம்பட்டுத்திகழ தன்னலம் மறப்போம்; அனைவரும் ஒன்றுபடுவோம்; அயராது உழைப்போம்.

– முனைவர் சிந்தி கேசவராஜ்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். மிகச்சிறந்த முற்போக்குச் சிந்தனையாளர். இவர் எழுதிய மனிதம் என்ற கட்டுரைத் தொகுப்பில் இப்பாடப்பகுதி இடம்பெற்றுள்ளது.

## செயல்பாடுகள்

- பள்ளி இலக்கிய மன்றம் சார்பாக நடைபெறும் பேச்சுப்போட்டியில் "பொதுவுடைமையைப் பாதுகாப்போம்" என்னும் தலைப்பில் பேசுவதற்கான உரையைத் தயாரியுங்கள்.
- உங்கள் பள்ளியில் நடைபெறும் சுதந்திரதின விழாவில் "பொதுநலனே தேச நலன்" என்ற தலைப்பில் வெ. இறையன்பு சொற்பொழிவு நிகழ்த்துகிறார். இதற்கான அறிவிப்பைத் தயாரியுங்கள்.
- மக்களிடையே பொது உடைமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரம் தயார் செய்யுங்கள்.



# மண்ணின் மைந்தர்கள்



## சுதேசிக் கப்பல்

களம் : மதுரைத் தமிழ்ச்சங்கம்
தூண்கள் : வள்ளல் பாண்டித்துரை, பாரதியார், வ.உ.சி., புலவர் பெருமக்கள்
காலம் : காலை

பாரதி : வள்ளல் பெருமகனாரே! வணக்கம் வணக்கம்!

பாண்டித்துரை : வருக! வருக! கவியரசே! வருக! வருக! செந்தமிழ்ச்செம்மல் சிதம்பரனாரே! வருக! வருக! தங்கள் வருகை கண்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தோம்.

பாரதி : தங்கள்பால் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் ஒருங்கே திருநடம் புரிவதைக் கண்ணாரக் கண்டோம்! கழிபேருவகை கொண்டோம்.

வ.உ.சி. : அரசர் பெருமகனாரே! தாங்கள் மாண்ட தமிழ்ச்சங்கத்தை மீண்டும் எழுப்பித் தண்டமிழ் வளர்த்தீர்கள்! நேற்றுத் தாங்கள் தேசிய மாநாட்டிலே கோடை இடியென, கடல்மடை திறந்த வெள்ளமென எங்கள் இதயத்தில் எழுச்சியை ஏற்படுத்தினீர்கள்! தாய் நாட்டின் விடுதலைக்காகத் தங்கள் உடல், பொருள், ஆவியை அளிக்கும் தங்கள் திறத்தை என்னவென்று சொல்வது! எம் நன்றியைத் தங்களுக்குக் காணிக்கையாக்குகின்றோம்.

பாண்டித்துரை : நன்று! நன்று! வ.உ.சி. அவர்களே! ஏதோ! என் கடமையைச் செய்தேன்! என் உயிர் தந்தேனும் இந்த நாட்டைக் காப்பது என் கடமை!

பாரதி : தேவர் திருமகனாரே! நம் நாட்டிற்கு வணிகம் புரியவந்த வெள்ளையர் நாடாள்கின்றனர்! நாம் கைகட்டி, வாய்பொத்தி வாழ்கிறோம்! இன்றும் நம் கண்முன்னே கப்பல் கப்பலாக நம் நாட்டின் வளத்தையெல்லாம்,

செல்வத்தையெல்லாம் நாளும் வாரிக்கொண்டே போகின்றனர். நாம் பார்த்துக்கொண்டே இருப்பதுவா? இதே நிலை நீடித்தால் நாளை நம்மை நாடு என்ன சொல்லும்?

பாண்டித்துரை : உண்மை! உண்மை! கவியரசே! தாங்கள் கூறுவது அனைத்தும் மெய்யே!

வ.உ.சி. : இதை நாம் தடுத்தாக வேண்டும்.

பாண்டித்துரை : தாங்கள் கூறுவது சரியே! அதனை நாம் எப்படித் தடுப்பது?

வ.உ.சி. : இரு கப்பல்களை விலைக்கு வாங்குவோம். அதனை நம் நீண்ட நெடுங்கடலில் செலுத்துவோம்! நம் வணிகர்களிடையே நம்நாட்டுக் கப்பல்களிலே பொருள்களை ஏற்றுங்கள், இறக்குங்கள் என்று கூறுவோம். நம் மக்களிடையே நம்நாட்டுப் பொருள்களை வாங்குங்கள் என்று கூறுவோம்.

பாண்டித்துரை : நல்ல கருத்து! இதனையே அண்ணல் காந்தியடிகளும் அந்நிய துணிகளைப் பகிஷ்கரித்தல் என்று சொன்னார்.

பாரதி : அப்படிச் செய்வதால் வெள்ளையர்கள் முடங்கிப் போவார்கள். நம் மக்கள் விழித்தெழுவார்கள். வெள்ளையனை விரட்ட இது ஒரு சிறந்த வழி! கூரிய ஆயுதம்!

வ.உ.சி. : இந்தப் புனிதப்போரில் தமிழகம் பாரதத்திற்கே வழிகாட்டியதாக நாளை வரலாறு கூறட்டும்.

பாண்டித்துரை : நல்லது கூறினீர்கள்! அதற்கு என் பங்கு?

வ.உ.சி. : தாங்கள் பெருநிதியம் தருதல் வேண்டும். பிறரிடம் சென்று நிதிபெற்றுத் தரவேண்டும். நாங்களும் தொகையைத் திரட்டுகிறோம்.

பாண்டித்துரை : மகிழ்வு! மகிழ்வு! இதைவிடச் சிறந்த பேறு என் வாழ்வில் எது வாய்க்கப் போகின்றது. இதோ! இப்போதே தாய்த்திருநாட்டிற்குக் காணிக்கையாக ரூபாய் ஒரு இலட்சத்தை முதல் காணிக்கையாகத் தந்தேன்.

பாரதி : அரசே! இத்திருப்பணியிலும் தாங்களே முடி மன்னர்!

வ.உ.சி. : தாங்கள் பிறருக்கு வழிகாட்டி என நிரூபித்து விட்டீர்கள்! வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இந்திய நாட்டவரின் தன்மானத்தைக் காப்பதற்காகக் கப்பல் விடும் திருப்பணிக்குப் பேருதவி செய்கின்றீர்கள்.

பாரதி : மன்னர் பெரும! தாங்களே இந்திய தேசிய கப்பல் குழுவிற்கும் தலைவராக அமர்ந்து எமக்கு வழிகாட்ட வேண்டும்.

பாண்டித்துரை : ஆகட்டும்! அவ்வாறே செய்வோம்! தங்கள் அன்பிற்கு என்றன் நன்றி! இந்நாட்டவரின் நன்றி!

ஒருவர் : வள்ளல் பெருமகனார்!

பிறர் : வாழ்க! வாழ்க!

ஒருவர் : வெள்ளை ஏகாதிபத்தியம்!

பிறர் : வீழ்க! வீழ்க!

(குரல் ஒலி) (இலங்கைக்கும் தூத்துக்குடிக்கும் இந்திய தேசியக் கப்பல்கள் பவனி

வருகின்றன. அனைத்துப் பொருள்களும் இக்கப்பல்களிலே ஏறுகின்றன, இறங்குகின்றன. எங்கும் கப்பல் பற்றியே பேச்சு! மக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சி! வெள்ளையர் கப்பல் ஓடாது வறிதே நிற்கின்றது. வெள்ளையர் முகத்தில் கரி பூசப்படுகின்றது! வெள்ளையர் வேதனைப்படுகின்றனர்! இச்செய்தி நெல்லை மாவட்ட ஆட்சியாளருக்கும் எட்டுகிறது. அவர் கிழக்கிந்தியக் கம்பெனியின் மேலிடத்திற்குத் தகவல் தருகிறார். பாண்டித்துரையார் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்படுகிறார்).

**காட்சி: 2**

| | | |
|---|---|---|
| களம் | : | நீதிமன்றம் |
| தூண்கள் | : | நீதிபதி, பாண்டித்துரை |
| காலம் | : | காலை |

| | | |
|---|---|---|
| நீதிபதி | : | நும் பெயர்? |
| பாண்டித்துரை | : | பாண்டித்துரை. |
| நீதிபதி | : | நீர் அரசரோ! |
| பாண்டித்துரை | : | தாங்கள் அறிந்ததே! |
| நீதிபதி | : | கேள்விக்குப் பதில் தேவை. |
| பாண்டித்துரை | : | பதிலுக்குப் பதில் தேவையில்லை! |
| நீதிபதி | : | பாலவ நத்தம் அரசரோ! நீர்! |
| பாண்டித்துரை | : | ஆம்! |
| நீதிபதி | : | நீர் ஆட்சி புரியும் பூமி எமக்குச் சொந்தம்! |
| பாண்டித்துரை | : | யார் சொன்னது? அது எமக்குப் பரம்பரை பரம்பரையாக தொன்றுதொட்டு, வாழையடி வாழையாக எமக்குச் சொந்தம் யாம் ஆண்டு வருவது! |
| நீதிபதி | : | இல்லை! அது எம் பிரிட்டிஷ் பேரரசின் ஆட்சிக்குட்பட்டது! |
| பாண்டித்துரை | : | இல்லை! இல்லை! அது எங்கள் சேதுபதி பேரரசின் ஆளுகைக்குட்பட்டது. |
| நீதிபதி | : | தாங்கள் உண்மையை மறைக்கிறீர்! |
| பாண்டித்துரை | : | தாங்கள் உண்மையை அறியாது உரைக்கிறீர்! |
| நீதிபதி | : | எங்கள் பிரிட்டிஷ் பேரரசின் கீழ் கடந்த 150 ஆண்டுகளாக இருந்து வருகிறது! |
| பாண்டித்துரை | : | இல்லை! இல்லவே இல்லை! அது இதிகாச காலம் முதல் எங்கள் ஆட்சியின் கீழ் இருந்து வருகிறது. |
| நீதிபதி | : | இந்த இந்திய தேசம் முழுவதும் எங்கள் விக்டோரியா மகாராணி ஆட்சியின் கீழ் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்குச் சொந்தம்! இது உமக்குத் தெரியாதா? |
| பாண்டித்துரை | : | இல்லை! இல்லை! இப்புண்ணியபூமி எங்களுக்குச் சொந்தம். |
| நீதிபதி | : | நீங்கள் எங்களுக்கும் கீழ்ப்பட்ட சிற்றரசர். |
| பாண்டித்துரை | : | இல்லை! நாங்கள் தங்களுக்கு மேற்பட்ட பேரரசர். |
| நீதிபதி | : | நீங்கள் எங்களுக்குக் கப்பம் கட்டி வருகிறீர்! |

பாண்டித்துரை : இல்லை! இல்லை! என்றுமே இல்லை! எங்களுக்குத்தான் பிறர் கப்பம் கட்டி வருகிறார்கள்.

நீதிபதி : நீங்கள் எப்படி எங்கள் கடலில் கப்பல் ஓட்டலாம்?

பாண்டித்துரை : யார்சொன்னது? உங்கள் கடலென்று! நீங்களா மண்வெட்டி எடுத்து, கடப்பாரை எடுத்து, தோண்டி, கடலை உண்டாக்கினீர்கள்?

நீதிபதி : கம்பெனியாரின் நலத்தைக் கெடுத்தீர்!

பாண்டித்துரை : நீங்கள்தான் எங்கள் வாழ்வைக் கெடுத்தீர்!

நீதிபதி : எங்கள் வியாபாரம் பாதிக்கச் செய்தீர்!

பாண்டித்துரை : யார் உங்களை வியாபாரம் செய்யச் சொன்னது?

நீதிபதி : இதோ! பிரிட்டிஷ் பேரரசின் உத்தரவு.

பாண்டித்துரை : அவர் யார்? உத்தரவு இட! அவர் வேண்டுமானால் உங்களுக்கு ராணியாக இருக்கலாம். உங்கள் நாட்டிற்கு உத்தரவு இடலாம். எங்கள் நாட்டிற்கு உத்தரவு போட அவர் யார்?

நீதிபதி : அவர்கள் ஆளுகைக்கு உட்பட்ட கடல். எனவே உத்தரவு இட்டுள்ளார்கள்.

பாண்டித்துரை : அவர் ஆளுகைக்கு உட்பட்ட பக்கிங்காம் கால்வாயில், தேம்ஸ் நதியில், ஆங்கிலக் கால்வாயில் கப்பல் ஓட்டலாம். எங்கள் கோலக்கடலில் கப்பல் ஓட்ட அவர் எப்படி உத்தரவு இடலாம்?

நீதிபதி : நீர் எப்படியும் எங்கள் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

பாண்டித்துரை : சொந்த வீட்டில் குடியிருக்க, யாரிடம் அனுமதி பெறவேண்டும்?

நீதிபதி : அப்படி என்றால் இந்தக் கடல் உங்களுக்குச் சொந்தம் என்கிறீர்!

பாண்டித்துரை : ஆம்! கடல் என்ன? அதிலே ஓடுகிற கப்பல், அதிலே உள்ள பொருள்கள், அதைச் சூழ்ந்துள்ள நாடு, நகரம் கழனி எல்லாம் எங்கள் உரிமை! எங்கள் சொத்து. பரம்பரை பரம்பரையாக அதை அனுபவிப்பது எங்கள் உரிமை! அவ்வுரிமையைப் பிறர் பறிக்காமல் காப்பது எங்கள் கடமை!



நீதிபதி : அப்படி என்றால் நாங்கள் உங்கள் உரிமையைப் பறிக்கிறோம்.

பாண்டித்துரை : ஆம்! அதிலென்ன ஐயம்? நூற்றுக்கு நூறு உண்மை!

நீதிபதி : எப்படி?

பாண்டித்துரை : இந்திய நாட்டிற்கு வியாபாரிகளாக வந்தீர்கள். இந்த நாட்டை ஆண்ட எங்கள் முன்னோரிடம் கெஞ்சிக் கேட்டு, சிறிய இடத்தைத் தானமாகப்

பெற்றீர்! பிறகு எங்களுக்கு இடையே பகை வளர்த்தீர்! ஒற்றுமையைக் குலைத்தீர்! இடையே புகுந்தீர்! ஒண்ட வந்த பிடாரியை ஊர்ப்பிடாரி ஒட்டியதுபோல் பின்னர் எமக்கே அரசர் என்று சொல்கிறீர்!

நீதிபதி : ஆக, நீர் எம்மையே குற்றம் சாட்டுகிறீர்.

பாண்டித்துரை : ஆம்! உண்மை! அதையே செய்கிறேன்!

நீதிபதி : இறுதியாக நீர் என்ன சொல்கிறீர்?

பாண்டித்துரை : உறுதியாகச் சொல்கிறேன்! இது எங்கள் நாடு! பேரின்ப வீடு! இது எங்களுக்கே உரிமை! எங்களுக்கே சொந்தம். இதனைத் தடுக்க, தகர்க்க யாராலும் முடியாது. அவ்வுரிமையை நிலைநாட்ட எல்லாவிதத் தியாகமும் செய்யச் சித்தமாய் இருக்கிறோம்.

நீதிபதி : அப்படி என்றால் எங்கள் ஆட்சியைக் கவிழ்க்கத் துணைபுரிகிறீர்!

பாண்டித்துரை : ஆம்! உங்களை விரட்டத் தலைமை தாங்கினேன் உங்களைப் பிடரியைப் பிடித்துத் தள்ளும் போருக்குத் தளபதி யான்!

நீதிபதி : ஆக, நீர் எங்கள் வியாபாரத்தைக் கெடுத்தீர்!

பாண்டித்துரை : ஆம்! தாங்கள் சொல்வது சரியே!

நீதிபதி : இப்போது நீர் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளீர். தங்களை நாங்கள் ஆட்சியிலிருந்து இறக்குகிறோம்! இன்றுமுதல் நீர் அரசரல்லர், சாதாரண குடிமகன்!

பாண்டித்துரை : யாரடா நீ! என்னை ஆட்சியிலிருந்து இறக்க! யாரடா நீ எனக்கு ஆணையிட! யாரடா நீ! என்னைச் சாதாரண குடிமகனாக்க! இந்த நாட்டின் சொந்தக்காரன் நான்! இந்த நாட்டின் உரிமைக்காரன் நான்! இந்த நாட்டின் முதல் மகன் நான்! யாரடா நீ! ஈராயிரம் மைல்களுக்கப்பால் இருந்து வந்த நீ! வயிற்றுப்பிழைப்பிற்காக வியாபாரம் புரியவந்த நீ! எங்களைக் கெஞ்சி, கொஞ்சி, பல்லைக் காட்டி, எங்கள் பாதுகாப்பில், எங்கள் துணையில் வாழ்வைத் துவங்கிய நீ! இன்று எங்களையே அடக்கி ஆள்கிறாய்! ஆணையிடுகிறாய்! எனக்கா நீ நாட்டைக் கொடுப்பது? ஆட்சியைக் கொடுப்பது? சீச்சீ உன் உயிரைக் காப்பாற்ற ஓடு! உன் கடமையைக் காப்பாற்ற ஓடு! உன் ஊருக்கே ஓடு ஓடு ஓடு !

(1887 இல் மாநகர் மதுரையில் இந்நிகழ்வு நிகழ்ந்தது)

– ப. சங்கரலிங்கனார்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் 1895 அக்டோபர் பதிமூன்றாம் நாள் விருதுநகரில் பெரிய கருப்பசாமி, மணியம்மை இணையருக்கு மகனாகப் பிறந்தார். விடுதலைப் போராட்டவீரர். தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்காக உண்ணாவிரதமிருந்து 1956 அக்டோபர் 13 அன்று உயிர்விட்டார். இவர் எழுதிய "வெற்றித்தூண்" என்ற நாடக நூலிலிருந்து இப்பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

### செயல்பாடுகள்

- சுதேசிக் கப்பல் என்ற நாடகத்தைக் குழுவில் கலந்துரையாடி சிறுகதையாக மாற்றி எழுதுங்கள்.
- 'விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.
- பள்ளியில் நடைபெறும் சுதந்திர தின விழாவில் உரையாற்ற 'தாய் மண்ணே வணக்கம்' என்ற தலைப்பில் சொற்பொழிவுரை தயாரியுங்கள்.
- பாரதி, வ.உ.சி, பாண்டித்துரை ஆகியோரின் தகவல்களைத் திரட்டி தன்விவரப்பட்டியல் தயாரியுங்கள்.

## கேரளத்தின் மகிமை



கோளத்தின் மகிமைசொல்ல யாரே வல்லார்?
கீர்த்தியிலே இவளைவெல்ல யாரே உள்ளார்?
கோரமுடன் பரசுராமன் எறிந்த மழுவால்
கோலமுடன் பிறந்ததன்றோ கொஞ்சும் பூமி!
சேரநாடு தமிழகத்தின் பாக மன்றோ!
சேரநாடே கேரளமாய்த் திரிந்ததன்றோ!
சேரநாட்டில் தமிழ்மொழியின் வளமையென்னே!
சேர்ந்துபாடிக் கேரளத்தைப் புகழ வாரீர்!

எடுப்பாக ஆண்டனரே மன்னர் பலரும்
எத்தனையோ துறையிலவர் துலங்கி நின்றார்!
துடிப்புடனே ஆண்டுநின்றார் மார்த்தாண் டர்தாம்!
தூரிகையால் துலங்கிநின்றார் இரவி வர்மா!
எடுப்பான பாடலதால் சுவாதித் திருநாள்
எழுப்பிட்டார் அவனியையே எவரே மறுப்பார்?
வெடுக்காகச் செயல்புரியும் விந்தை யாலே
வியந்துநின்றோம் கேரளத்தை வாழ்த்தி நின்றோம்!

சிலப்பதிகா ரத்துடனே மனோன் மணீயம்
சிறந்தபதிற் றுப்பத்தும் ஞான உலாவும்
மலர்ந்துமணம் பரப்பிநின்ற கேர ளத்தின்
மலையாள மொழிவளர்ச்சி மலைக்க வைக்கும் !
புலமைமிகும் ஆசானும் புகழின் உள்ளூர்
புரட்சிமிகு வள்ளத்தோள் குஞ்சன் நம்பியார்
தலைமைமிகு கலிதந்த தங்க பூமி
தலைதாழ்த்தி வாழ்த்திடுவோம்! வாழ்க வாழ்க!

வானுயர்ந்த மலைகளையும் வனப்பார் காயல்
வாழவைக்கும் கடலோடு வளமார் நதிகள்
கானுடனே நன்செய்யும் காட்சிக் கினிய
கவர்ந்திழுக்கும் இயற்கையெலாம் பெற்ற நாட்டில்
மானொத்த அருட்பார்வை மக்க ளெல்லாம்
மலையாளம் தமிழோடு கன்ன டந்தான்
தேனொத்துப் பேசுதலைப் பார்த்துப் பார்த்துத்
தெவிட்டாமல் இன்புறுவோம் வாரீர்! வாரீர்!

எழுத்தறிவில் முதல்நிலையை இசைத்த பூமி!
எழுச்சியுடன் புரட்சிபல ஏற்ற பூமி!
பழுத்தகலை பரந்தொளிரும் பண்பின் தேசம்!
பண்போடு பல்லாற்றல் பெற்ற தேசம்!
விழிப்புடனே காலமொத்து விரையும் நாடு!
வியன்நாரா யணகுருவும் பிறந்த நாடு!
செழிப்புடைய தாக்கிடவே சேர்ந்து நிற்போம்!
சேமமெலாம் பெற்றுநாமும் சிறந்துவாழ்வோம்!

– குற்றாலதாசன்

**ஆசிரியர் குறிப்பு :** இவரது இயற்பெயர் கே. என். பெருமாள். இவர் கேரளத்தில் மேல்நிலைப் பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். இவர் எழுதிய குற்றாலதாசன் கவிதைகள் என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து இப்பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- 'கேரளத்தின் மகிமை' என்ற கவிதையில், கேரள மண்ணிற்கு புகழ்ச்சேர்த்த சான்றோர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். அச்சான்றோர்களின் பெயர்களைப் பட்டியலிடுங்கள்.
- கீழ்க்காணும் பாடலடிகளை நயம் பாராட்டி எழுதுங்கள்.

  "வானுயர்ந்த மலைகளையும் வனப்பார் காயல்
  வாழவைக்கும் கடலோடு வளமார் நதிகள்
  கானுடனே நன்செய்யும் காட்சிக் கினிய
  கவர்ந்திழுக்கும் இயற்கையெலாம் பெற்ற நாட்டில்
  மானொத்த அருட்பார்வை மக்க ளெல்லாம்
  மலையாளம் தமிழோடு கன்ன டந்தான்
  தேனொத்துப் பேசுதலைப் பார்த்துப் பார்த்துத்
  தெவிட்டாமல் இன்புறுவோம் வாரீர்! வாரீர்!"
- கேரளத்தின் தனிச்சிறப்புகளாக நீங்கள் அறிந்தவற்றை வரிசைப்படுத்தி எழுதுங்கள்.

## தாயகம் காத்துநில்

2026 ஜனவரி 11,
அனந்தை நகர்.

அன்புள்ள பாண்டியனுக்கு,

நலம். உன் கடிதம் கிடைத்தது. தாய் மொழியை எவ்வாறு பேணி வளர்க்க வேண்டும். ஏன் பேணி வளர்க்க வேண்டும் என்பனவற்றை நன்கு புரிந்து கொண்டதாக எழுதியிருக்கிறாய். மிக்க மகிழ்ச்சி. மொழிப் பற்றைப் பற்றி முதற் கடிதத்தில் எழுத நேர்ந்தது. அதைத் தொடர்ந்து நாட்டுப் பற்றையும் விளக்கி இக்கடிதத்தில் எழுத எண்ணுகிறேன்.

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே'

என்று பாரதியார் பாடியிருக்கிறார். வானுலக இன்பஞ் சிறந்தது. அவ்வின்பத்தைத் தவஞ் செய்து பெறவேண்டும். அத்தவத்தாற் பெற்ற வானுலக இன்பத்தைவிடச் சிறந்தவள் தன்னையீன்றெடுத்த தாய். அத்தாய்க்கு நிகராக மற்றொன்றுண்டா? உண்டு; அதுவே, தான் பிறந்த நாடு. அதனாற்றான் தான் பிறந்த நாடு, தாய் நாடு எனவும் தாயகம் எனவும் மொழியப்படுகிறது. அதனால் ஒருவன், தன் தாயை எவ்வாறு மதித்துப் போற்றி வணங்கிக் காக்கின்றானோ அதைப் போலவே, தன் தாயகத்தையும் மதிக்க வேண்டும்; போற்ற வேண்டும்; வணங்க வேண்டும். தாயகத்தை வணங்குவதற்கும், மதித்துப் போற்றுவதற்கும் காரணமென்ன? என்ற வினாவிற்குக் கவியரசர் பாரதியார் தரும் விடையை உனக்குத் தருகிறேன். அப்பாடலை நன்கு நெஞ்சில் நிறுத்திப் போற்ற வேண்டும் என்ற எண்ணத்தால் தருகிறேன்.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே – அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே – அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே – இதை
வந்தனைகூறி மனத்தில் இருத்தியென்
வாயுற வாழ்த்தேனோ?"

இப்பாடலில் இறுதியடியை நன்கு நோக்குதல் வேண்டும். செயல், நினைவு, சொல் இம்மூன்றாலும் வாழ்த்துவதாகக் கூறுகிறார். வெறும் வாயளவில் நாட்டை வாழ்த்துவதிற் பயனில்லை. மனத்தால், செயலால் வாழ்த்த வேண்டும் என்னுங் கருத்தை நமக்குக் குறிப்பால் உணர்த்துகிறார்.

அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் நாட்டுப்பற்றையூட்டும் முறை வேறு; உரிமை பெற்ற பின்னர் உண்டாக்க வேண்டிய நாட்டுப் பற்று வேறு. அடிமைக் காலத்தே, மக்கள் நெஞ்சங்களில் இந்த நாடு நமக்குச் சொந்தமானது என்ற உணர்ச்சியை ஊட்ட வேண்டும். அவ்வுணர்ச்சியை

ஒன்று திரட்ட வேண்டும்; விடுதலை யுணர்வை, போராட்ட எழுச்சியை உண்டாக்க வேண்டும். இதற்கு வெறும் முழக்கங்கள் மட்டுமே போதும். அந்த அளவில் நாட்டுப் பற்று அமையும். ஆனால், உரிமை பெற்ற பிறகு முழக்கங்கள் மட்டும் நாட்டுப் பற்றாகிவிடா. அமைதியாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். அதுதான் நாட்டுப் பற்றாகக் கருதப்படும். உரிமை பெற்ற பின்னரும் செயலாற்ற முற்படாது, முழக்கங்களையே நம்பிக்கொண்டிருந்தால் நாட்டுக்கு நன்மை காண முடியாது.

தாய்மொழிக்கு ஆக்கந்தேட வேண்டும்; சமுதாயத்தைப் பாழ்படுத்தும் ஏற்றத் தாழ்வுகளை அகற்ற வழிகளைக் காணவேண்டும்; பொருளாதாரத் துறையில் சுரண்டலற்ற சமதர்ம நெறியைப் புகுத்த வேண்டும். சிறுதொழில்கள், பெருந்தொழில்கள் வளர்ச்சி பெறத் திட்டங்கள் தீட்டிச் செயற்பட வேண்டும்; இல்லாமையுங் கல்லாமையும் ஒழிந்து, பசிப்பிணி தொலைந்து, தன்னிறைவு பெற்றுச் செழிப்பும் களிப்பும் நிறைந்த புதியதோர் உலகைப் படைக்க முனைதல் வேண்டும். இம்முயற்சிகளில் ஈடுபடுவதும் ஈடுபடுவோர்க்கு ஒத்துழைப்பு நல்குவதும் நாட்டுப்பற்றாகும். இவற்றிற்குக் குந்தகம் ஏற்படுத்தினால் அது தேசத்துரோகமாகும்.

வாழ்க தாயகம் ! வெல்க தாயகம்!

இங்ஙனம்,
அறிவுடை நம்பி.

– கவியரசர் முடியரசன்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் 1920–ஆம் ஆண்டு அக்டோபர் 7–ஆம் தேதி தேனி மாவட்டம், பெரியகுளத்தில் சுப்பராயலு–சீதாலட்சுமி தம்பதியருக்கு மகனாய்ப் பிறந்தார். இவரது இயற்பெயர் துரைராசு. ஏராளமான கவிதை, காப்பிய, இலக்கண, கட்டுரை நூல்களைப் படைத்துள்ளார். காவியப் பாவை, வீரகாவியம், அன்புள்ள இளவரசனுக்கு, தாய் மொழி காப்போம் போன்ற நூல்கள் உட்பட 25 நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார். புதுமைக் கவிஞர் எனப் போற்றப்படுகின்றார். 1998–ஆம் ஆண்டு டிசம்பர் 3–ஆம் நாள் இயற்கை எய்தினார்.

## செயல்பாடுகள்

- அறிவுடை நம்பி தனது நண்பனுக்கு எழுதியக் கடிதத்தில் நாட்டுப்பற்றைப் பற்றி விளக்கியிருப்பதைப் படித்தீர்களல்லவா? இதைப் போன்று பல்வேறு புலவர்கள் எழுதிய நாட்டுப்பற்று கவிதைகளைச் சேகரித்து வகுப்பறையில் வெளியிடுங்கள்.

- கவிதையை முழுமைப்படுத்துங்கள்

  பிறந்த நாட்டைப் போற்றுவோம்
  சிறந்த நாட்டைப் பேணுவோம்
  பெற்ற தாயும் பிறந்த நாடும்
  இரண்டு கண்களெனப் பேணுவோம்
  ………………………………………………….
  ………………………………………………….




- உங்கள் பள்ளியில் நடைபெற்ற சுதந்திரதினவிழா குறித்த அனுபவத்தை விளக்கி நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.

# தேன்மொழி




## தமிழின் இனிமை

கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும் – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

பொழிலிடை வண்டின் ஒலியும் – ஓடைப்
புனலிடை வாய்க்கும் கலியும்,
குழலிடை வாய்க்கும் இசையும் – வீணை
கொட்டிடும் அமுதப் பண்ணும்,
குழவிகள் மழலைப் பேச்சும் – பெண்கள்
கொஞ்சிடும் இதழின் வாய்ப்பும்,
விழைகுவ னேனும், தமிழும் – நானும்
மெய்யாய் உடலுயிர் கண்டீர்!

பயிலுறும் அண்ணன் தம்பி – அக்கம்
பக்கத் துறவின் முறையார்,
தயைமிக உடையாள் அன்னை – என்னைச்
சந்ததம் மறவாத் தந்தை,
குயில்போற் பேசிடும் மனையாள் – அன்பைக்
கொட்டி வளர்க்கும் பிள்ளை,
அயலவ ராகும் வண்ணம் – தமிழ்என்
அறிவினில் உறைதல் கண்டீர்!

நீலச் சுடர்மணி வானம் – ஆங்கே
நிறையக் குளிர்வெண் ணிலவாம்,
காலைப் பரிதியின் உதயம் – ஆங்கே
கடல்மேல் எல்லாம் ஒளியாம்,
மாலைச் சுடரினில் மூழ்கும் – நல்ல
மலைகளின் இன்பக் காட்சி,
மேலென எழுதும் கவிஞர் – தமிழின்
விந்தையை எழுதத் தரமோ?

செந்நெல் மாற்றிய சோறும் – பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்,
தன்னிகர் தானியம் முதிரை – கட்டித்
தயிரொடு மிளகின் சாறும்,
நன்மது ரஞ்செய் கிழங்கு – கானில்
நாவி லினித்திடும் அப்பம்,
உன்னை வளர்ப்பன தமிழா! – உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே!

– பாரதிதாசன்

**ஆசிரியர் குறிப்பு :** பாரதிதாசனின் இயற்பெயர் கனகசுப்புரத்தினம் ஆகும். இவர் சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால், 'பாரதிதாசன்' என்று தம் பெயரை மாற்றிக் கொண்டார். இவர் 'புரட்சிக்கவிஞர்" என்று அழைக்கப்படுகிறார். பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், இருண்ட வீடு, குடும்ப விளக்கு, ஆகிய படைப்புகள் குறிப்பிடத்தக்கன.

## செயல்பாடுகள்

- இப்பாடலில் இடம்பெறும் கடினச் சொற்களைக் கண்டறிந்து அகரவரிசைப்படுத்தி பொருள் எழுதுங்கள்

- "நனிபசு பொழியும் பாலும் – தென்னை
  நல்கிய குளிரிள நீரும்
  இனியன என்பேன் எனினும் – தமிழை
  என்னுயிர் என்பேன் கண்டீர்!" – பாரதிதாசன்

  "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
  இனிதாவது எங்கும் காணோம்" – பாரதியார்

  இப்பாடல்களின் கருத்துகளை ஒப்பீடு செய்து எழுதுங்கள்.

- இப்பாடப்பகுதியைப் படித்தீர்கள் அல்லவா! இதுபோன்று தமிழின் பெருமையை விளக்கி ஒரு கவிதை எழுதுங்கள்.

## தாய்மொழிப் பற்று

கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதிரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து, வாழ்த்துதுமே!

என்று பாடுகின்றார், மனோன்மணீயம் யாத்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. அந்தச் சான்றோர் வழிநின்று, அருந்தமிழ் அன்னையின் மணிபலர்ப் பாதம் பணிந்து அவையோர்க்குக் கரம்கூப்பி வணங்கித் தொடங்குகிறேன் என்னுரையை......!

இன்றைய சொற்பெருக்கு அரங்கில் பேசுவதற்காக நான் எடுத்துக் கொண்ட தலைப்பு. "ஒருவருக்குத் தாய்மொழிப் பற்று இருக்க வேண்டியதன் அவசியம்" என்பதாகும். தலைப்பிலேயே அவசியத்தின் இன்றியமையாமை வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. ஆம்; "தாய்மொழி" என்ற சொல்லிலேயே "அவசியம்" என்பது அடங்கிக் கிடக்கின்றது.

பெற்றவளே தாய், பிறப்பின் முதல் சந்திப்பே தாய், ஊட்டி வளர்ப்பவளும் தாய், உறுத்து வளர்ப்பவளும் தாயே.... அந்தத் தாய்க்கு இணையாக ஆன்றோரால் குறிக்கப் பெற்றவை தாய்மொழியும் தாய்நாடும் ஆகும். அன்புப் பாலுட்டி வளர்ப்பாள் தாய், அறிவுப் பாலூட்டி வளர்க்கும் தாய்மொழி. பந்த பாசங்களை உணர்த்துவாள் தாய். பண்பாட்டுப் பெருமிதங்களை உணர்த்தும் தாய்மொழி. அத்துடன், சிந்தனைச் செறிவுகளை ஊட்டி மகிழும் தாய்மொழி. இந்தச் சொற்றொடருக்கு ஒரு விளக்கம்.

சாதாரணமாக ஒரு நீண்ட கூட்டல் கணக்கு, சரளமாகக் கற்று வரும் ஆங்கிலத்தில் எண்ணிக் கூட்டும் ஒருவர் பலமுறை கூட்டிப் பார்க்கும் போது பல்வேறு தொகை வந்தமையால், வருந்தி, இறுதியாகச் சிந்தனையை ஒரு நிலைப்படுத்திக் கொண்டு தம் தாய்மொழியில் எண்ணிக் கணக்கிடத் தொடங்குகின்றார்.




ஓரமைதியோடு ஓரிரு முறை கூட்டிக் கணக்கிட்டு முடிக்கின்றார்; திருப்திப்படுகின்றார். அது போலவே, பிறமொழி ஒன்றில் கட்டுரை அல்லது கதை எழுதப்போகும் ஒருவர் கற்பனை செய்வதும் சிந்தித்துத் தெளிவதும் தம்முடைய தாய்மொழியில்தான் என்று துணிந்து கூறலாம், மனச்சாட்சி உள்ளோர் இதனை மறுக்க மாட்டார்கள்.

என்றும் எக்காலத்தும் அறிவுப் பாலூட்டும் அன்னையாகத் திகழ்வது தாய்மொழியே. ஆகவேதான், பாட்டுக்கொரு புலவர் பாரதியாரின் தாசனான பைந்தமிழ்ப் புரட்சிக் கவிஞன் பாவேந்தன் பாரதிதாசன்,

> தாயை இகழ்ந்தானைத்
> தாய் தடுத்தால் விட்டுவிடு;
> தமிழ் தடுத்தால் விட்டுவிடு;
> தமிழை இகழ்ந்தானைத்
> தாய் தடுத்தாலும் விடாதே; அந்தத்
> தமிழே தடுத்தாலும் விடாதே!

என்று வீர முழக்கமிட்டு அறிவுறுத்துகின்றார். இத்தகைய தாய்மொழிப்பற்று எல்லோர்க்கும் இந்த உலகில் ஒவ்வொருவர்க்கும் இருக்க வேண்டும் என்று இதயமார்ந்து கூறுவேன்.

அடுத்து, பழந்தமிழ்ப் பாவலர் ஒருவர் கூறும் கவிதை வரிகளை இங்கு நினைவு கூர்ந்திட விரும்பி விழைகின்றேன்.

> இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்
> விருந்தமிழ்தம் வேண்டிடினும் வேண்டேன்.

தமிழே ......தாயே...!... நீ இந்த உலகத்தில் இருப்பதனால் இங்கு உயிர்தரித்து வாழ்கின்றேன். நீயில்லாத உலகத்தில் தேவலோக தேவர்களுக்கு மட்டுமே கிடைக்கப் பெறுகின்ற சாவா மருந்தெனினும் அமிழ்தமே கிடைக்கப்பெற்று இறவாத் தன்மை பெறுவேனாயினும் அதனை ஏற்க மாட்டேன் செத்தொழிவேன் என்பது கவிதை அடிகளின் விளக்கம். இவ்வாறு கூறும் புலவர்தம் வாய்மொழியிலிருந்து தாய்மொழிப் பற்று ஒவ்வொருவருக்கும் எந்த அளவுக்கு உணர்ச்சி பூர்வமாக இருக்க வேண்டும் என்பதைத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

இத்தகைய இலக்கியச் சான்றுகள் எத்தனை எத்தனை வேண்டுமாயினும் எடுத்துச் சொல்லலாம் என்றாலும், எனக்களிக்கப்பட்டுள்ள நேரம் கருதி என்னுரையைச் சுருக்குகின்றேன்.

இறுதியாக, இருபதாம் நூற்றாண்டின் இன்றைய காலக் கட்டத்தில் நம்மோடு வாழ்ந்து வரும் ஒரு கவிஞர் இவ்வாறு கூறுகின்றார்.

"செத்தாலும் என்றன் சாம்பல் தமிழ் மணந்து சாக வேண்டும்" இந்தக் கவிஞரின் உயிர்த் துடிப்பான கவிதை அடிகளை தமிழ்பேசுவோர் ஒவ்வொருவரும் ஏற்றுப் போற்றித் தாய்மொழிப் பற்றுமிக்க தமிழராக வாழ்ந்துய்ய வேண்டும் என்று பணிவார்ந்து கேட்டுக் கொண்டு இனிதார்ந்து என்னுரை கேட்டிருந்தோர் அனைவருக்கும் இதய நன்றி உரித்தாக்கி இனிது முடிக்கின்றேன்; வணக்கம்.

– மு. தங்கராசன்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் நாடகம், சிறுகதை, கவிதை, மாணவர்களுக்கான கட்டுரைத் தொகுப்பு போன்ற வடிவங்களில் எழுதியுள்ளார். தாழம்பூ, வானவில், அத்தை மகன் போன்ற நாடகங்களையும், மணக்கும் மல்லிகை, சிந்தனைப் பூக்கள் போன்ற சிறுகதை தொகுப்புகளையும், பனித்துளிகள் உதயம், மகரந்தம் முதலிய கவிதைத் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார்.

### செயல்பாடுகள்

- தாய்மொழி நமக்கு உயிர் போன்றது என்ற கருத்தை இப்பாடப்பகுதியின் மூலம் உணர்ந்து கொண்டீர்களல்லாவா? உங்கள் பள்ளி இலக்கிய மன்ற விழாவிற்கு எழுத்தாளர் மு. தங்கராஜ் வருகை தரவுள்ளார். அவரை வரவேற்க வரவேற்புரை தயாரியுங்கள்.
- உங்கள் பள்ளியில் நடைபெறும் பாரதி விழாவில் சிறப்புரையாற்ற எழுத்தாளர் திரு. நீலபத்மநாபன் அவர்கள் வருகை தர உள்ளார். இந்நிகச்சியைப் பொதுமக்களுக்கு அறிவிக்கும் விதமாகச் சுவரொட்டி தயாரியுங்கள்.
- கல்வி கற்கச் சிறந்தது தாய்மொழிக் கல்வியா? ஆங்கிலக் கல்வியா? என்னும் தலைப்பில் நடைபெற விருக்கும் விவாத அரங்கில் நீங்கள் விரும்பும் தலைப்பில் பேச குறிப்பு தயாரியுங்கள்.

## இனிமை சிறப்பு

தமிழ் என்பதற்கு இனிமை என்றும் ஒரு பொருளுண்டு. இதனை "இனிமையும் அழகும் தமிழ் எனல் ஆகும்" என்பதனால் நன்கறியலாம். தீந்தமிழ், தேந்தமிழ் போன்ற அடைமொழிச் சொற்களும் இதனை மெய்ப்பிக்கும்.

"பசி இல்லாவிடில் இந்தப் பாலையாவது குடியுங்கள்" என்ற தன் மனைவியை நோக்கிப் புலவர் ஒட்டக் கூத்தர் கூறியது இது.

"போடி பைத்தியக்காரி! இன்று அரசவையில் புகழேந்தி அரங்கேற்றிய நளவெண்பாவில் இரண்டொன்றைப் பிழிந்து கொடுத்தாலாவது அதன்

சுவைக்காக உண்ணலாம். உன் பாலில் என்னடி சுவையாயிருக்கப் போகிறது?"

என்னே தமிழின் சுவை!

"அறம் வைத்துப் பாடியுள்ள இக்கலம்பகத்தைக் கேளாதீர்கள். கேட்டால் தங்களின் உயிரே போய்விடும்" எனப் பாடிய புலவனே கூறித் தடுத்தபோதும், அதனைக் கேட்க விரும்பிய நந்திவர்ம மன்னன் கூறியது என்ன தெரியுமா?

"தமிழைச் சுவைப்பதன் மூலம் சாவே வரினும் அதனை மகிழ்வோடு வரவேற்பேன்" என்பதே.

என்னே தமிழின் இனிமை!

தன்னைப் பித்தன் என்று சுந்தரமூர்த்தி நாயனார் வைதபொழுது இறைவன் பெரிதும் மகிழ்ச்சியடைந்தாராம். காரணம் தமிழால் வைதான் என்பதே. இதனாலேயே இறைவனுக்குத் தமிழால் வைதாரையும் வாழவைப்போன் என்ற பெயரும் ஏற்பட்டிருக்கிறது.

புதிதாக இல்லறத்தில் வலக்காலை எடுத்து வைக்கும் மணமக்களை நோக்கி "தமிழும், அதன் இனிமையும் போல ஒன்றுபட்டு வாழுங்கள்" என்று நல்லறிஞர்கள் வாழ்த்துக் கூறி வருவது தமிழகத்தின் வழக்கமாக இருந்து வருகிறது.

### வியங்கோள் வினைமுற்று

அருணா : செழியா! நம் இலக்கிய மன்றத்தில் சுதேசிக்கப்பல் நாடகம் நடிக்கப்பட்டதல்லவா? அதில் மக்கள் இணைந்து வாழ்க! வாழ்க! என்று கூறும் காட்சி அருமையாக இருந்தது.

செழியன் : ஆமாம்... ஆமாம் அக்காட்சியில் நடித்த கபிலனும் பாரதியும் உணர்ச்சி பொங்க நடித்திருந்தனர்.

அருணா : வாழ்க! என்று கூறும் சொல் வெறும் நடிப்புக்காக மட்டுமல்ல. உள்ளார்ந்த உணர்ச்சியையும் வெளிப்படுத்துகிறது தானே!

செழியன் : ஆமாம் இது போலவே வெல்க, வீழ்க, ஒழிக, வருக எனப் பல சொற்களும் நம் தமிழில் உள்ளன.

அருணா : நானும் படித்துள்ளேன். இந்தச் சொற்கள் தமிழிலக்கணத்தில் வியங்கோள் வினைமுற்று எனப்படுகின்றன.

செழியன் : வினைமுற்று படித்துள்ளேன்; அதென்ன வியங்கோள் வினைமுற்று?

அருணா : ம்ம்ம்.... கூறுகிறேன் கேள்! வினைமுற்றுச் சொல் வாழ்த்தல், வைதல், விதித்தல், வேண்டல், என்னும் பொருள்களில் வரும். உதாரணமாக "மாதம் மும்மாரி பொழிக" இத்தொடரில் பொழிக என்னும் சொல் வியங்கோள் வினைமுற்று ஆகும்

செழியன் : அப்படியா! நான்கு பொருள்களில் வினைமுற்று வரும் என்றாயே, சான்று கூறேன்.

அருணா : நிச்சயம் கூறுகிறேன் கேள்!

வாழ்த்தல் – வெல்க, வாழ்க
வைதல் – வீழ்க, ஒழிக
விதித்தல் – வருக, உண்க
வேண்டல் – அருள்க, கருணைபுரிக

சான்று கூறியதும் புரிந்திருக்குமே!

செழியன் : நன்றாகப் புரிந்தது அருணா. நாம் அடிக்கடி பயன்படுத்தும் சொற்கள்தானே! தகவலைப் பகிர்ந்தமைக்கு மிக்க நன்றி. வாழ்க! உன் தமிழ் பற்று.

நன்றி என்பதைக் குறிக்கும் "தாங்க்ஸ்" என்ற ஆங்கிலச் சொல்லும், நல்லது என்பதை குறிக்கும் "அச்சா" என்ற இந்திச் சொல்லும், அதன் வலிய ஒலியால் அச்சுறுத்துவது போலத் தோன்றும். தமிழில் நன்றி, வணக்கம் என்பது மட்டுமல்ல. 'இது மக்கள் தன்மைக்கு ஒவ்வாதது' என்று வைவதுகூட அதன் மெல்லோசையால் வாழ்த்துவது போலத் தோன்றும். இது நமது மொழியில் இயல்பாகவே அமைந்துள்ள ஒன்று. என்னே தமிழின் இனிமை!

கொல்லிமலைக் காட்டிலுள்ள ஓர் ஆளிடம் தேன் கொண்டு வரும்படி சொல்லியிருந்தேன். அவன் அன்று வராமல் மறுநாள் வந்து வெறுங்கையோடு நின்றதால் சிறிது கோபித்தேன் அவன் பேசினான்.

"நேற்றே மலைக்கு நடந்தேன். பலவிடங்களில் அலைந்தேன். இறுதியில் பெரும் பாறைத்தேன் கண்டு சிறிது மலைத்தேன். ஒரு கொடியைப் பிடித்தேன். ஏறிச் சென்று கலைத்தேன். சட்டியில் பிழிந்தேன். நன்றாக வடித்தேன். அதனைக் கண்டு மகிழ்ந்தேன். அதில் சிறிது குடித்தேன். களித்தேன், களைத்தேன், அயர்ந்தேன், மறந்தேன், இன்று காலை எழுந்தேன், நினைத்தேன், தேனை அடைத்தேன், எடுத்தேன், விரைந்தேன், நடந்தேன், வந்தேன், சேர்ந்தேன். இப்போதுதான் உங்கள் ஆளிடம் கொடுத்தேன் என்று.

நானும் இதைக் கேட்டு மகிழ்ந்தேன். அவனுக்கு உரியதையும் தந்தேன் அடடா! எப்படி தேன்? எவ்வளவு தேன்? ஒவ்வொரு சொல்லிலும் தேன் சொட்டுகிறதே! இதைப் பார்த்தேன், குடித்தேன் என்று கூறாமல் "படித்தேன்" எனக் கூறுங்கள். அப்பொழுதுதான் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு படி 'தேன்' என ருசிக்கும். என்னே தமிழின் இனிமை!

– கி. ஆ. பெ. விஸ்வநாதம்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் முத்தமிழ் காவலர் என்ற பெயரில் அறியப்படுகிறார். அறிவுக்கதைகள், அறிவுக்கு உணவு, தமிழ் மருந்துகள், தமிழின் சிறப்பு, வள்ளுவரும் குறளும் போன்ற நூல்களை எழுதியுள்ளார். இவர் தமிழ் மீது மிகுந்த பற்றுடையவர்.

## செயல்பாடுகள்

- தேனை ஈற்றில் கொண்ட தமிழ்ச்சொற்களைப் பாடப்பகுதியிலிருந்து பட்டியலிடுங்கள்.
- தமிழின் பெருமையை உணர்த்தும் பாடல் வரிகளைத் தொகுத்து எழுதுங்கள்.
- தாய்மொழி தினத்தன்று தமிழ்மொழியைப் பாதுகாப்பதை வலியுறுத்தி பள்ளிக் காலைக் கூட்டத்தில் வாசிப்பதற்கான உறுதிமொழி ஒன்று தயாரியுங்கள்.
- பள்ளி இலக்கிய மன்றம் சார்பாக "உயர்தனிச் செம்மொழி தமிழ்மொழி என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்துங்கள்."



அலகு 6

# வானமே எல்லை



இன்றைய சூழ்நிலையில் காலநிலை கட்டுக்கடங்காமல் மாறிக்கொண்டிருக்கிறது. எனவே, நாம் அவ்வப்போது பெரும் பேரிடர்களைச் சந்தித்து வருகிறோம். காலநிலையில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்களையும் அதன் விளைவுகளிலிருந்து மீளுவதற்கான வழிமுறைகளையும் அறிந்துகொள்வதே இவ்வலகின் நோக்கமாகும். பல்வேறு மொழி வெளியீட்டு வடிவங்களின் வாயிலாக இதற்கான மனப்பான்மையை மாணவர்கள் பெறும் வகையில் பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

# கார்மேகம்



## பெருவெள்ளச் சிந்து

*தங்கச்சிந்து*

சீர்பெருகும் பிலவஆண்டு மிதுனத் திங்கள்
செப்பரிய தேதியது இருபத் தொன்றில்
பேர்பெருகும் புதன்கிழமை வானி யாற்றில்
பெருக்கெடுத்து நதிக்கடுத்த ஊர்கள் தோறும்
நேர்பெருகும் கழனிகளும் வாழை செந்நெல்
நிர்த்தூளி ஆக்கிமிகச் சூறை யாடிப்
பார்புகழும் கனவான்கள் எளியோர் எல்லாம்
பரிதவித்த சரித்திரத்தைப் பகரு வோமே.

*நூல்*

மங்கலம் மிகுந்த மதராசுக் கோரு
கொங்குமலிந் தோங்கும் குடகுமலை யாளம்
எங்கும்மழை பெய்து ஏராளமாய் நீரு
கங்கையெனும் வானியாற்றில் – என் தங்கம் கரைபுரண்டு வந்ததடி

நீலகிரிச் சார்பில் நீர்பெருகி வந்து
மூலைமுடுக் கெல்லாம் முட்டிமுட்டிப் பாய்ந்து
பாலங்களைத் தாண்டிப் பரவிக்கடல் போல
நாலுதிசை யும்பெருகி – என் தங்கம் நதிபெருகிப் போச்சுதடி

தோட்டங்களில் சென்று துலைகளை இடித்துப்
போட்டிருந்த தட்டுப் போர்களை அழித்து
காட்டிலெல்லாம் பாய்ந்து கனபயிரை மூழ்கி
வாட்டமில் லாமல்தண்ணீர் – என் தங்கம் வந்ததென்ன சொல்வேனடி

நஞ்சையிலே சென்று நாலுதிசை பாய்ந்து
நெஞ்சுகள் பதைக்க நெற்பயிரை வாரி
கொஞ்சநஞ்சம் அல்ல கொண்டுபோன கன்னல்
வஞ்சியிள வாழைகளை – என் தங்கம் வாரிக்கொண்டு போனதடி

பட்டிப்படல் மிக்க பருத்திகளும் இன்னும்
குட்டிக்கு டாப்பு குடிசைகளைப் பேர்த்துக்
கட்டிவைத்த சாலை கலப்பைகளைத் தூக்கி
மட்டுமித மில்லாமலே – என் தங்கம் மாநதியில் போச்சுதடி

ஆடுகளும் குட்டி அடைத்திருக்கும் பட்டி
மாடுகளும் கன்று மரங்களையும் தள்ளி
வீடுகளில் சென்று வெள்ளமும் திரண்டு
தேடிவைத்த பண்டமெல்லாம் – என் தங்கம் திரட்டிக்கொண்டு போனதடி

ஊருகளில் மிக்க உற்றசன மெல்லாம்
காரணம் மிகுந்த கடவுளரைக் குறித்துப்
பூரணமாய் தங்கள் புத்திதடு மாறி
வேறிடங்கள் போவதற்கு – என் தங்கம் வெளியேபுறப் பட்டாரடி

தட்டுமுட்டு எடுப்பார் தவலைசொம்பு எடுப்பார்
பெட்டிகளைத் தூக்கிப் பெரியோர்களைத் தாங்கி
தொட்டிலை அவிழ்த்துத் தூங்கும்சிசு எடுப்பார்
கட்டிலுடன் மெத்தைகளும் – என் தங்கம் கடுக எடுத்தாரடி

கம்புராகி தவசம் கட்டிவைத்தே யிருக்கும்
இன்பமுள்ள மூட்டை எடுத்துக்கொண்டு சென்று
நம்பிக்கை உள்ள நன்மனையில் போட்டுத்
துன்பமுற்ற தென்றுசொல்லி –என் தங்கம் துயரமிகப் பட்டாரடி

ஆடைகளும் அணிகள் அடுக்குமிடா தோறும்
கூடைகள் முறங்கள் குத்துகின்ற உலக்கை
வீடுகளில் உள்ள விளக்குகளும் எண்ணைச்
சாடிகள் எடுத்துக்கொண்டு – என் தங்கம் ஜல்தி நடந்தாரடி

வெள்ளமும் திரண்டு வீதிகளில் சென்று
துள்ளிய அலைகள் சுவர்களிலே மோதித்
தள்ளிய அலைகள் தரையில்விழக் கண்டு
உள்ளவர்கள் எல்லோர்களும் – என் தங்கம் ஓட்டம் எடுத்தாரடி

– ஜம்பை காசிம்புலவர்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் 1938–ஆம் ஆண்டு ஜனவரி 2–ஆம் நாள் கோவையில் பிறந்தார். இவரது பெற்றோர் ந. சென்னியப்பன், நல்லம்மாள். தொல்லியலாளராகவும் பேராசிரியராகவும் பணியாற்றினார். கல்வெட்டறிஞர் என அறியப்படுகிறார். நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். தமிழ்நாடு அரசின் சிறந்த நூலாசிரியர் விருதையும் உ.வே.சா விருதையும் பெற்ற இவர் 2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 அன்று மறைந்தார்.

### செயல்பாடுகள்

- பின்வரும் சொற்களை அகரவரிசைப்படுத்தி பொருள் எழுதுங்கள்.
  கழனி, துலை, கன்னல், பூரணம், தவசம், சிசு
- மழைக்காலத்தின் பாதிப்புகள் பற்றி 'பெருவெள்ளச்சிந்து' என்னும் கவிதையில் படித்தீர்கள் அல்லவா? மழையின் காரணமாக உங்கள் பகுதியில் ஏற்பட்ட விளைவுகள் பற்றி அயலூரில் வசிக்கும் உன் நண்பன்/தோழிக்குக் கடிதம் எழுதுங்கள்.
- பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள பெருவெள்ளப் பாதிப்புகளைப் பட்டியலிடுங்கள்.
- சிறிய மழை பெய்தால் கூட பெருநகரங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. அதற்கான காரணங்களைக் கலந்துரையாடி தீர்வுகளையும் சுட்டி பத்திரிகைக்குத் தலையங்கம் தயாரியுங்கள்.

## குழந்தைகள் பெண்கள் ஆண்கள்

மழை சோவென்று கொட்டத் தொடங்கியது. காயலின் நடுவே பின்னிரவில் வானம் பொத்துக்கொண்டிருக்க வேண்டும். அதிகாலையில் மழை கரையேறி வரத் தொடங்கிற்று. போட் ஜெட்டியிலும் திருநக்கரையிலும் கோவிலிலும் கம்பி மைதானத்திலும் நாட்டகம் குன்றிலும் முதலில் மந்தமாகத்தான் மழை தொடங்கிற்று என்றாலும் சிறிது சலசலத்துவிட்டு ரோஷம் வந்ததுபோல அடித்துப் பெய்யத் தொடங்கியது.

போட் ஜெட்டியின் எதிரே கோடவுண். ஓடு வேய்ந்த பழைய கட்டடம். சிலந்தி வலை ஞாபகத்திற்கு வரும் நிலைப்படியில் ரமணியும் பாலுவும் நின்றுகொண்டிருந்தார்கள். அதிசயத்தில் இருவர் கண்ணிமைகளும் காயலைப் பார்க்க விரிந்துவிட்டன. காயலுக்குத் தெற்கே அடர்த்தியாகத் தெரியும் தென்னந்தோப்பிலிருந்துதான் மழை இருள் கவியத் தொடங்கி

யது. மத்தியான வேளையா இது? சீராகப் படியும் இந்தக் கருமையைக்கூடப் பொறுத்துக் கொண்டு விடலாம். ஆனால் அடர்ந்த தென்னந் தோப்புக்குள் தெரியும் இருள் மனதை என்னவோ செய்கிறது.

காற்று மழையை விரட்டப் பார்க்கிறது. உடலை வளைத்துச் சாய்ந்து கொடுத்து மல்லுக்கு நிற்கிறது மழை. அதன் உக்கிரம் சிறிது கூடத் தணியவில்லை. அது காயலைத் தாக்கும் இடங்களில் எல்லாம் கண்ணாடிப் பூக்கள் மலர்கின்றன. நொடியில் தோன்றி நொடியில் மறையும் அந்தக் கண்ணாடி பூக்களை எவ்வளவு நேரம் வேண்டுமென்றாலும் பார்த்துக் கொண்டிருக்கலாம். ஒன்று மறையும்போது மற்றொன்று, அங்குமிங்கும் பளிச் பளிச்சென்று மாறி மாறி.

பாலு, ரமணியின் முகத்தைப் பார்த்தான். தான் பார்க்காத எதையாவது ரமணி பார்க்கிறாளா என்று பார்த்தான். அவள் கவனிக்காத ஒன்றைப் புதிதாகக் கண்டுபிடித்து அவளிடம் சொல்ல வேண்டும் என்று அவனுக்குத் துடித்தது. கண்களை மேலும் கூர்மைப்படுத்திக் கொண்டான். கோடவுன் முன் தேங்கும் செம்மண் குழம்பு கரைந்த தண்ணீர் காயலுக்குள் பாய்கிறது. போட் ஜெட்டி விளிம்பு முழுக்கச் சிற்றருவிகள். காலை இழுத்துப் போட்டு நடந்து போகிறவர்கள் சகதியை மேலும் கலக்குகிறார்கள். பாலுவின் பார்வை அசப்பில் நிலைப்படி முன் படிந்தது. என்ன இது! அடேயப்பா எவ்வளவு தவளைகள், பச்சைக் கண்ணாடியில் வார்த்தது மாதிரி ஒவ்வொன்றும் கொழு கொழுவென்றிருக்கிறது. குஞ்சுகளும் குளுவான களும் கும்மாளம் அடிக்கின்றன. கோடவுண் சுவர்மீது உயரும் நீர் புதிய சுண்ணாம்புப் பூச்சை நீலம்பாரிக்கச் செய்கிறது. கூரையின் தகர மடைப் பொத்தல் வழியாகச் சிற்றருவி கொட்டுகிறது. நீர்க் குமிழிகள் சுவரைப் பார்க்க வழுக்கியபடி வருகின்றன.



சிறிதும் பெரிதுமாக வரும் குமிழிகள் சுவரைத் தொட்டதும் உடைகின்றன. குமிழிக்குள் சுழலும் வானவில் உடைவதைக் கவனித்தபோது வானத்தைப் பார்த்தான் பாலு. அழகான வானவில் ஒரு நொடிக்குள் வானத்தை வளைத்துக் கட்டிக்கொண்டிருக்கிறது. தென்னந்தோப்பிலிருந்து வெளிப்பட்டு ஆகாயத்தின் விளிம்பில் காயலைத் தொடுகிறது.

அசட்டு ரமணிக்குத் தவளைகள் வந்திருப்பதே தெரியாது.

"இதோ பாரு ரமணி!" என்று கத்தினான் பாலு. தவளைகள் நீரிலிருந்து நிலைப்படி மேல் குதிக்கின்றன. என்ன தைரியம்! கோடவுண் என்ற பிரக்ஞையே இல்லை. ரமணி பயந்து பின்னால் நகர்ந்தாள். பாலுவும் பின்னால் போனான். ஒன்றன் பின் ஒன்றாகத் தவளைகள் குதித்த வண்ணம் இருக்கின்றன. குதிக்கும் சிறு தவளைகள் படி நுனியில் வழுக்கித் தண்ணீரில் விழுந்து மீண்டும் குதிக்கின்றன. 'சூரியன்! சூரியன்!' என்று கத்தினாள் ரமணி. கோடவுணின் உள்ளே பார்க்க ஓடினாள்

காற்று மழையைச் சுருட்டியெடுத்து அடி வானத்துக்குக் கொண்டு போகிறது. கொடியிலிருந்து நழுவிவிட்ட வெளிர்நீலப் புடவைபோல் நெளிந்தோடுகிறது. எங்கும் ஈரம். ஊருக்குள் மழையைப் பின் தொடர்ந்து போக முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். பாலு நிலைப்படியை ஒட்டி தைரியமாக நின்றுகொண்டிருந்தான். அவனுக்கொன்றும் பயமில்லை. தவளைகளிடம் 'வாடா ராஜா' என்று ரமணி கூப்பிடுவதை அவன் காதில் விழுந்த மாதிரியே காட்டிக்கொள்ளவில்லை. மழையைக் கவனித்தபோது நிமிஷத்துக்கு நிமிஷம் அது தன் யுத்தியை மாற்றிக் கொள்வதுபோல் அவனுக்குத் தோன்றிற்று. ஒளியுடனும் காற்றுடனும் மழை கொண்டிருக்கும் உறவில் எவ்வளவோ ஜாலங்கள் இருக்கின்றன. மேட்டுப்பாங்கான சாலையைத் தாக்கியபடி காற்றில் தொற்றி ஏறி அது ஊருக்குள் ஓடுகிறது. சாலையின் இரு ஓரச் சாக்கடைகளிலும் செம்மண் குழம்பு சுழித்து ஓடுகிறது. நுரை சிரிக்கிறது. குப்பைக் காகிதங்களும் வைக்கோல் துரும்புகளும் மஞ்சள் பலா இலைகளும் கோமாளித்தனமாகத் தலைதெறிக்க ஓடுகின்றன. கடைப் படிகளைச் சாலையுடன் இணைக்கும் சாக்கடைப் பாலங்களின் அடியே தண்ணீர் மறைந்து மறுபக்கம் வெளிப்படும்போது அச்சிறிய இடைவெளியிலேயே மிதக்கும் குப்பைகள் தங்கள் கோலங்களை மாற்றிக்கொண்டு விடுகின்றன.

குடிசைகளிலிருந்து சிறுவர்கள் வெளியே குதிக்கிறார்கள். எவ்வளவு நேரம்தான் அவர்களால் மழையைச் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியும்! இதற்குமுன் மழை கொட்டிய நாட்களில் புரிந்த சாகசங்கள் அவர்கள் நினைவுகளில் விரிந்தன. பெரியவர்கள் தம் சிறுவயது மழை சாகசங்களைப் பற்றிச் சொல்லியிருந்தவை சுலபத்தில் மறக்கக் கூடியவையா என்ன? வெற்றுடம்புடனும், கிழிந்த அரை நிஜாருடனும் அழுக்குச் சட்டையுடனும் கத்தலும் கும்மாளமுமாக அவர்கள் வெளியே குதிக்கிறார்கள். ஈரத்திலும் சகதியிலும் கட்டிப் பிடித்து உருளுகிறார்கள்

கரணம் போடுகிறார்கள். ஒருவரையொருவர் முரட்டுத்தனமாகப் பிடித்துத் தள்ளிக்கொள்கிறார்கள். தண்ணீரையும் சேற்றையும் அள்ளி வீசுகிறார்கள். மழையின் சுதந்திரமும் அதன் சுதந்திரத்தை முடுக்கும் பேய்க்காற்றும் அபூர்வமான இணைப்பு இது.

– சுந்தர இராமசாமி

**ஆசிரியர் குறிப்பு :** நவீனத் தமிழ் இலக்கியத்தின் மிகச் சிறந்த எழுத்தாளர். பசுவய்யா என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதினார். ஒரு புளிய மரத்தின் கதை, ஜே.ஜே சில குறிப்புகள், குழந்தைகள் பெண்கள் ஆண்கள் போன்ற புதினங்களையும் மதிப்பீடுகள், ஆளுமைகள், காற்றில் கரைந்த பேரோசை போன்ற கட்டுரை தொகுப்புகளையும் எழுதியுள்ளார்.

**செயல்பாடுகள்**

- சுந்தரராமசாமியின் மழைக்கால வருணனையைப் படித்தீர்கள் அல்லவா? நீங்கள் புரிந்துகொண்ட விஷயங்களைச் சிறு குறிப்பாக எழுதுங்கள்.
- நீங்கள் ரசித்த மழைக்காட்சி குறித்து கவிதை எழுதுங்கள்.
- பாடப்பகுதியில் இடம் பெறும் இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடர் சொற்களை எடுத்து எழுதிப் பொருத்தமான வாக்கியங்களை உருவாக்குங்கள்.

## மகிழ்ச்சியின் எல்லை

பண்டைக்காலத்தில் மக்கள் எல்லாரும் இன்பமாய் வாழக் காரணமாக இருந்தது மழையே. மழை வளம் சுருங்கின் துன்பம் பெருகுதலும், மழைவளம் பெருகின் இன்பம் பெருகுதலும் அக்காலத்து இயல்பு. அதனாலேயே, திருவள்ளுவர் வான்சிறப்பில் மழையைப் போற்றினார். ஆனால் இக்காலத்தில் மழைவளம் குன்றாது விளைவு பெருகியபோதும் உப்பில்லாக் கஞ்சி உண்டு உயிர்வாழும் வறியவர்கள் மிகுந்துள்ளனர். இதன் காரணம் என்ன? இயற்கை நல்கும் மழைவளத்தினையும் சிலரே பயன்படுத்திக் கொண்டு பலரை வருத்துவதே ஆகும்.

ஒருவர் உற்ற பெருமகிழ்ச்சியைக் கூற விரும்பும்போது, 'புதையல் பெற்றது போல் மகிழ்ந்தேன்' என்பது உண்டு. வெள்ளிக்காசும் பொற்காசும் நாடி மக்கள் அலையும் காலம் இது. அந்தக் காசு இல்லையானால் மழையாலும் பயன்காண முடியாதவாறு உலகம் இப்போது அமைந்துள்ளது. ஆதலின், எதிர்பாராது திடீரெனக் கிடைக்கும் பெருநிதி–

புதையல் அளவற்ற மகிழ்ச்சி தருவதாக கருதி உவமையாகக் கூறுகின்றனர். பழந்தமிழ் நாட்டில் பண்டமாற்று நிலவியது. அக்காலத்தார் விளைபொருள் வளத்தையே போற்றினர். விளைபொருள் பெருக உதவும் மழை வளமே, அவர்களின் போற்றுதலுக்கு உரியதாக இருந்தது. நெடுங்காலம் மழையே இல்லாமல் பஞ்சம் பரவிப் பட்டினி பெருகிய காலத்திலும் அவர்கள் வேண்டியதெல்லாம் மழையே. துன்பம் அடியோடு தொலையுமாறு பெய்த பெருமழையைக் கண்டு களித்துக் கூத்தாடுதல் அவர்களுக்கு இயல்பு. அந்த மழையே அவர்களுக்குப் பேரின்பம்.

ஒரு நாடு நெடுங்காலம் மழை இல்லாமல் வாடி வறண்டு போயிற்று. உழவர்களின் வீடுகளில் கலப்பைகள் எடுப்பார் இல்லாமல் உறங்கிக் கிடந்தன. மழைக்குக் காலமே இல்லாமல், எல்லாம் கோடைக் காலமாகவே மாறிவிட்டது. தரையில் பசுமை என்பதே இல்லாது போய்விட்டது. பெரிய ஏரிகள் வற்றாத நீர்நிலைகளாய்ப் பல காணி நன்செய் நிலத்திற்குப் பயன்பட்டு வந்திருந்தன. அந்த ஏரிகளும் நீர் வற்றி வறண்டன. அவற்றின் கரைகள் குன்றுகள்போல் காட்சி அளித்தன. மீனும் பிறவும் தேடிப் பறவைகள் அவற்றினிடம் வருதல் ஒழிந்தது. ஏரிகளினுள்ளே கதிரவன் வெம்மை தவிர வேறு ஒன்றும் இல்லையாயிற்று. ஆனால், திடீரென ஒரு நாள் நள்ளிரவில் பெருமழை பொழிந்தது; பொழிந்துவிட்டது. விடியற்காலையில் மக்கள் எழுந்தபோது கண்ட இடமெல்லாம் வெள்ளக்காடாய்க் கண்டனர். ஏரிகள் எல்லாம் நீர் நிறைந்து பொலிவாக விளங்கின. அப்போது அந்த மக்கள் உற்ற உவகையினை இவ்வளவு என்று எடுத்துரைக்க முடியுமோ? மகிழ்ச்சியின் எல்லையில் நின்று இன்பக் கூத்து ஆடியிருப்பார்கள் அல்லரோ?



இந்தப் பெருமகிழ்ச்சி எல்லாரும் நன்கு உணரவல்லது. கபிலர் என்னும் புலவர் இதனை உவமையாக ஒரு பாட்டில் அமைத்தார்.

ஒரு திருமணம் நிறைவேற வேண்டும் என்று நெடுநாளாகப் பெரு முயற்சி செய்யப்பட்டு வந்தது. பல இடர்ப் பாடுகளுக்கும் இடையே விடாமுயற்சி செய்து பெருங்கவலை கொண்டிருந்தவள் ஒருத்தி. அவள்தான் மணமகளுக்கு

உயிர்த் துணையாக இருந்து உதவிவந்த தோழி. பல நாள் கொண்ட கவலையெல்லாம் ஒருநாள் தீர்ந்தது. மணமகன் வீட்டார் பெண் கேட்க வந்தனர்; நாள் குறித்தனர்; திருமண ஏற்பாடு செய்தனர். அப்போது அளவு காணா மகிழ்ச்சி அடைந்தவள் அந்தத் தோழியே. அவள் தன் மகிழ்ச்சியைத் தன்னுள் வைத்திருக்க முடியாமல் பொங்கிக் களித்தாள். மணமகளிடம் சென்றாள்; தன் களிப்பை எடுத்துரைத்தாள்:–

"தோழி ! யான் பெற்ற பெருமகிழ்ச்சியை என்ன என்று சொல்வேன்? நாடெல்லாம் பசுமையற்று வறண்ட அந்தக் காலத்தில், ஏரியெல்லாம் நீரற்றுக் கிடந்த அந்த நாளில், அன்று ஓர் இரவு பெய்த பெருமழை நினைவு இருக்கிறதா? அன்று விடியற்காலையில் நம் ஊரார் எல்லாரும் ஒரே ஆரவாரமாக மகிழ்ந்து துள்ளினார்கள் அல்லரோ? அவர்கள் எல்லோருடைய மனமகிழ்ச்சியும் ஒன்றாகத் திரண்டு என் ஒரு மனத்தில் குடிகொண்டது போல் இருக்கின்றது" என்றாள்.

நாடுவறங் கூர
        நாஞ்சில் துஞ்சக்
கோடை நீடிய
        பைது அறு காலைக்
குன்று கண் டன்ன
        கோட்ட யாவையும்
சென்றுசேக் கல்லாப்
        புள்ள உள்இல்
என்றூழ் வியன்குளம்
        நிறைய வீசிப்
பெரும்பெயல் பொழிந்த
        ஏம வைகறைப்
பல்லோர் உவந்த
        உவகை எல்லாம்
என்னுள் பெய்தந் தற்றே.

– மு. வரதராசன்

**ஆசிரியர் குறிப்பு :** மு.வ. எனச் சுருக்கமாக அழைக்கப்பட்ட இவர் 25.04.1912 அன்று திருவேங்கடம் என்ற ஊரில் பிறந்தவர். தமிழ்ப்புலமை மிக்க இவர் பேராசிரியரா கவும் எழுத்தாளராகவும் விளங்கினார். பல ஆய்வுக் கட்டுரைகளையும் புதினங்களையும் படைத்துள்ளார். இவர் எழுதிய பெற்றமனம் என்ற கதை திரைப்படமாக்கப்பட்டது. அகல் விளக்கு என்ற புதினத்திற்காகச் சாகித்ய அகாதமி விருதினைப் பெற்றார்.

## செயல்பாடுகள்

- டாக்டர். மு.வ. வின் மழைக்காலம் பற்றிய 'மகிழ்ச்சியின் எல்லை' என்னும் கட்டுரையைப் படித்தீர்கள் அல்லவா? மழைபற்றிய இன்னொரு வருணனைக் கட்டுரையை எழுதவும்.
- "மழை பெய்தும் கெடுக்கும், பெய்யாமலும் கெடுக்கும்" – இக்கூற்றின் அடிப்படையில் சிறுகுறிப்பு எழுதுங்கள்.
- 'மகிழ்ச்சியின் எல்லை' என ஆசிரியர் குறிப்பிடுவது எதை? ஏன் என்பதை ஆராய்ந்து இத்தலைப்பில் ஒரு கதை எழுதுங்கள்.



# பருவச் சுழற்சி



## முளைத்தானியம்

மேட்டுக்காட்டில் சாமை போடனும் ஈரமிருக்கா!
கேட்டுகிட்டே போகிறார்
பெரிய மிராசுதாரர்
மண்ணுக்கு ஈரமிருக்கு
மனுசனுக்குத்தான் ஈரமில்லை
வெதைக்கச் சாமையில்ல
கடையில கடன் கேட்டா
வெய்யிலா சுடுகிறார்
பொஞ்சாதி நகையை
அடமானம் வைக்கப் போனா
அங்கயும் காக்க வச்சு
கடமையைச் செய்யூறாங்க
பணத்தை வாங்கிட்டுக்
கடைக்குப் போனா
கடமை தவறாமல்
கடையை மூடிட்டார்
மழைபேஞ்சு வெடியால
உழவோட்ட எருதுகளும் இல்ல
வாடகைக்கு ஏரோட்ட

கருப்பண்ணன் வர்ரதுக்குள்ள ஈரத்தை நிலம் உறிஞ்சு காஞ்சும்
போச்சு
சாமை வந்து வீடு சேருவதற்குள்
காடும் காஞ்சு போச்சு
ஒண்ணு பேஞ்சு கெடுக்கும்
இல்லனா காஞ்சு கெடுக்கும்
குடியானவன் பொழப்பே இப்படித்தான்

– கோவை சசிகுமார்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் விவசாய குடும்பத்தைச் சார்ந்தவர். இலையுதிர் நிறுவனங்கள், முளைத் தானியம் போன்றவை இவரது படைப்புகள். இக்கவிதை முளைத்தானியம் என்னும் கவிதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.

### செயல்பாடுகள்

- காலநிலை மாற்றத்தால் விவசாயிகளுக்கு ஏற்படும் இன்னல்களைக் கலந்துரையாடிக் குறிப்பு தயாரியுங்கள்.
- மழை பற்றிய பழமொழி, விடுகதைகளைத் திரட்டி வெளியிடுங்கள்.
- 'மண்ணுக்கு ஈரம் இருக்கு
  மனுசனுக்குத்தான் ஈரம் இல்லை' – எனும் வரிகளை விமர்சனம் செய்து எழுதுங்கள்.

## காலநிலை மாற்றம்

காலநிலை மாற்றம் என்பது புவி வெப்பமயமாதலுடன் தொடர்புடையது. இப்போது இருக்கும் புவியின் மேற்பரப்பு வெப்பமானது தொடர்ந்து மாற்றதிற்குள்ளாகி வருவதாகப் புவியியலாளர்கள், அறிவியலாளர்கள் எச்சரித்து வருகின்றனர். புவியின் மேற்பரப்பு வெப்பம் தொடர்ந்து அதிகரிக்கும்போது புவிச்சூழலில் பெரிதும் மாற்றங்கள் நிகழ்கின்றன. புவிச்சூழல் மாற்றம் என்பது புவிச்சூழல் மாற்றம் மட்டுமேயன்று. அது புவிச்சூழலின் பகுதியான மனிதர்களையும், பிற உயிரினங்களையும் பாதிக்கக்கூடியது. உருக்குலைக்கக்கூடியது. வாழ்வையே கேள்விக்குள்ளாக்கி விடுவது.

புவி வெப்பமாவதன் விளைவே காலநிலை மாற்றம் எனப்படுகிறது. வெப்ப மாற்றம் காலநிலை மாற்றத்திற்குக் காரணமாகிறது. வெப்ப உயர்வு காலத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே, வெப்பப் பராமரிப்பே காலநிலை மாற்றத்தைத் தடுக்கும் ஒரே வழியாகும்.

புவி வெப்பமாகும்போது வெப்பம் தொடர்பான நோய்கள் பரவும். டெங்கு, மலேரியா, சிக்கன் குனியா ஏன் கொரோனா போன்ற கொள்ளைப் பெருந்தொற்றுகளுக்கும் மேற்குறித்த நிகழ்வு காரணமாக அமைகிறது.



காலநிலை மாற்றம் புவியின் பருவக் காலங்களில் கடும் வினைபுரிகிறது. இது பயிர் செய்கைப் போன்ற நீராதாரத் தொழில்களில் கடும் பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்துகிறது. பருவமழை பொய்த்தல், காலம் மாறிப் பெய்தல் அல்லது பொய்த்தல், மூன்று திங்களில் பெய்ய வேண்டிய மழை மூன்று மணிநேரத்தில் பெய்தல் போன்று இயற்கைக்கு மாறாக இருப்பவை காலநிலை மாற்றத்தின் துல்லியமான அடையாளங்களாகும்.

இருப்பது ஒரு புவி மட்டுமே. இப்பிரபஞ்ச வெளியில் மனிதனுக்கு வேறு போக்கிடம் கிடையாது. ஒரு கண்ணாடிக் குடுவையைப் போலக் கைதவறாது புவியைக் கையாள வேண்டிய கட்டாயம் நேர்ந்து கொண்டிருக்கிறது. புவியின் சுற்று வேகம் தற்போது குறைந்து வருவதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர். இதற்குக் காரணம், காலநிலை மாற்றமே. புவிச்சுற்றின் 24 மணி நேரத்தில் மட்டுமன்று புவியின் பகுதியான மனிதன் உள்ளிட்ட உயிரினங்களிலும் கூட அது மாற்றங்களை நிகழ்த்த இருக்கிறது.

கேரளாவின் மேற்குத் தொடர்ச்சி மலையில் வரலாறு காணாத மழையால் வயநாடு மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவின் காரணமாக 700 பேர் சிக்கிக் கொண்டனர் 350க்கும் மேற்பட்டோர் பலியான நிலையில் பலரையும் காணவில்லை. கேரளாவினைத் தொடர்ந்து கர்நாடகாவிலும் நிலச்சரிவு ஏற்பட்டிருக்கிறது. காலநிலை மாற்றத்தின் காரணமாக இனிச் சாதாரண பருவ மழையையோ அல்லது கோடைப் பருவத்தினையோக் காண இயலாது. தற்போது பசிபிக் கடலில் நிலவும் எல்நினோ (வெப்ப நீரோட்ட மாற்றம்) அவற்றை மேலும் அதிகரிக்கச் செய்யக்கூடும் என்று அறிவியலாளர்கள் எச்சரிக்கின்றனர். மேற்குத் தொடர்ச்சி மலையின் பல பகுதிகளில் நிலச்சரிவை எதிர்பார்க்கலாம் என்கின்றனர் சூழலியலாளர்கள். புவியின் காலநிலை மாற்றம் இனிப் பேரிடராகவே முடியக்கூடும் என்கிறது இயற்கை.

இயற்கையை மனிதனின் பகுதியாகப் பார்க்கும் ஒரு கொள்கையும், மனிதர்கள் சம அளவில் அதனுடன் சேர்ந்தியங்கும் பண்பாடும் புவியின் நிலைத்த வாழ்விற்குப் பங்களிக்க முடியும்.

– இதழ்க் கட்டுரை

**ஆசிரியர் குறிப்பு :** இப்பாடப்பகுதியானது பேசும் புதிய சக்தி என்ற இலக்கிய இதழிலிருந்து எடுக்கப்பட்டது.

**செயல்பாடுகள்**

- இன்றைய காலகட்டத்தில் இயற்கைப் பேரிடர்கள் ஏராளமாக ஏற்படுகின்றன. இதிலிருந்து பாதுகாப்பதற்கான வழிமுறைகளை விளக்கி எழுதுங்கள்.
- புவி வெப்பமடைதலைத் தவிர்ப்பதற்கான கருத்துகளை வெளிப்படுத்தும் முறையில் துண்டுப்பிரசுரம் தயாரியுங்கள்.
- உங்கள் பள்ளியில் உலகச் சுற்றுச்சூழல் தினத்தன்று "காடுகள் பூமியின் நிழற்குடைகள்" எனும் தலைப்பில் நடைபெற உள்ள கருத்தரங்கிற்கான அறிவிப்பு தயார் செய்யுங்கள்.

## வெயிலும் மழையும்

"இந்த மழை நின்றுவிட்டால் நன்றாக இருக்கும்" என்றாள் புஷ்பம்.

"நானும் அதைத் தான் விரும்புகிறேன்" என்று அவளுடைய பேச்சை எதிரொலித்த மதுகரன், "இன்று எனக்கு வெளியில் நிறைய வேலை இருக்கிறது. இந்த மழை வந்து ஒரு வேலையும் செய்யவிடாமல் கெடுக்கிறதே! மகா மோசம்!" என்று முணுமுணுத்தான்.

"இப்பொழுது... நீங்கள் என்ன பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று தெளிவான குரல் ஒன்று அவர்களின் பின்னாலிருந்து வந்தது. "யாருக்கு இந்த மழை பிடிக்கவில்லை?"

"அத்தை, நான் தான் அப்படி சொன்னேன். ஒன்றும் செய்யாமல் கையைக் கட்டிக்கொண்டு வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடப்பது எங்களுக்கு அலுத்துவிட்டது" என்று மதுகரன் விளக்கம் கூறினான்.

"செய்வதற்கு ஒரு வேலையும் உங்களுக்கு இல்லையென்றால், சன்னல் பக்கம் வந்து உட்காருங்கள், ஒரு கதை சொல்லுகிறேன்" என்றாள் அத்தை.

"ஓ... பேஷாக! இதோ வந்துவிட்டோம்" என்று இருவரும் சேர்ந்து போய் அமர்ந்தனர்.

"இந்தக் கதை வெயிலையும் மழையையும் பற்றிய கதை" என்றவாறு, அத்தை கதையைத் தொடர்ந்து கூறினாள்:–

முன்னொரு காலத்தில் வெயிலைத் தரும் சூரியனும் நீர் பொழியும் மழையும் தங்களில் யார் உலகத்திற்கு அதிக நன்மை செய்கிறார்கள் என்பது பற்றி அடிக்கடி தங்களுக்குள் விவாதம் பண்ணிச் சண்டை செய்து வந்தன. "பூ" என்று அலட்சியமாகச் சிரித்தது சூரியன். "என்னுடைய சக்தியைப் பார்; நான் ஒவ்வொரு பொருளுக்கும் உயிர் அளிக்கிறேன். நான் இல்லையென்றால் எவரும் உயிர் வாழ முடியாது;

உலகத்திற்கு இதமான வெப்பம் தருகிறேன். அறுவடை காலத்தில் நெற் கதிர்களைப் பொற்கதிர்களைப்போல் ஆக்குகிறவன் நான். உலகம் முழுவதற்கும் ஒளி கொடுக்கிறவன் நான். நான் ஒருத்தன் இல்லை யென்றால் புல் பூண்டுகள், மரம், செடி, கொடிகள், அழகிய மலர்கள் இவை ஒன்றையும் காணவே முடியாது. என்னை எல்லோரும் நல்வரவு கூறி வரவேற்கிறார்கள். ஆனால், நீ வந்து எல்லாவற்றையும் நனைத்து அனைவருக்கும் வசதிக் குறைவை உண்டாக்குவதால், அவர்கள் உன்னைச் சிறிதும் மதிப்பது இல்லை; உன்னைக் கண்டதும் முணுமுணுக்கிறார்கள்" என்றது சூரியன்.

"ஹும், நான் மட்டும் இனி ஒரு சொட்டு தண்ணீர் வழங்குவதில்லை என்று தீர்மானம் பண்ணிவிட்டால், அப்புறம் என்ன நடக்கும் தெரியுமா? கொடுமை பயங்கரமாக இருக்கும். நீ விளைவிப்பதாகப் பெருமையடித்துக் கொள்ளும் புல் பூண்டுகள், மரம் செடி கொடிகள், மலர்கள் எல்லாம் வாடிக் காய்ந்து நாசமாகிவிடும். நான் இல்லாவிடில் இந்த உலகம் இல்லை. உலகத்து மக்களுக்கு உன்னைக்காட்டிலும் உடல் நலத்தையும் வசதியையும் அதிகமாகத் தருபவன் நான்தான். இருந்தாலும் உன்னைப் போல் நான் பெருமை அடித்துக்கொள்ளுவதில்லை." என்று கூறியது மழை.

"பெருமையா!" என்று சினத்தில் கொதித்துக் கொந்தளித்தது சூரியன். "நல்லது. முடிவற்ற இப்போராட்டத்திற்கு இன்று ஒரு முடிவு கட்டுவோம். சிறிய சோதனை ஒன்று நடத்தலாம். இருவரும் ஆளுக்கு மூன்று மாதங்கள் எடுத்துக்கொள்ளுவோம். மூன்று மாதங்கள் உன் கை வரிசையை அது நன்மையோ, தீமையோ நீ காட்டு. உலகம் எதை அதிகம் விரும்புகிறது என்று அப்பொழுது பார்க்கலாம்" என அறைகூவியது சூரியன்.



மழை இதற்கு ஒப்புக்கொண்டது. சூரியன் தன் திறமை முழுவதையும் காட்டி முடிக்கும் வரைக்கும் தான் சிறிது கூட உலகத்தில் தலைகாட்டப் போவதில்லை என்று உறுதியாகச் சொல்லிற்று. சூரியன் தன் ஆற்றலைக் காட்டலாயிற்று. முதலில் எல்லாரும் "கால நிலை மிக நன்றாக இதமாக இருக்கிறது" என்றனர். கொஞ்ச

நாளில் தோட்டங்கள் தண்ணீரில்லாமல் காய்ந்துவிட்டன. "சீக்கிரம் மழை பெய்தால்தான் நல்லது" என்று கூற ஆரம்பித்தனர். ஆனால், சூரியன் தன் முழு ஆற்றலையும் பயன்படுத்தி, உலகத்தை தகிக்கச் செய்தபோது அதற்கே திகைப்பு உண்டாகும்படி எல்லோரும் முணு முணுத்தார்கள். மலர்கள் வாடி வதங்கின; புல்லின் நிறம் மஞ்சளாக மாறிக் கருகிற்று. சிறு சிறு குளங்கள் வற்றி வறண்டன. ஆறுகளில் நீர் மட்டம் குறைந்து போயிற்று. உழவர்கள் நெற்கதிர்களைக் கவலையோடும் துயரத்தோடும் பார்த்தனர். சூரியன் இன்னும் நெருப்பைக் கொட்டிக்கொண்டே இருந்தது.

குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாமல் கிராமங்களில் தண்ணீர்க் கட்டுப்பாடு முறையைக் கைக்கொண்டார்கள். குறைந்த அளவு தண்ணீரே ஒவ்வொருவருக்கும் கிடைத்தது. களைப்பு ஒரு புறம், அதனால் குழந்தைகளின் தொண்டை வறண்டு போயிற்று. உதடுகள் உஷ்ணத்தால் வெடித்தன. உடல் கொதிப்படைந்தது. கடைசியாக ஒரு பெரிய விஷக்காய்ச்சல் வந்தது. அனேகருக்கு இந்தக் காய்ச்சல் கண்டது. மருத்துவர்கள் "அதிக உஷ்ணத்தின் விளைவு இது" என்றனர். "மழை இனி பெய்யாவிட்டால் பயிர்களெல்லாம் அழிந்துவிடும். தாகத்தாலும் பசியாலும் நாம் சாகத்தான் வேண்டும்" என்று கவலைப்பட்டனர் உழவர்கள்.

சூரியன் விழித்துக்கொண்டது; தன்னால் விளைந்த துன்பங்களைக் கண்டதும் அதற்கு அச்சம் உண்டாகிவிட்டது. உலகுக்குத் தீங்கு செய்ய வேண்டும் என்பது அல்ல அதன் நோக்கம். செய்துகொண்ட ஏற்பாட்டின் படி மழை வெகு தொலைவில் நின்றது; ஒரு சொட்டுக் கூடப் பெய்யவில்லை. சூரியன் இப்பொழுது அவசரம் அவசரமாக மழையினிடம் ஓடிற்று. தன்னால் துன்பப்படும் உலக மக்களுக்கு இரங்கும்படி மழையினிடம் கேட்டுக் கொண்டது. சூரியனை அவமானப்படுத்தும் வார்த்தைகள் ஒன்றும் கூறாமல், அமைதியாகச் சிரித்தது மழை. பிறகு அதுவரை வெண்மையாயிருந்த மேகங்களில் எங்கிருந்தோ கருமை நிறம் வந்து கூடிக்கொண்டது. இடி, மகிழ்ச்சி முரசு கொட்டியது. மின்னல் இருளில் சென்றவர்களுக்கு வழி காட்டும் ஒளி விளக்காகப் பிரகாசித்தது. குளிர்ந்த மழை ஓவென்ற இரைச்சலுடன் பூமிக்கு வந்து, அனைவரையும் இன்புறச் செய்தது. வறட்சி முடிவுற்றது; காய்ச்சல் ஓட்டம் பிடித்தது: பயிர்கள் தப்பிப் பிழைத்தன. மலர்கள் புதிய அழகுடன் மிளிர்ந்தன. புல் பசுமையாக மீண்டும் தலை நிமிர்ந்தது; சிற்றோடைகள் வரைந்த வெள்ளை நூற்கயிறுபோல் குமிழியிட்டுக்கொண்டு ஓடின.

சூரியன் மழைக்கு முன்னால் குற்றவாளியைப் போல் தலை கவிழ்ந்து நின்றது. "தவறு என் மீது தான்; உன்னைத் தான் உலகத்தில் அதிகமாக

விரும்புகிறார்கள்; என்னை அல்ல" என்று அது கூறியது.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை" என்று மறுத்த மழை, "உலகம் நம் இருவரையும் விரும்புகிறது. உன்னுடைய வெப்பமும் ஒளியும் இல்லாவிட்டால், என்னால் ஒரு நன்மையும் செய்ய முடியாது. நிலத்தைப் பண்படுத்தவும், பயிர்களைக் காப்பாற்றவும் என்னுடைய நீர்த்துளிகள் விழாவிட்டால், நீ ஒரு நன்மையையும் செய்ய முடியாது என்பதை உன்னால் விளைந்த துன்பங்கள் மூலம் தெரிந்து கொண்டாய். உலகம் நம் இருவரையும் விரும்புவதால், நாம் எதிர்காலத்தில் ஒற்றுமையாக வாழ்வோம்" என்று மொழிந்தது.

**ஆசிரியர் குறிப்பு :** இவர் தற்கால எழுத்தாளர்களில் ஒருவர். சிறுவருக்கான சிறந்த கதைகள் எழுதுவதில் கைத்தேர்ந்தவர். 'கதைக் களஞ்சியம்' என்ற பெயரில் பல கதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். அவற்றுள் நான்காம் கதைத் தொகுப்பிலிருந்து இக்கதை எடுக்கப்பட்டுள்ளது.

– எல்.ஜே. லார்சன்

## செயல்பாடுகள்

- சூரியனும் மழையும் பேசுவதை ஒருபக்க அளவில் உரையாடலாக எழுதுங்கள்.
- கதையின் மையக்கருத்தைக் கலந்துரையாடி குறிப்பு தயாரியுங்கள்.
- பூமிக்கு மழை மற்றும் வெயிலின் தேவையைக் குறித்து எழுதுங்கள்.
- வெயிலின் தாக்கத்தால் நீங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளை விளக்கி உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.



# அமைதி கொள்



## தேம்பாவணி

ஒண்ணுரைத் தெரி யுமிழ்ந்தவிர் இன மணி வரன்றித்
தெண்ணுரைத்து எழும் திரைத்திரள் வயின் தொறும் புகுந்து
வண்ணுரைத் ததிர் வதிந்து எலாம் சாய்த்து அவைகொடுபோய்ப்
புண்ணுரைத் தடக் கொள்ளை செய் பொருந்தலர் போன்றே

செறியுலாம் புனல் சிறைசெய்து பயன்பட ஒதுக்கி
வெறியுலாம் மலர்மிடைந்த வயல் வழி விடுவார்
பொறியுலாம் வழிபோக்கில் தியல் பட வடக்கி
நெறியுலாம் அற நேர் அவை நிறுத்தினர் போன்றே.

– வீரமாமுனிவர்

**ஆசிரியர் குறிப்பு :** கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்பது இவரது இயற்பெயர். தமிழ் நாட்டில் மறை பரப்ப வந்த இவர் தமிழ் மேல் கொண்ட பற்றினால் தம் பெயரை வீரமாமுனிவர் என்று மாற்றிக்கொண்டார். ஆங்கிலேயரான இவர் தமிழைக் கற்றுக்கொண்டு தமிழ் அகராதியைத் தயாரித்தார். பல இலக்கண, இலக்கியங்களையும் சிறுகதை நூல்களையும் வெளியிட்டு தமிழ் வளர்க்கத் துணைப் புரிந்தார். தமிழ் எழுத்துகளைச் சீரமைத்துத் தமிழுக்கு அரும்பெரும் தொண்டாற்றினார்.

### செயல்பாடுகள்

- பாடலின் மையக்கருத்தைச் சுட்டி நயம் பாராட்டி எழுதுங்கள்.
- யூதேய நாட்டு மக்கள் பெருவெள்ளத்தைத் தடுத்த தன்மையை விளக்கி எழுதுங்கள்.

## பேரிடரை எதிர்கொள்வோம்...

மனித இனம் அவ்வப்போது பேரிடரை (பேரழிவை) எதிர் கொண்டுதான் வாழ்ந்து வருகிறது. கடந்த இருபதாண்டுகளில் உலகெங்கும் நிகழ்ந்த பேரிடர்களில் சுமார் 13 லட்சம் பேர் இறந்துள்ளனர் என்றும், சுமார் 440 கோடி பேர் பலவிதமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் ஐ.நா.வின் பேரிடர்க் குறைப்பு மையத்தின் அறிக்கை கூறுகிறது. வளர்ச்சியடைந்த நாடுகளால்கூட பேரிடர்களிலிருந்து தப்பிக்க முடியவில்லை. 2011–இல் அணு விபத்து, பூகம்பம், சுனாமி என முப்பேரிடர்களை ஜப்பான் எதிர்கொண்டது. பேரிடர்களை எதிர்கொள்வதும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தவிர்ப்பதும்தான் இன்றைய உலகம் எதிர்கொண்டுள்ள சவால்.

கடந்த சில பத்தாண்டுகளில் மனிதனால் உருவாகும் பேரிடர்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. அறிவியல் வளர்ச்சி காரணமாக நிலம், நீர், நெருப்பு, காற்று மற்றும் வானம் ஆகியவற்றை வரம்பு முறையின்றி பயன்படுத்தத் தொடங்கிவிட்டோம். ஆதிக்கவெறியும் அதிகாரப் பசியும் நம்முள் தலைதூக்கியதன் விளைவாக, நொடியில் பல்லாயிரக் கணக்கானோரைப் பலி வாங்கும் நவீன அழிவு ஆயுதங்களினால் நடத்தப்படும் போர், கதிரியக்கப் பேரிடர், தீவிரவாத நிகழ்வுகள், தீ விபத்து, சாலை, கப்பல், விமான விபத்துகள், மின்சார விபத்துகள் போன்றவை பேரிழப்புகளை ஏற்படுத்தி வருகின்றன. ஒழுங்குவிதிகளுக்கு உட்படாத கட்டுமானப் பணிகளும், சுற்றுச் சூழலைக் கருத்தில் கொள்ளாமல் மேற்கொள்ளும் சுரங்கப்பணி, தொழிற்சாலைகள் போன்றவைகளும் பேரிடர்களுக்கு வழிவகுக்கின்றன. பெட்ரோலிய வளத்தைக் கண்மூடித்தனமாகச் சுரண்டுதலும் பருவநிலை சார்ந்த பேரிடர்களை ஏற்படுத்துகிறது. நாம் நினைத்தால் நம்மால் ஏற்படுத்தப்படும் இந்தப் பேரழிவுகளைக் கட்டுப்படுத்தலாம். ஆனால், இயற்கையால் ஏற்படும் பேரிடர்களை எதிர்கொள்வது பெரிய சவாலானது.



இயற்கைப் பேரழிவுகளை எதிர்கொள்ள நாம் என்ன செய்யலாம்.? கடலோரப் பகுதிகளில் சுற்றுலாத் தலங்கள் அமைப்பதற்காகவும், இறால் பண்ணை மற்றும் பல கட்டுமானப் பணிகளுக்காகவும் கடலோரத் தாவரங்கள் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகின்றன. 2004–ஆம் ஆண்டு சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புகள் மிக மோசமாக இருந்ததற்குக் கடலோரப் பகுதியிலிருந்த அலையாத்தி காடுகள் அழிக்கப்பட்டது முக்கிய காரணமாகும்.

கடலோரப்பகுதியில், கடற்தாவரங்கள் மற்றும் சவுக்கு மரங்களை வளர்ப்பதால் அவை கடலின் பேரலைகள் மற்றும் சூறாவளி போன்ற வற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்தும். சதுப்புநிலக் காடுகள் சுனாமியால் ஏற்படும் அழிவைக் கட்டுப்படுத்துவதோடு கடல்நீர் உட்புகுதலையும் தடுக்கும். கடலோரத்தில் வசிக்கும் மக்களை அழிவிலிருந்து காக்கும். நிலத்தடி நீரைத் தக்க வைத்து, நீர் மட்டத்தை அதிகரிக்கச் செய்யும். ஆனால், நாம் இவற்றில் கவனம் செலுத்துவதில்லை.

உயரமான இடங்களிலிருந்து மண், பாறைகள் போன்றவை திடீரென சரிதல் நிலச்சரிவு எனப்படுகிறது. மரம், செடி, கொடிகள் மற்றும் காடுகள் அழிக்கப்படும்போது இது நிகழ்கிறது. இவ்வகை அழிவைத் தடுக்க அதிக அளவில் மரங்களை நடுதலும் காடுகளை உருவாக்குதலும் அவசியம்.

இயற்கை, சிறிய நிகழ்வுகளின் மூலம் பெரிய விளைவுகளை ஏற்படுத்தும். நுகர்வுக் கலாச்சாரம் மேலோங்கியதன் விளைவாகப் புதைப்படிவ எரிபொருளைத் தொடர்ந்து எடுத்துப் பயன்படுத்தி புவிவெப்பமயமாதலுக்கு வழிவகுத்திருக்கிறோம். இது பருவநிலை மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதன் விளைவாகப் பேரிடர்களைச் சந்தித்து வருகிறோம். புவிவெப்பத்தைக் குறைக்க பெட்ரோல், நிலக்கரி போன்ற புதைப்படிவ எரிபொருள் பயன்பாட்டினைக் குறைக்க வேண்டும். வறட்சியையும் பெரும் வெள்ளத்தையும் எதிர்கொள்ள ஏரி, கண்மாய் போன்ற நீர்நிலைகளைப் பராமரித்துப் பாதுகாக்க வேண்டும். எனவே மழைக்கும் மண்ணுக்கும் ஏற்றவாறு விவசாய முறைகளை மாற்றியமைக்க வேண்டும்.

– ப. திருமலை

**ஆசிரியர் குறிப்பு :** இவர் 1953–ஆம் ஆண்டு விருதுநகர் மாவட்டத்தில் பிறந்தார். சிறந்த தமிழறிஞர், பேராசிரியர், திறனாய்வாளர், எழுத்தாளர், சொற்பொழிவாளர் என பன்முகத் திறமை கொண்டவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் தேர்வாணையராகவும் பணியாற்றியுள்ளார். 2012 முதல் 2015 வரை தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தராகப் பணியாற்றினார். நவீன இலக்கிய விமர்சன ஆய்வு உட்பட 26 நூல்களை எழுதியுள்ளார்.

**செயல்பாடுகள்**

- பேரிடர் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கலந்துரையாடிக் குறிப்பெழுதுங்கள்.
- பேரிடர் காலங்களில் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதம் ஒலிப்பெருக்கி அறிவிப்பு தயார் செய்யுங்கள்.
- மனிதச் செயல்பாடுகளும் பேரிடர் ஏற்படக் காரணமாகின்றன என்பதைப் புரிந்துகொண்டீர்களல்லவா அதைத் தவிர்க்கும் வழிமுறைகள் குறித்து விளக்கும் வகையில் 'மனிதச் செயல்பாடுகளும் பேரிடர்களும்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.
- பேரிடர் காலங்களில் பேரிடரை எதிர்கொள்வதற்கான பயிற்சி உங்கள் பகுதி மக்களுக்கு நல்க வேண்டிய தேவையுள்ளது. இதற்கான பயிற்சி முகாமை ஏற்பாடு செய்யக் கோரி மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பம் எழுதுங்கள்.

## வயநாடு பேரழிவும் பேரன்பும்

2024 செப் 30, அதிகாலை இரண்டு மணி:

கடவுளின் தேசம் என்று பெருமிதத்துடன் குறிப்பிடப்படும் கேரள மாநிலத்தில் இயற்கை எழில் கொஞ்சும் சுற்றுலாப் பிரியர்களின் மனம் கவர்ந்த வயநாடு மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகள் மிகப்பெரிய போழிவைச் சந்தித்தது. தமிழ் நாட்டின் ஊட்டி, கொடைக்கானல், நீலகிரி மலைப்பிரதேச சுற்றுலாத் தலங்கள் போன்று இயற்கையை ரசித்து ஓய்வெடுக்க சுற்றுலாப் பிரியர்களின் முதல் தேர்வாக அமையும் வயநாடு பேரிடரில் சிதைக்கப்பட்டு அலங்கோலமாகக் காட்சி தரும் சோகம் நிகழ்ந்துள்ளது.



இரவு முழுவதும் பெய்த கனமழை காரணமாக எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட நிலச்சரிவால் முண்டக்கை, சூரல்மலை எனும் இரண்டு கிராமத்தை முற்றிலும் நிர்மூலமாக்கி நூற்றுக்கணக்கான மனித உயிர்களைக் காவு வாங்கிய துயரம் ஒட்டுமொத்த கேரளாவையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த சில நாட்களாகவே அந்தப் பகுதிகளில் மழை பெய்து வந்தது. எல்லோரையும் போல முந்தைய தினம் இரவில் உண்டு உறங்கிய ஐநூறுக்கும் அதிகமான குடும்பங்கள். நள்ளிரவு முதல் பெய்த கனமழை வெள்ளத்தின் தீவிரம் உணராமல் தங்கள் வீடுகளிலேயே இருந்ததால் மலை மேலிருந்து அதிகாலையில் உருண்டு விழுந்த பாறாங்கற்கள் நசுக்கி வீடுகளோடு பரிதாபமாக மண்ணில் புதைந்தனர்.

எங்கு பார்த்தாலும் மரண ஓலமும், உற்றார் உறவினர்களை இழந்தவர்களின் கண்ணீர் கதறல்களும் மட்டுமே வெளிப்பட பேரிடரின் தீவிரத்தை உணர்ந்து மாவட்ட நிர்வாகம், பேரிடர் மீட்புப் படையினர் விரைந்து வந்து உதவுவதற்கு முன்பு அந்தப் பகுதி முழுவதும் வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டதுடன் சாலைப் போக்குவரத்து முற்றிலும் துண்டிக்கப்பட்டது. சேறும் சக்தியும் நிறைந்த பகுதிகளில் முன்னேறிச் செல்வது கூட மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பெரும் சவாலாக இருந்தது.

வயநாடு மலைப்பகுதியில் தோன்றி அமைதியாகப் பாயும் சாலியார் நதி வழக்கமான பாதையை விட்டு பேரிரைச்சலுடன் நாலாபுறங்களிலும் பாய்ந்து மக்களின் உயிரையும் உடமைகளையும் கொண்டு போனது. ரப்பர் தோட்டங்களும், தேயிலைத் தோட்டங்களும் நிறைந்து காணப்படும் வயநாடு மலைப்பகுதி, சாலியார் நதியின் சீற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் நிலச்சரிவு ஏற்பட்டு அடிவாரத்தில் அமைந்துள்ள கிராமங்களைச் சேறும் சகதியும் நிறைந்த மண்ணைக் கொண்டு மூழ்கடித்த கொடூரமான காட்சிகள் நம் நெஞ்சை உலுக்கி எடுக்கின்றன.



உயிருக்குப் போராடியவர்களை மீட்டு முதலுதவி சிகிச்சையளித்து சுகாதார மையங்களில் சேர்த்த மீட்புக் குழுவினர் மண்ணில் புதைந்த உடல்களை மீட்டு ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்தனர்.

பல நூறு குடும்பங்களின் எதிர்காலம் கண நேரத்தில் காணாமல் போன வயநாடு பேரழிவின் காட்சிகள் பார்ப்போர் கண்களைப் பனிக்க வைத்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மொத்த நபர்களும் மரணித்த வீடுகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், பெற்றோரை இழந்து அநாதையான குழந்தைகள் என்று எஞ்சிய அனைவரிடமும் ஒரு சோக வரலாறு மட்டுமே உள்ளது. ஜூலை மாதம் 29 –ஆம் தேதி வரை ஓரளவு வசதியான சூழலில் வாழ்ந்து பழகியவர்கள் மறுநாளே அனைத்தையும் இயற்கையின் தீராப் பசிக்கு இரையாகி நிவாரண முகாம்களில் நாள்களைக் கழிக்கும் பரிதாப நிலையை எண்ணி எண்ணி புலம்பும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இயற்கைப் பேரிடரிலிருந்து நாம் பாடம் பெற வேண்டும்

– இதழ்க்கட்டுரை

**ஆசிரியர் குறிப்பு :** இப்பாடப்பகுதியானது சமரசம் என்ற இலக்கிய இதழிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் 350 க்கும் மேற்பட்டோர் பலியான பரிதாபநிலை ஏற்பட்டது. இப்படிப்பட்ட பேரழிவுகள் ஏற்படாமலிருப்பதற்கான தடுப்புமுறைகள் என்னென்ன என்பதை வரிசைப்படுத்துங்கள்.
- வயநாடு பேரழிவிலிருந்து நாம் பெற்றுக்கொண்ட பாடம் என்ன? உங்கள் கருத்துகளைக் குறிப்பாக எழுதுங்கள்.
- தற்காலத்தில் ஆண்டுதோறும் இயற்கைப் பேரிடர்கள் ஏற்படுவது சாதாரணமாகிவிட்டது. இதற்கான காரணங்களை ஆராய்ந்து தீர்வையும் குறிப்பிட்டு பத்திரிகைக்குத் தலையங்கம் தயாரியுங்கள்.
- கேரளத்தில் அமைந்துள்ள நீர்த்தேக்கங்களைப் பற்றிய தரவுகளைத் திரட்டி ஒப்படைப்பு தயாரியுங்கள்.
- இயற்கைச் சீற்றம் ஏற்பட்ட இடங்களுக்குச் சென்று மீட்புப்பணியில் ஏற்பட்ட அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிய உங்கள் அனுபவங்களைக் குறிப்பாக எழுதுங்கள்.



## சொல்லகராதி

| | | |
|---|---|---|
| அகண்ட | – | பரந்த |
| அயலார் | – | அருகில் வசிப்பவர்கள் |
| ஆழி | – | கடல் |
| இடர் | – | துன்பம் |
| ஈதல் | – | கொடுத்தல் |
| உண்டி | – | உணவு |
| ஊதியம் | – | வருமானம் |
| ஊருணி | – | குடிக்கப் பயன்படும் நீர்நிலை |
| ஊழியம் | – | தொண்டு |
| எத்து | – | வஞ்சகம் |
| எந்தை | – | என் தந்தை |
| எழில் | – | அழகு |
| என்பு | – | எலும்பு |
| ஐயம் | – | சந்தேகம் |
| கடுக | – | விரைந்து |
| கவின் | – | அழகு |
| கழனி | – | வயல் |
| கழை | – | கரும்பு, மூங்கில் |
| களிறு | – | ஆண் யானை |
| கன்னல் | – | கரும்பு, இனிப்பு |
| கான் | – | காடு |
| குந்து | – | உட்காரு |
| குருதி | – | இரத்தம், உதிரம் |
| கூற்றம் | – | நாட்டின் பகுதி/ எமன் |
| கேளிர் | – | உறவினர் |
| சிசு | – | குழந்தை |
| சிந்தை | – | மனம்/ எண்ணம் |
| சுடர் | – | ஒளி |
| சேமம் | – | இன்பம், நல்வாழ்வு |
| தண்மை | – | குளிர்ச்சி |
| தவசம் | – | தானியம் |
| தறி | – | நெசவுப்பொறி |
| துலை | – | மடை |
| துலாம் | – | தராசு |
| தூரிகை | – | எழுதுகோல் |
| நங்கை | – | பெண் |
| நஞ்சை | – | நீர்வளம் நிறைந்த இடம் |
| நனி | – | அதிகம் (உரிச்சொல்) |
| நிலன் | – | பூமி |
| நுணுக்கம் | – | கூர்மை, கூரறிவு |
| நுந்தை | – | உன் தந்தை |
| பட்டணம் | – | நகரம் |
| பரிதி | – | சூரியன் |
| பார் | – | உலகம் |
| பாழ் | – | அழிவு |
| பிடி | – | பெண் யானை |
| பிணி | – | நோய் |
| புலமை | – | தேர்ந்த அறிவு |
| புள் | – | பறவை |
| புனல் | – | நீர் |
| பெயல் | – | மழை |
| பேதை | – | பெண் |
| பொழில் | – | சோலை, மழைக்காடு |
| மதுரம் | – | இனிப்பு |
| மழு | – | கோடாரி |
| மனையாள் | – | இல்லத்தரசி |
| மாரி | – | மழை |
| மானுடம் | – | மனிதர் |
| யாமம் | – | இரவு |
| வஞ்சனை | – | ஏமாற்றுவது |
| வண்ணம் | – | நிறம் |
| வண்மை | – | வலிமை |
| வல்லார் | – | வலிமையுடையவர் |
| வளை | – | துளை |
| விந்தை | – | வியப்பு |

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

**51 அ பிரிவுக்கூறு**

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**

ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,

கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்–34, தொலைபேசி : 0471–2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in

www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**

**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online **R. T. E Monitoring : www.nireekshana.org.in***